33°/29°

# உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

பக்கம் 24 | சுடர் 28 | கதிர் 143 | வள்ளுவர் ஆண்டு 2044 | சித்திரை 5, வியாழன் 18.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com



நடுங்க வைத்த அதிர்வு

# இலங்கையில் அல்-குவைதா



## அமெரிக்காவை தாக்குவதற்கும் இங்கிருந்து இரகசியத் திட்டம்

### அமெ. ஊடகங்கள் அதிர்ச்சித் தகவல்

வொஷிங்டன், ஏப்ரல் 18

அல்-குவைதா இயக்கத்தின் கிளை ஒன்று இலங்கையில் செயற்பட்டு வருவதாகவும் அந்தக் கிளை மூலம் அல்-குவைதாவின் நடவடிக்கைகள் இலங்கையில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க ஊடகங்கள் அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளன.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக அல்-குவைதா உறுப்பினர்கள் இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்குள் நுழைவதாகவும் அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையிலும், பங்களாதேஷிலும் உள்ள கிளைகளைப் பயன்படுத்தி அல்-குவைதா உறுப்பினர்கள் அமெரிக்காவுக்குள் நுழைந்துள்ளனர் எனவும் அவை கூறியுள்ளன.

வொஷிங்டனில் இயங்கிவரும் சுதந்திர செய்தி வலையமைப்பான டபிள்யூ. என்.டி. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், பொஸ்ரனில் கடந்த செவ்வாய்க்கிழமை

பார்க்க பக்கம் 23

## வடக்குத் தேர்தலை நடத்த விடோம்

கொழும்பு,ஏப் 18

வடக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்த அரசு நடவடிக்கை எடுத்தால் அதனை எதிர்க்கப் போவதாக தேசிய சுதந்திர முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு நடவடிக்கை எடுத்தால் அதன் மூலம் நாட்டில் பாரதூரமான சிக்கல் நிலைமை ஏற்படும் என அந்தக் கட்சி

பார்க்க பக்கம் 23

## ஜனநாயகத் தோற்றத்தை களங்கப்படுத்தும் செயற்பாடு

### உதயன் மீதான தாக்குதல் குறித்து பத்திரிகை ஆசிரியர் பேரவை கண்டனம்



கொழும்பு, ஏப்.18

வடக்கு மாகாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களை இலங்கை பத்திரிகை ஆசிரியர் பேரவை மிகுந்த அதிர்ச்சியுடன் கவனத்தில் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சிங்கள - தமிழ் புதுவருடத்துக்கு முதல்நாளில் நடத்தப்பட்டுள்ள இந்த எரியூட்டலும் அச்சுறுத்தலும் 'உதயன்' மீது இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது தாக்குதல் என்றும் அது கூறியுள்ளது.

ஆசிரியர் பேரவை இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

பார்க்க பக்கம் 23

## ஐ.நாவில் விரைவில் தமிழீழக் கொடி

பழ.நெடுமாறன்

சென்னை,ஏப் 18

191 நாடுகள் உருவான பிறகு தமிழீழம் சாத்தியம் இல்லை என்று சொல்பவர்கள் இன்னும் சிறிது காலத்துக்குள் ஐ.நா சபை முன்றலில் விரைவில் தமிழீழக் கொடி பறப்பதைக் காண்பார்கள் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

சென்னையில் நடை

பார்க்க பக்கம் 23

## இரத்தினபுரியில் தமிழர்கள் மீது குண்டர்கள் நேற்றுத் தாக்குதல்

### அங்கு பெரும் பதற்ற நிலை

இரத்தினபுரி, ஏப்.18

இரத்தினபுரி மாவட்டத்தில் அறுபொல தோட்டத்திலுள்ள இந்தியத் தமிழர்கள் மீது பெரும்பான்மையின குண்டர்கள் வீடு புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். பதிலுக்குத் தமிழர்களும் தாக்கியதால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை காணப்படுகின்றது.

பெரும்பான்மையினக் குண்டர்களின் தாக்குதலில் இரு தமிழர்கள் காயமடைந்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் தொடர்ச்சியாக பெரும்பான்மையின குண்டர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். தமிழர்களை அடக்கும் நோக்கோடு பல தாக்குதல்கள் இடம்பெற்ற போதும் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்

பார்க்க பக்கம் 23

## சிறுவர் இல்லங்களில் ஆண்களுக்கு தடை

யாழ்ப்பாணம், ஏப்.18

பெண்கள், சிறுவர்களுடன் இயங்கும் இல்லங்கள், நிறுவனங்கள் எவற்றிலும் ஆண்களைப் பணிக்கு அமர்த்த முடியாது. இதனைச் சகல இல்லங்களும், நிறுவனங்களும் பின்பற்ற வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு ஒன்றை யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்றுப் பிறப்பித்துள்ளார்.

கைதடியில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் துஷ்பிரயோகம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்த இல்லத்தில் இருந்த 24 சிறுமியர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

யாழ்.மாவட்டத்தில் இவ்வாறான தொடர்ச்சியான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் அவற்றைத் தடுப்பதற்கு எவ்வாறான நடவடிக்

பார்க்க பக்கம் 23

## கைதடியில் நடந்தது என்ன?

யாழ்ப்பாணம், ஏப்.18

சிறுவர் இல்லத்தின் மேற்பார்வையாளர் தகாத முறையில் நடக்க முற்பட்டதை அடுத்தே இல்லத்தில் இருந்து தாம் வெளியேறியதாக கைதடி இல்லச் சிறுமிகள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தனர்.

நேற்றுமாலை கைதடி சிறுவர் இல்லத்தில்

பார்க்க பக்கம் 23

## பணப் பயிர் உற்பத்தி குடாநாட்டில் கடும் அழிவு



யாழ்ப்பாணம்,ஏப். 18

எதிர்பாராத வறட்சி மற்றும் மழைவீழ்ச்சியால் யாழ்.மாவட்டத்தில் புகையிலைச் செய்கை சுமார் 50 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று விவசாய திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.இராமநாதன் தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 23

## கொக்குத் தொடுவாய், நாயாறு பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணி படையினரிடம்

### சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதற்கு வசதியாக

யாழ்ப்பாணம், ஏப்.18

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய், நாயாறு பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றலில் ஈடுபட்ட எப்.எஸ்.டி (FSD) நிறுவனம் திடீரென முன்னறிவித்தல் எதுவுமின்றி தேசிய மிதிவெடிச் செயற்பாட்டு நிறுவனத்தால் வெளியேற்றப்பட்டு அந்தப் பிரதேசம் இராணுவக் கண்ணிவெடி அகற்றும் பிரிவிடம் ஒப்படைக்

பார்க்க பக்கம் 23

# புலிகளால் ஒருபோதும் மீண்டெழவே முடியாது

## இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்



கொழும்பு,ஏப் 18

முழுமையான இராணுவப் பலத்துடன் விடுதலைப் புலிகள் மீண்டெழுவதற்குச் சாத்தியமே இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் சாம்பலில் இருந்து புதிய போராளிக் குழு ஒன்று உருவாகக் கூடும் என்று 'எக்கொனமிஸ்ட் இன்ரெலிஜென்ஸ் யுனிட்' இதழ் வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பாகவே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இப்போது விடுதலைப் புலிகளின் மீண்டெழுகை சாத்தியமற்றது.உள்நாட்டில் கிளர்ச்சி செய்ய முனைவோருக்கு வெளிநாட்டுச் சக்திகளின் உதவிகள் கிடைத்தால்,

**விடுதலைப் புலிகளின் சாம்பலில் இருந்து புதிய போராளிக் குழு ஒன்று உருவாகக் கூடும்**

போராட்டக் குழுவான்று எழுச்சி பெறக் கூடும்.

இத்தகைய வெளிநாட்டு முயற்சிகளைத் தடுக்கப் பொருத்தமான வலையமைப்புகளை நாம் கொண்டிருக்கிறோம்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் இத்தகைய கிளர்ச்சிகளில் ஈடுபடுவார்கள் என்று இலங்கை இராணுவம் நம்பவில்லை.

அவர்களில் பெரும்பாலும் எல்லோரும் அமைதியான இலங்கையையே விரும்புகின்றனர். எனினும் வெளிநாட்டில் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் இன்னமும் உயிர்ப்புடன் உள்ளது என்று இராணுப்பேச்சாளர் கூறினார். (த)

# இலங்கை அரசின் கண் வெளிநாட்டவர்கள் மீது

கொழும்பு,ஏப் 18

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைத் தீவிரமாகக் கண்காணிப்பதற்கு இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு பொலிஸாரிடம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதன்படி, விடுதிகளில் தங்கும் வெளிநாட்டவர்களின், கடவுச்சீட்டு மற்றும் விஸாக் காலம் பற்றிய தகவல்களை உடனுக்குடன் பொலிஸ் நிலையங்களில் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

1866 ஆம் ஆண்டின் கட்டளைச்சட்டத்தின்படி பொலிஸ் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு முக்கியமானவர்கள் என்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே இந்த நடவடிக்கை என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும், வெளிநாடுகளைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இலங்கை நிலைமைகளை இரகசியமாகச் சென்று கண்காணிப்பதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (கு)

# வடக்கு - கிழக்குக்கு தனி ஆட்சி கிடையாது

## இந்தியக் குழுவிடம் கூறினார் கோத்தா

கொழும்பு,ஏப் 18

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தனியான ஆட்சிமுறை என்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்றக் குழுவிடமே அவர் இவ்வாறு கூறியுள்ளதாகக் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டிய, 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படாமை, வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் என்பன குறித்து இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்புச் செயலரிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்கு பாதுகாப்புச்செயலர் கோத்தாபாய ராஜபக்ஷ, 13 ஆவது திருத்தம் குறித்தோ, அதற்கு அப்பாற்பட்ட தீர்வு குறித்தோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அக்கறை கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ளார்.

புதிய பாதுகாப்புப் படைத் தங்குமிடங்கள் அமைக்கப்படுவது குறித்து, கருத்து வெளியிட்ட அவர், வடக்கில் அமைக்கப்படும் இத்தகைய தங்குமிடங்கள், இந்தியாவில் உள்ளவை போன்றதல்ல. வடக்கில் உள்ள எந்தவொரு படைத்தளத்திலும் படையினரின் குடும்பத்தினர் தங்க வைக்கப்படவில்லை. வடக்கிலுள்ள படைத்தளங்களுக்குச் சென்று இதனை இந்தியக் குழுவினர் நேரில் உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.(த)

# பஸ் கட்டண அதிகரிப்புக்கு கோரிக்கை

**மின் கட்டண அதிகரிப்புக்கு இணைந்ததாகப் புதிய பஸ் கட்டணம் தீர்மானிக்கப்பட வேண்டும்**

கொழும்பு,ஏப் 18

7 சதவீத பஸ் கட்டண அதிகரிப்பை நிராகரித்துள்ள தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், ஜூலை மாதம் 15 சதவீத அதிகரிப்பைக் கோரியுள்ளதாகத் தனியார் பஸ் உரிமையாளர் சங்க உத்தியோகஸ்தர் தெரிவித்தார்.

மின் கட்டண அதிகரிப்புக்கு இணைந்ததாகப் புதிய பஸ் கட்டணம் தீர்மானிக்கப்படவேண்டும் எனத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கச் செயலாளர் கீர்த்தி ஸ்ரீபந்துல கூறியுள்ளார். (த)

# உறுதிமொழிகளைப் புறக்கணித்தமையே சர்வதேசத்தின் அழுத்தத்துக்கு காரணம்

## அரசைச் சாடுகிறார் விக்கிரமபாகு

கொழும்பு,ஏப் 18

இலங்கை உலக நாடுகளிடம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதால் இன்று

அமெரிக்கா உட்பட பல உலக நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்துள்ளன என்று நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு பான்ஸ் பிளேஸில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் நிறைவடைந்து நாட்டில் ஜனநாயகம் நிலவுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் உள்ளடங்கியுள்ள எந்தப் பரிந்துரையையும் அரசு இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை.

இந்நிலையில் அரசு கடந்த 4 வருடங்களாக நாட்டு மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றித்

தனது ஆட்சியைக் கொண்டு நடத்தியது. ஆனால் அதன் பிரதிபலிப்புக்கள் தற்போது ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளன. அதிலொன்று தான் அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிய உதவித் தொகையில் 20



வீதக் குறைப்பு.

ஏனைய உலக நாடுகளும் எமது நாட்டுக்கு எதிராக இவ்வாறு செயற் படுமேயானால் அரசு அல்ல நாட்டு மக்களே பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவர். ஆரம்பத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மை மக்களே இவ்வாறான சுமைகளைத் தாங்கினர். ஆனால் தற்போது சிங்கள மக்களும் இந்தச் சுமையை சுமக்க தள்ளப்பட்டுள்ளனர்- என்றார். (த)

# அமெரிக்காவுடன் இலங்கை லவ்வா? அல்லது இழவா?

## அரசிடம் கேட்கிறார் மனோ

கொழும்பு,ஏப்.18

அமெரிக்காவை எதிர்த்துக் கொண்டு, அவர்களை கணக்கில் எடுக்க மாட்டோம் என்று இலங்கை அமைச்சர்கள் வீரம் பேசுகின்றனர். மறுபுறம் அமெரிக்க அரசை கவர ஒரு நாளைக்கு 116 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவழிக்கின்றனர், மத்திய வங்கி ஆளுநரும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் விக்கிரம சூரியவும்.

மறுபுறம் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் இலங்கை தொடர்பில் காட்டமாகப் பேசியுள்ளார்.

உண்மையில் இலங்கை, அமெரிக்க அரசுக்கு இடையிலான உறவு என்ன? அது சண்டையா? சமாதானமா? லவ்வா ? இழவா? இதனை இலங்கை அரசும், அமெரிக்கத் தூதுவரும் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே.சிசன், இலங்கை அரசுக்கு முன்னாலுள்ள சர்வதேச கடப்பாடுகள் தொடர்பில் ஞாபகப்படுத்தியுள்ளார். இவற்றை இலங்கை அரசு செய்யாவிட்டால் ஆபத்து காத்திருக்கிறது என்று அமெரிக்கத் தூதுவர் மறைமுகமாகச் சொல்கின்றார். இதன் மூலம் இலங்கை அரசுக்கு பூச்சாண்டி காட்டுகிறாரா? அல்லது தமிழ் மக்களை நம்ப வைத்து கழுத்தறுக்கின்றாரா? என்பது விரைவில் தெரியவரும்.

ஐ.நா. தீர்மானத்தை ஏற்க மாட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் சொல்கின்றார். ஆனால் அமைச்சர் பீரிஸுக்குத் தெரியாமல் பெருந்தொகை செலவழித்து அமெரிக்க அரசைக் கவரும் நடவடிக்கைகளை, இலங்கையில் அமெரிக்காவை எதிர்த்து வீரம் பேசும் அரசு செய்கிறது.

அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவால் கப்ராலும், அமெரிக்க நிறுவனங்களுடன் பெருந்தொகையான டொலர் பெறுமதி கொண்ட ஒப்பந்தங்களைச் செய்துள்ளனர். - என்றார். (த-5)

# இலங்கையில் இன, மத வாதத்தை தூண்டுவோர் மீது நடவடிக்கை


## இஸ்லாமிய தலைவர்களுடனான சந்திப்பில் மஹிந்த

இனவாதத்தை தூண்டுபவர்கள் மற்றும் மத விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

15 இஸ்லாமிய நாடுகளின் இலங்கைக்கான இராஜதந்திரிகளை ஜனாதிபதி நேற்று அலரி மாளிகையில் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனவாதத்தைத் தூண்டுவது அல்லது மத விரோத நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பில் தகுந்த ஆதாரங்கள் இருந்தால் என்னிடம் சமர்ப்பியுங்கள். அவ்வாறான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த நான் உடனடியாக நடவடிக்கை எடுப்பேன் என ஜனாதிபதி உறுதியளித்தார்.



இந்தக் கலந்துரையாடலில் பங்களாதேஷ், ஈரான், ஈராக், எகிப்து, இந்தோனேஷியா, குவைத், மலேஷியா, மாலைதீவு, நைஜீரியா, பாகிஸ்தான், பாலஸ்தீனம், துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவூதி அரேபியா மற்றும் கட்டார் ஆகிய நாடுகளின் ராஜதந்திரிகள் கலந்து கொண்டனர்.

இலங்கை சார்பாக அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ரவூப் ஹக்கீம், அநுர பிரியதர்ஸன யாப்பா, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-16)

# 21 சிறுமிகள் மீண்டும் இல்லத்துக்கு

கைதடியிலுள்ள சிறுவர் இல்லத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்ட 24 சிறுமிகளில், 21 சிறுமிகளை மீளவும் இன்று வியாழக் கிழமை முதல் அதே சிறுவர் இல்லத்தில் தங்கவைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைதடி முதியோர் இல்லத்துக்கு அருகில் அமைந்துள்ள சிறுவர் இல்லமொன்றில் துஷ்பிரயோகம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கிருந்து 24 சிறுமிகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டிருந்தனர். அத்துடன் இல்லத்தின் நிர்வாக உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (த-5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பரமசிவன் கழுத்தில் உள்ள பாம்பு கருடனை பார்த்து கேள்வி கேட்ட நிலை...

இன, மத பேதங்களைத் தடுப்பதற்குச் சட்டம் இயற்றப்பட வேண்டும். எந்த இனத்தை அல்லது எந்த மதத்தை என்று மட்டும் வரையறை செய்து குறிப்பிடாது, நாட்டில் வாழும் எல்லா இனங்களுக்கும், மதங்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் சட்டம் இயற்றப்படுவது நாட்டுக்கு மிக அவசியம்.

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

எவராயினும் கருத்து வெளியிடும் போது, இனங்களுக்கு இடையில் பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் அல்லது மற்ற இனங்களைப் புண்படுத்தும் வகையில் அமைந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கான பிரேரணை ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் விரிவாக விளம்பி உள்ளார்.

நாட்டில் வாழும் சகல இன, மத குழுமங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை உண்டாக்குவதே உத்தேச சட்ட மூலத்தின் பிரதான இலக்கு என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய ஒரு சட்டம், தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், 1958 ஆம் ஆண்டில் இனக்கலவரம் உண்டாக்கப்பட்ட ஒரு சில வருடங்களிலாவது நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

இலங்கை பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக விளங்கிய வேளை 1915 ஆம் ஆண்டில் மூண்ட சிங்கள-முஸ்லிம் கலவரத்தைத் தவிர்த்துப் பார்த்தாலும் கூட, 1956 இன் சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்ட பின்னர் கூட இன, மத பேதங்களைத் தடுப்பதற்கான சட்டம் குறித்து ஆட்சிபீடத்தை மாறி மாறி அலங்கரித்த ஐ.தே.கட்சி மற்றும் ஸ்ரீ.ல.சு கட்சி அரசுகள் நினைத்தும் கூட பார்க்கவில்லை!

அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. இன , மத பேதங்களை பசளை இட்டுத் தண்ணீர் ஊற்றி வளர்த்தால்தான்,தாம் ஆட்சிபீடத்தில் ஏறி அதிகாரத்தை அனுபவிக்கலாம் என்ற குறுகிய நோக்கத்தையே தென்னிலங்கைச் சிங்கள அரசியல் வாதிகள் தங்கள் தாரக மந்திரமாகக் கொண்டிருந்தனர். இப்போதும் அது தொடர்கிறது என்பது தப்பன்று.

சிறுபான்மை இன மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் மற்றும் மனித உரிமைகளை மறுத்துப் பாகுபாடு காட்டுவதனை சிங்கள மக்களிடம் ஆழ உழுது ஊன்றி நட்டனர். தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சியினரே இது விடயத்தில் குற்றவாளிகள் என்பதனை வரலாறு, சரித்திரம் சொல்லும்.

இப்போது உசுப்பேற்றப்பட்டுள்ள பௌத்த-இஸ்லாமிய, சிங்கள-முஸ்லிம், இன,மத பேத சச்சரவுகளும் அரசியல் தலைவர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களால் உசுப்பி விடப்பட்டவையே.

இந்த நாட்டில் [தேசிய] நல்லிணக்கம் உருவாக்கப்பட வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் தீர்மானம் நிறைவேற்றிய நாடுகளுக்குச் சவால் விடும் பாங்கிலேயே, பொது பல சேனா [பௌத்த அதிகாரப் படை அணி] போன்ற மத, இனவாத அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. அவற்றுக்கு அரசின் அல்லது அரச சார்ந்த பெரும் புள்ளிகளின் மறைமுக ஆதரவு உள்ளதாகவும் அரசல் புரசலாகப் பேசப்படுகிறது;

இத்தகைய ஒரு பின்னணியில், மூத்த இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இன, மத பேதங்களைத் தூண்டி நாட்டில் சமூக நல்லுறவைக் குழிதோண்டிப் புதைக்கும் நடவடிக்கைகளை, நாச வேலைகளைத் தூண்டும் செயற்பாடுகளைத் தடுக்க முன்வந்துள்ளார்; அதற்கான திட்டம் ஒன்றையும் வகுத்துள்ளார்.

நாட்டின் தேசிய கீதத்தை அரச பொது நிகழ்வுகளில் சிங்களத்திலும், தமிழிலும் [மாறி மாறி] இசைக்க வேண்டும் என்ற அவரது இன நல்லிணக்க யோசனையை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அரசு கிழித்து எறிந்துவிட்டது.அத்தகைய ஒரு பின்னணியில்; அமைச்சர் வாசுதேவாவின் இன, மத பேதங்களைத் தடுக்கும் சட்டம் ஒன்றை இயற்றும் உத்தேச முயற்சி ஈடேறுமா என்பது மிகப் பெண்ணம் பெரிய கேள்வியாக உயர்ந்து, கொழுத்து நிற்கிறது.

இலங்கை சுயாதிபத்தியம் உள்ள சுதந்திர நாடு என்பதால், அனைத்துலக தேசங்கள் அதன் இறையாண்மையில் மூக்கை நுழைக்க முடியாது என்ற தனது ''தத்துவத்தை'' கைவிடும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

பரமசிவன் கழுத்தில் இருக்கும் பாம்பு கருடனைப் பார்த்து சௌக்கியமா என்று கேள்வி கேட்ட பாங்கில், இலங்கையில் இன, மத நல்லிணக்கம் மேலும் மெலிந்து நலிந்து போகுமா என்ற வினாவே தொக்கி- ஒளிந்து- நிற்கிறது!

### தமிழகத்தில் அடுத்த மாதம்

# தமிழீழ விடுதலைக்காக மாணவர் சுடர் பயணம்

### முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் முடியும்

சென்னை,ஏப். 18

தமிழீழ விடுதலைக்கான மாணவர் சுடர் பயணம் மே மாதம் 12 ஆம் திகதியில் இருந்து 17 ஆம் திகதி வரையில் தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் இடம்பெறவுள்ளது என்று தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பின் அடுத்த கட்ட முன்னெடுப்பாக அடுத்த மாதம் 12 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதி வரை தமிழகத்தின் 32 மாவட்டங்களிலிருந்தும் ''தமிழீழ விடுதலைக்கான மாணவர் சுடர் பயணம்'' 8 கோடி தமிழர்கள் சார்பில் பயணிக்க இருக்கிறது.

8 கோடி தமிழர்களின் உணர்வை வெளிப்படுத்தும் தமிழக சட்ட மன்றத் தீர்மானமான 'தமிழகத்துக்கான பொது வாக்கெடுப்பு' என்ற கோரிக்கையை, இந்திய அரசின் கொள்கையாக அறிவிக்க வலியுறுத்தியும் இந்தத் தீர்மானத்தை இந்தியாவே ஐ.நா. சபையில் முதன்மையான தீர்மானமாகக் கொண்டுவர வலியுறுத்தியும்,

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாதென்பதை வலியுறுத்தியுமே இந்தச் சுடர் பயணம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சுடர் பயணம் இறுதியாக மே 17 ஆம் திகதி தஞ்சாவூரில் உள்ள 'முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில்' வந்து முடிவடையவுள்ளது.

மாணவர்களால் மேற்கொள்ளப்படும் இந்த சுடர் பயணத்துக்கு சகல தரப்பினரதும் ஆதரவையும் தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பினர் கோரியுள்ளனர்.

(ம-5)

# இலங்கையரின் தனிநபர் வருமானம் 4ஆயிரம் அமெரிக்க டொலர்கள்

### 2016இல் கிடைக்கக் கூடியதாக மத்திய வங்கியின் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.18

2016 ஆம் ஆண்டு இலங்கையர் ஒவ்வொருவரினதும் தனிநபர் வருமானத்தை 4 ஆயிரம் அமெரிக்க டொலர்களாக மாற்றுவதை இலக்காகக் கொண்டே இலங்கை மத்திய வங்கியின் செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

பனை வள உற்பத்தி, மீன்பிடி உற்பத்தி என்பவற்றை மேம்படுத்துவதுடன் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கு தொழில்நுட்ப ரீதியாக உதவிகளை வழங்கி, 2016 ஆம் ஆண்டில் தனிநபர் வருமானத்தை 4 ஆயிரம் அமெரிக்க டொலர்களாக மாற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படப் போவதாக இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையின் புதிய முகாமையாளராகப் பதவியேற்றுள்ள சண்.குறிஞ்சிதரன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

இந்த இலக்கை நோக்கி வடமாகாணமும் பயணிக்க வேண்டியுள்ளது. இதற்கு வங்கிகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றை இந்த இலக்கை நோக்கி பயணிக்க வைக்க வேண்டிய தேவையிருக்கின்றது.

உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி எவ்வாறு உற்பத்திகளை மேம்படுத்தலாம் என்பது குறித்து ஆராயப்படவுள்ளதுடன் அதனூடாக இலக்கை அடைவதற்கு உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவுள்ளன.

குறிப்பாக வடமாகாணத்தின் உள்ளூர் வளங்களான பனைவளம் மற்றும் மீன்பிடி வளம் என்பவற்றைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

சிறிய, நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கு உரிய தொழில்நுட்ப உதவிகளை வழங்கி அவர்



களையும் மேம்படுத்தி அடுத்த கட்டத்துக்கு முன்னேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் வடமாகாணத்தில் வேகமாகப் பரவி வரும் சட்டவிரோத 'பிரமிட்' திட்டங்களைக் களைவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.-என்றார். (ம-5)

## 2013 இலக்கிய விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.18

2013 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விருதுகளை வழங்குவதற்காக 2012 இல் வெளியிடப்பட்ட நூல்கள் கோரப்பட்டுள்ளன.

நாவல், மொழிபெயர்ப்பு இலக்கியம், சிறுகதை இலக்கியம், மொழிபெயர்ப்பு சிறுகதை இலக்கியம், நானாவித இலக்கியம், புலமைசார் படைப்புக்கள், மொழிபெயர்ப்பு கவிதை இலக்கியம், சுயநாடகம், மொழி பெயர்ப்பு நாடகம், இளையோர் நாவல், சிறுவர் இலக்கியம், கவிதைநூல் இலக்கியம், அறிவியல் புனைகதைகள் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த நூல்களை விருதுக்கு அனுப்பி வைக்கலாம்.

நூல்கள் 2012 ஆம் ஆண்டில் முதல்தடவையாக அச்சிட்டு வெளியிடப்பட்டதாக இருத்தல் வேண்டும்.நூல்கள் 49 பக்கங்களுக்கும், சிறுவர் நூல்கள் 16 பக்கங்களுக்கும் குறையாதவையாகவும் இருத்தல் வேண்டும்.

நூல்களை அனுப்ப விரும்புவர்கள் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆவது மாடி, சித்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் கிடைக்கத் தக்கதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மூலையில் 'அரச இலக்கிய விருது வழங்கல்' எனக் குறிப்பிடப் படவேண்டும். (ம-7)

### மானிப்பாய் இந்துக் கல்லூரியில்

## தொழில்நுட்பப் பாடங்களுடன் இணைந்ததாகக் கலைப்பிரிவு

யாழ்ப்பாணம், ஏப்.18

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கலைப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுடன் இணைந்ததாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்று கல்லூரி அதிபர் எஸ்.சிவநேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பம், வன்தொழில்நுட்பம், மென்தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

கலை, வர்த்தகப் பிரிவுப் பாடத் தொகுதிகளில் இப்பாடங்களைக் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கனிஷ்ட பல்கலைக்கழக அனுமதியை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பாக இந்தப் பாடத் திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

தேசிய பாடசாலையில் உள்ள ஆசிரிய வளங்களைப் பயன்படுத்திப் புதிய செயல்முறையில் மானிப்பாய் இந்துவில் கல்வி அமைச்சர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரது வழிகாட்டலில் இந்தப் பாட நெறிகள் செயற்படுத்தப்படவுள்ளன.

இந்தச் செயற்பாடு எதிர் காலத்தில் மாணவர்கள் புதிய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமையும்.- என்று அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ம)

### புனரமைக்கப்பட்ட போதிலும்

# இரண்டே மாதங்களில் வங்காலை வீதி சேதம்



மன்னார்,ஏப்.18

புனரமைக்கப்பட்டு இரண்டு மாதங்களேயான வங்காலை வீதி குன்றும் குழியுமாக மாறியுள்ளது. இதனால் போக்குவரத்துகளின் போது தாம் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் மதவாச்சி வீதியில் உள்ள சிறுநாவற்குளம் சந்தியில் இருந்து வங்காலை செல்லும் 300 மீற்றர் நீளமான வீதிக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னரே இந்த வீதி கிரவல் பரவப்பட்டு அதற்கு மேல் சல்லி இடப்பட்டு தார் ஊற்றிப் புனரமைக்கப்பட்டது.

குறித்த வீதி எந்த வேலைத் திட்டத்தின் கீழ், எந்த ஒப்பந்தகாரர்களால், எவ்வளவு நிதிச் செலவில் புனரமைக்கப்பட்டது என்பது குறித்து விளம்பரப்படுத்தப்படவில்லை.

தற்போது மன்னாரில் இருந்து வங்காலை, நானாட்டான், முசலி, சிலாவத்துறை போன்ற கிராமங்களுக்கான அரச, தனியார் போக்குவரத்துச் சேவைகளும் இந்த வீதியூடாகவே இடம் பெற்று வருகின்றன. குறித்த வீதி அமைக்கப்பட்டு சில மாதங்களே ஆன நிலையில் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நானாட்டான் பிரதேச சபையின் தலைவர் அன்புராஜ் லெம்பேட்டைத் தொடர்பு கொண்டு கேட்ட போது

இந்த வீதி, வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டது. இதற்கான ஒப்பந்தத்தினை சி.ஈ.சி. என்ற தனியார் அமைப்பு மேற்கொண்டது எனத் தெரிவித்தார்.

(ஜ-12)

# பூநகரி முக்கொம்பனில் வெட்டப்படும் மரங்கள்

அக்கராயன்,ஏப்.18

பூநகரி முக்கொம்பன் பகுதியில் களவாக மரங்களை வெட்டும் நடவடிக்கைகள் தொடர்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இறமன், செக்காலை, சுரமுனை, குமரநேசன் தாழ்வு, யற்றன் ஆகிய பகுதிகளிலேயே மரங்களைக் களவாக வெட்டி எடுத்துச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையே மரங்கள் அதிகளவில் அழிக்கப்படுவதற்கான முக்கிய காரணம் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து விறகு கூட பிற இடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாது என்ற முடிவு எடுக்கப்பட்ட போதிலும் மரங்கள் வெட்டப்பட்டுக் களவாக எடுத்துச் செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பூநகரிப் பிரதேசத்தின் பெரும் பகுதி உவரடைந்து வரும் நிலையில் முக்கொம்பன், ஜெயபுரம் கிராமங்களில் உள்ள காடுகள் காரணமாகவே உவர் ஏற்படும் ஆபத்து குறைந்து காணப்படுகின்றது.

தற்போது முக்கொம்பனிலிருந்து பூநகரி நகருக்குக் குடிதண்ணீர் எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்த நிலையில் முக்கொம்பனில் உள்ள காடுகள் அழிக்கப்படுமாயின் வளமான முக்கொம்பன் கிராமமும் உவராவதைத் தடுக்க முடியாது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

## ஆறு நூல்களின் அறிமுக விழா

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்மணி கே.கே. அருந்தவராஜாவின் ஆறு நூல்களின் அறிமுக விழா எதிர் வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

த்லைமையுரையினைத் தொடர்ந்து நூல்கள் வெளியீடு இடம் பெறும். நூல்களின் அறிமுக உரையை மூத்த ஊடகவியலாளர் அருணா செல்லத்துரை நிகழ்த்துவார். ஆறு நூல்களும் அடங்கிய, பேழையை சிறப்பு விருந்தினர் வெளியிட்டு, உரையாற்றுவார். முதற் பேழையை நூல்களின் ஆசிரியரின் பெற்றோர்களான கதிரிப்பிள்ளை, பாக்கியம் தம்பதியினர் பெற்றுக் கொள்வர். சிறப்புப் பிரதிகள் வழங்கலைத் தொடர்ந்து நூல்களின் நயம் காணல் இடம் பெறும்.

ஜேர்மனியில் தமிழர் வரலாறு, காலச்சுவடுகள், 'தாலி' சிறுகதைத் தொகுப்பு, ஆன்மாவின் வாசனை, 'தாய் நிலம்' கவிதை, நலமாய் வாழ ஆகிய ஆறு நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

(ஜ-400-402)

# நிலம் இல்லாதோரும் பயிர்ச் செய்கையில்

அக்கராயன்,ஏப். 18

துணுக்காய் கல்விளான் கிராமத்தில் வயல் நிலமில்லாத 70 குடும்பங்களுக்கு சிறுபோகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது.

கல்விளான் குளம் புனரமைக்கப்பட்ட பின்னர் 600 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கல்விளான் கிராமத்தில் காணி இல்லாத 70 குடும்பங்களுக்கு தரிசு நிலங்களாகக் காணப்பட்ட வயல் நிலங்களில் இருந்த பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டு தலா ஒரு ஏக்கர் வீதம் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

வயல் நிலம் கிடைக்கப் பெற்ற இந்த 70 குடும்பங்களும் கால் ஏக்கரில் முதல் தடவையாக சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

(க-18)

## போக்குவரத்துச் சிரமத்தில் வலைப்பாடு மக்கள்

அக்கராயன்,ஏப்.18

கிளிநொச்சியிலுள்ள வலைப்பாடு, பொன்னாவெளி, வேரவில் கிராமங்களில் வசிக்கும் மக்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நீண்டநேர இடைவெளியில் இடம்பெறும் தனியார் பஸ் சேவைகள் காரணமாக உரிய நேரத்தில் தாம் பயணங்களை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த மக்கள் பல்லவராயன் கட்டுச் சந்தியில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவல நிலையும் காணப்படுகின்றது.

மேற்கூறிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அரச பஸ் சேவைகளைத் தமது கிராமங்களில் ஏற்படுத்துமாறு கோரும் மனுக்களை அரச அதிபர் உட்பட அதிகாரிகளிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# மாணவிக்கு கௌரவம்



கிளிநொச்சி,ஏப்.18

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியிலிருந்து கடந்த ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி வர்த்தகப் பிரிவில் 3ஏ சித்தியைப் பெற்ற மாணவி ராஜரட்ணம் கோபிகா கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் வைத்தே இக்கௌரவிப்பு இடம்பெற்றது.

கல்லூரியின் ஏற்பாட்டில் DFCC வர்த்தன வங்கியினால் சைக்கிள் ஒன்று இந்த மாணவிக்குப் பரிசாக வழங்கப்பட்டதுடன் குறிப்பிட்ட காலத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் வங்கியில் பணியாற்றுவதற்கான நியமனக்கடிதமும் வழங்கப்பட்டது. அத்துடன் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. இவற்றை DFCC வர்த்தன வங்கியின் பொது முகாமையாளர் லக்ஸ்மன் சில்வா வழங்கிக் கௌரவித்தார்.

(க-405)

## அளவீடு இல்லா காணிகளில் வீடுகள்

அக்கராயன்,ஏப்.18

தமது காணிகள் அளவீடு செய்யப்படாத நிலையில் நிரந்தர வீடுகள் அமைக்கப்படுகின்றமை தொடர்பாக ஜெயபுரம் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பொதுவாகவே கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர வீடுகளை அமைக்கும்போது காணிகளை அளவீடு செய்வது வழக்கமாகும். ஆனால் ஜெயபுரத்தில் இது பின்பற்றப்படாது வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இதனால் நாள்தோறும் பிணக்குகள் ஏற்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

## புனித திரேசாவின் பரிசளிப்பு விழா



கிளிநொச்சி,ஏப்.18

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இடம் பெற்றுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் மு.ப.10 மணிக்கு இந்த விழா ஆரம்பமானது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் தலைமைப்பீட உதவி அரச அதிபர் திருமதி ஜெயராணி பரமோதயன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபனும், கௌரவ விருந்தினராகக் கல்லூரியின் ஓய்வுபெற்ற பிரதிஅதிபர் திருமதி இ.றட்ணமும் கலந்துகொண்டனர்.

விழாவுக்கு முன்னதாக விருந்தினர்கள் மலர் மாலை அணிவித்து விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்த விழாவில் விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றதுடன் வகுப்பறைச் செயற்பாடுகளிலும் இணைப்பாட செயற்பாடுகளிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(க-405)

## பூநகரியில் போக்குவரத்து இடர்

பூநகரி முக்கொம்பனிலிருந்து 10 ஆவது கட்டை வரையான வீதி புனரமைக்கப்படாமையால் போக்குவரத்து இடர்கள் தோன்றியுள்ளன. மக்களின் மீள்குடியமர்வின்போது இந்த வீதியைப் புனரமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் நடத்தப்பட்ட போதிலும் வீதிக்கு இதுவரை விமோசனம் கிடைக்கவில்லை.

இதேவேளை முக்கொம்பன் கிராமத்திலிருந்து பூநகரி மருத்துவமனை, பிரதேச செயலகம் ஆகியவற்றுக்குச் சென்று வருவதிலும் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-18)

# 18 சிறு குளங்களை புனரமைக்க முடிவு



மன்னார்,ஏப்.18

சிறு குளங்களைப் புனரமைப்பது தொடர்பான அவசரக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாக மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

மன்னாரின் மறுமலர்ச்சி வேலைத் திட்டத்தின் கீழ் நகரசபையின் கீழ்வரும் 18 சிறு குளங்கள் டயஸ்போரா லங்கா அமைப்புடன் இணைந்து புனரமைத்து மக்களின் பாவனைக்கு ஒப்படைப்பது தொடர்பாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதில் நகரசபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகரசபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ், மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் என்.குணசீலன் டயஸ்போரா லங்கா அமைப்பின் இயக்குநர் ஜெர்மி லியனுகே, மாவட்ட இணைப்பாளர் சிங்கிலேயர் பீற்றர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக நகரசபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்ததாவது:-

இங்கு வருகை தந்த மாதர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நான்கு குளங்களை முதலில் புனர்நிர்மாணம் செய்து மக்களின் பாவனைக்காக ஒப்படைக்கும்படி கோரிக்கை விடுத்தனர். அவற்றில் மன்னார் உப்புக் குளத்திலுள்ள பிள்ளையார் கோயில் குளம், வட்டக்குளம், எழுத்தூர் தரவன் கோட்டைக் குளம், கோரைக்குளம் ஆகிய நான்கு குளங்களும் அடையாளப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் குறித்த குளங்கள் தற்போது எந்தத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பது தொடர்பாக மன்னார் நகர சபை ஆராய்ந்து வருகின்றது.

இதேவேளை குளங்களுக்குச் சொந்தமான காணிகளைச் சிலர் பிடித்து வைத்துள்ளதாக மாதர், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகளினால் நகர சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பில் நகர சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதோடு குளக்காணிகளைப் பிடித்து வைத்துள்ளவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும் மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள ஏனைய குளங்களையும் புனரமைத்து மக்களின் பாவனைக்கு விடுவதில் ஏற்படக்கூடிய நன்மை, தீமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(க-12)

## எழுவை தீவுக்கு விரைவில் வைத்திய அதிகாரி

யாழ்ப்பாணம், ஏப்.18

எழுவைதீவுக்கு விரைவில் வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஊர்காவற்றுறை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குள் நிரந்தர வைத்தியர் ஒருவர் அங்கு நியமிக்கப்படுவார்.

தற்போது அனலைதீவில் உள்ள வைத்திய அதிகாரி வாரத்தில் இருநாள்கள் அங்கு கடமையாற்றுகிறார்.

தீவுப்பகுதிகளுக்கு செல்வதில் வைத்தியர்கள் தயக்கம் காட்டுகின்றனர் -என்று அவர் மேலும் கூறினார். (ம-7)

## மானிப்பாய் இந்து நாடக மன்றத்தின் அஸ்தி குறும்படம்

யாழ்ப்பாணம், ஏப்.18

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக மன்ற மாணவர்களால் அஸ்தி எனும் குறும்படம் வெளியிடப்படவுள்ளது.

இந்தக் குறும்படத்துக்கான பாடல் அண்மையில் கல்லூரியில் இடம்பெற்ற உயர்தர மாணவர்களுக்கான ஒன்று கூடலில் வெளிடப்பட்டது.

இந்தப் பாடல் இறுவெட்டைக் குறும்பட இயக்குனர் ஆர். டில்ஸான் கல்லூரி அதிபர் எஸ்.சிவநேஸ்வரனிடம் கையளித்தார். (ம)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.18

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய பெருந்திருவிழா தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அம்பாள் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

உபயகாரர்களை இதில் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. திருவிழா ஜூன் மாதம் 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வீதிகளுக்கு மின்சாரம் விநியோகத் திட்டம்

தென்மராட்சி,ஏப்.18

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்த வருடத்துக்கு உரிய மக்கள் பங்களிப்புடனான வீதி மின் விநியோகத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தலா ஏழு வீதி விளக்குகள் வீதம் 105 வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜாவின் பிறந்த தினமான நேற்று இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தில் கடந்த வருடம் உறுப்பினர்களுக்கு தலா நான்கு வீதி விளக்குகள் வீதம் திட்டத்தில் 60 இடங்களில் வீதி மின்விளக்குப் பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# வலி.கிழக்குப் பிரதேசத்தில் மேலும் 3 பஸ் தரிப்பிடங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.18

வலி. கிழக்கு பிரதேசத்தில் மேலும் மூன்று பஸ் தரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதேச சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

பருத்தித்துறை வீதியில் ஆவரங்கால் பகுதியில் ஏற்கனவே பஸ்தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

அதனைவிட கோப்பாய் மற்றும் கைதடி வீதியிலும் மேலும் இரண்டு பஸ்தரிப்பு நிலையங்களை அமைப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீதியின் அகலிப்பு, புனரமைப்புப் பணிகளின் போது அதிக பஸ் தரிப்பு நிலையங்கள் உடைக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளன.

அகற்றப்பட்ட இந்த பஸ் தரிப்பு நிலையங்கள் பின்னர் நிர்மாணிக்கப்படாததால் பஸ்ஸுக்கு காத்திருக்கும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

நீர்வேலி, கோப்பாய், இருபாலை போன்ற பகுதிகளில் இவ்வாறு பஸ்தரிப்பு நிலையங்கள் இல்லாத நிலையில் மக்கள் தற்போது உச்சி வெய்யிலில் கால் கடுக்க பஸ்ஸுக்கு காத்து நிற்கின்றனர்.

இதன் காரணத்தால் இந்தப் பிரதேசங்களில் மக்களின் போக்குவரத்து வசதி கருதி அவசரமாக மூன்று பஸ்தரிப்பு நிலயங்களை அமைப்பதற்குச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## புதிதாக நியமிக்கப்பட்ட உப தபாலதிபர்களுக்கு பயிற்சிகள்

கடந்த 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நியமனம் வழங்கப்பட்ட உப தபாலதிபர்களுக்கு கட்டம் கட்டமாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.


மேற்படி பயிற்சிகள் யாழ்.பிரதம தபாலக பயிற்சிக் கல்லூரியில் ஆறு மாத காலத்துக்கு தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக 25 உப தபாலதிபர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிதாக நியமனம் பெற்ற சகல உப தபாலதிபர்களும் கட்டாயம் தபாலதிபர்களுக்கான ஆறுமாத கால பயிற்சி நெறியை பெற்றிருக்க வேண்டும் என்ற சுற்றறிக்கைக்கு அமைவாக குறித்த பயிற்சி நெறிகள் யாவும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-17)



ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் புத்தாண்டை முன்னிட்டு வாழ்வெழுச்சித் திட்டச் (திவிநெகும) சந்தை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் இடம்பெற்றது. பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் தலைமையில் இது இடம்பெற்றது. (ம-251)

## பாஷையூர் இறங்குதுறை அடுத்த மாதம் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.18

'ஐ.ஓ.எம்.'நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் பாஷையூர் இறங்குதுறை அடுத்த மாதம் நடுப்பகுதியில் மீனவர்களிடம் கையளிக்கப்படும் என்று ஐ.ஓ.எம். நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சர்வதேச புலம்பெயர்தலுக்கான அமைப்பின் (ஐ.ஓ.எம்) நிதிப்பங்களிப்புடன் 700 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் பயன்படுத்தக் கூடிய விதத்தில் 50 மில்லியன் ரூபா நிதியில் இறங்குதுறை புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இறங்குதுறை புனரமைப்புச் செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிலையில் இதற்கான பணிகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான பணிகள் நிறைவு பெற்றதும் மே மாதம் நடுப்பகுதியில் இதனை மீனவர்களிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## மாணவியை மோதியவர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

வலி. வடக்கு, ஏப். 18

பாடசாலை மாணவியை மோதிவிட்டு தப்பிச் சென்ற மோட்டார் சைக்கிள் நபர் தனியார் மினி பஸ் உரிமையாளரின் துணிகரமான செயற்பாட்டால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் மருதனார் மடத்தில் இடம் பெற்றது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறும் வலிகாமம் கல்வி வலய தமிழ் தினப் போட்டியில் கலந்து கொண்ட மாணவி காங்கேசன்துறை வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மாணவியை மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

தனியார் மினி பஸ் சாரதி தனது வாகனத்தை வீதியில் நிறுத்திவிட்டு வீதியால் வந்த ஒருவரின் மோட்டார் சைக்கிளைப் பெற்று குறிப்பிட்ட நபரைக் கலைத்துச் சென்று பிடித்துள்ளார்.

அத்துடன் சுன்னாகம் பொலிஸாருக்குக் கொடுத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸார் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து அந்த நபரைக் கைது செய்ததுடன் மாணவியை வைத்தியசாலைக்கும் அனுப்பி வைத்தனர். (ம-86)

## தூய்மையாக்கப்படும் பண்ணைக் கடற்கரை



யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்.பண்ணை கடற்கரை பிரதேசத்தை சுற்றுலா மையமாக்கும் திட்டத்தின் கீழ் கடற்கரை பகுதியை தூய்மையாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது கொட்டடி மீனாட்சிபுரம் கடற்கரை பிரதேசத்தைத்தூய்மையாக்கும் பணிக்கு முன்னோடியாகக் கடற்கரைப் பகுதிக்கு கிரவல் மண் கொட்டப்பட்டு சீர்செய்யும் பணிகள் நடைபெறுகின்றன.

அதனைவிட கடற்கரைப் பகுதியில் நிழல் மரங்கள் நடும் பணிகள் முன்னெடுக்கப்படவும் உள்ளன. இதற்கென நூற்றுக்கும் மேற்பட்ட நிழல் மரங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

பண்ணைக் கடற்கரையில் இருந்து நாவாந்துறை கடற்கரை வரையான பகுதிகளில் கழிவுப் பொருள்கள் கொட்டுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (வ-17)

## சாவகச்சேரி நகர சபை மைதானத்தில் சித்திரைப் புத்தாண்டுப் போட்டிகள்

தென்மராட்சி, ஏப்.18

தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணி தொடக்கம் சாவகச்சேரி நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம், சாவகச்சேரி லயன்ஸ் கழகம், சாவகச்சேரி தனியார் பஸ் சங்கம், 523 படையணி ஆகியவை இணைந்து விளையாட்டு விழாவை நடத்தவுள்ளன.

சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், வழுக்கு மரம் ஏறுதல், கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, சமநிலை ஓட்டம், சைக்கிளில் மெதுவாக ஓடுதல், வேகநடை, சாக்கு ஓட்டம், முதியோருக்கான ஓட்டம், பின்புறமாக அஞ்சல் ஓட்டம், மென்பானம் அருந்துதல், பாண் உண்ணுதல், நாணயத்தைக் கண்டுபிடித்தல், மாயமனிதனைக் கண்டுபிடித்தல், யானைக்கு கண் வைத்தல், தேங்காய் துருவுதல், ஓலை பின்னுதல், இசை நாற்காலி, வினோத உடைப் போட்டி, சிறந்த மொட்டைத் தலை மனிதன், சிறந்த சிரிப்பு, சிறந்த அழுகை, பலூன் உடைத்தல், பணிஸ் உண்ணுதல் மூன்று சக்கர சைக்கிள் ஓட்டம் என 28 வகையான போட்டிகள் ஆண், பெண், சிறுவர் ஆகியோரிடையே நடத்தப்படவுள்ளன. (ம-9)

## பாதையை விட்டு விலகி ஹயஸ் வாகனம் விபத்து


வலி. வடக்கு, ஏப். 18

கொழும்பில் இருந்து வேகமாக வந்த ஹயஸ் வாகனம் வீதியை விட்டு விலகியதில் ஏற்பட்ட விபத்தில் வாகனத்தின் முன்புறம் கடுமையான சேதமடைந்தது.

எனினும் தெய்வாதீனமாக வாகனத்தில் வந்தவர்களுக்கு பெரியளவில் காயங்கள் ஏற்படவில்லை.

நேற்றுக் காலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த ஹயஸ் வாகனம் சாவகச்சேரிப் பகுதியில் பாதையை விட்டு விலகி அருகில் உள்ள மின்கம்பத்துடன் மோதுண்டமையால் இந்த விபத்து ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# மூவரின் தூக்குத் தண்டனையை குறைக்கும் முயற்சி தொடர்கிறது



சென்னை, ஏப்.18

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோரின் தண்டனையைக் குறைப்பதற்குத் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வை.கோபாலசாமி.

இதுதொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

''தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோரின் தண்டனையைக் குறைப்பதற்கு தொடர்ந்து நாம் முயற்சித்து வருகின்றோம். தண்டனையைக் குறைப்பதற்கு, சட்டசபையின் பெரும்பான்மை ஊடாக தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசிடமும், ஜனாதிபதியிடமும் கோரிக்கை வைக்கலாம். இந்த முறையைப் பின்பற்ற முதல்வரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். இது ஒட்டுமொத்த தமிழக மக்களின் கோரிக்கை. அதை நிராகரிக்கவோ, உதாசீனப்படுத்தவோ கூடாது.

மாநில அரசின் கோரிக்கையை பரிசீலிக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. தூக்குத் தண்டனை குறைப்பதற்கு வாய்ப்புகள் பல உள்ளன.

வேலூர் சிறையிலுள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரிடம் மத்திய தகவல் ஆணையம் வீடியோ தொலைத் தொடர்பு முறையில் விசாரணை மேற்கொள்ள முயற்சித்தது. எனினும் அது தொழில்நுட்ப காரணங்களால் தோல்வியடைந்துள்ளது என்று கூறப்படுகிறது. அதுகுறித்து எனக்கு முழுமையாகத் தெரியவில்லை. எனவே அதுகுறித்துக் கருத்து எதுவும் வெளியிடவில்லை''- என்றார். (ற)

## எம்.ஜி.ஆரால் குழப்பமே ஏற்படும் -கருணாநிதி கவலை



சென்னை, ஏப்.18

சென்னை விமான நிலையத்தின் ஒரு பகுதிக்கு எம்.ஜி.ஆரின் பெயரைச் சூட்டுவதால் தேவையில்லாத குழப்பங்களே ஏற்படும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

''ஏற்கனவே காமராஜர் பெயர் சூட்டப்பட்டுள்ள சென்னை விமான நிலையத்தின் ஒரு பகுதிக்கு எம்.ஜி.ஆரின் பெயரைச் சூட்டுவதால் தேவையில்லாத குழப்பங்கள் ஏற்படவே வாய்ப்புள்ளது. 1990ஆம் ஆண்டு நான் பிரதமர் வி.பி.சிங் பங்கேற்ற கூட்டத்தில் மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு அண்ணா பெயரும், காமராஜர் பெயரும் சூட்ட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தேன். உள்நாட்டு விமானதளத்துக்கு காமராஜர் பெயரும் வெளிநாட்டு விமானதளத்துக்கு அண்ணா பெயரும் சூட்டப்படும் என்று வி.பி. சிங் அறிவித்திருந்தார்.

தற்போது ஒருபகுதிக்கு மற்றொரு பெயர் வைப்பது குழப்பமாக உள்ளது. இந்தக் கருத்தை நான் மட்டுமில்லை, காமராஜர் மீது அன்பு கொண்டவர்களும் எழுப்புகின்றனர். தமிழகமே மிகவும் உயர்ந்த நிலையில் வைத்துப் பாராட்டி வரும் ஒரு தலைவரின் பெயரைச் சூட்ட நினைக்கும்போது அதில் எந்தவிதமான குழப்பங்களும் ஏற்படக் கூடாது. எனவே கருத்து வேறுபாடுகள் ஏற்படாத வகையில் அனைத்துத் தரப்பினரும் மனமுவந்து வரவேற்கத்தக்க நிலையில் செயல்பட வேண்டும்.''-என்றுள்ளது. (ற)

## சட்டசபையில் அமளி; தி.மு.க. வெளியேற்றம்

புதுடில்லி, ஏப்.18

காவிரி, முல்லைப் பெரியாறு விவகாரம் தொடர்பாக சட்ட சபையில் அமைச்சர்கள் கூறிய கருத்துகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து சபை நடவடிக்கைகளைக் குழப்பியதால் தி.மு.க. உறுப்பினர்கள் சபையில் இருந்து இரண்டு நாள்களுக்கு இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் முனுசாமி காவிரி, முல்லைப் பெரியாறு விடயத்தில் தமிழகத்துக்கு தி.மு.க. துரோகம் இழைத்ததாகக் குறிப்பிட்டார்.

இதற்கு கண்டனம் தெரிவித்தே தி.மு.கவினர் சபை நடவடிக்கைகளில் குழப்பம் விளைவித்தனர். அதையடுத்தே சபைத் தலைவரின் உத்தரவுப்படி தி.மு.கவினர் சபையை விட்டு வெளியேற்றப்பட்டனர். (ற)

# புல்லரின் தூக்குக் குறித்து ஆராய்கிறது மத்திய அரசு

## பஞ்சாப் முதல்வரின் அழுத்தத்தை அடுத்து

புதுடெல்லி, ஏப்.18

மும்பைக் குண்டுவெடிப்புத் தொடர்பில் புல்லருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையைக் குறைப்பது குறித்துப் பரிசீலனை செய்யப்படுகின்றது என்று உள்துறை அமைச்சர் சுசில்குமார் ஷிண்டே தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியைச் சந்தித்துப் பேசிய பின்னரே சுசில்குமார் ஷிண்டே மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த வாரம் இதுகுறித்து பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடியதாகத் தெரிவித்த சுசில்குமார் ஷிண்டே, இது குறித்து விரைவில் மத்திய அரசு முடிவு எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

1993 ஆம் ஆண்டு புதுடில்லியில் நடந்த குண்டு வெடிப்புத் தொடர்பில் பஞ்சாப்பை சேர்ந்த புல்லருக்கு வழங்கப்பட்ட தூக்கு தண்டனையை கடந்த வாரம் உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.

இந்தநிலையில் புல்லரைத் தூக்கிலிட பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பஞ்சாப் முதல்வர், ''புல்லரின் தூக்குத் தண்டனையை இரத்து செய்ய வேண்டும். புல்லருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டால் பஞ்சாப்பில் சட்டம், ஒழுங்கு சீர்குலையும்'' -என்று வலியுறுத்தியுள்ளார். அதையடுத்தே மத்திய அரசு தண்டனைக் குறைப்புக் குறித்து பரிசீலனை செய்து வருகிறது என்று கூறப்படுகிறது. (ற)

# பெங்களூரில் குண்டு வெடிப்பு

## பொலிஸார் உட்பட 13 பேர் காயம்; பொலிஸார் தீவிர விசாரணை



பெங்களூர், ஏப்.18

பெங்களூரில் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமை அலுவலகம் அருகே மோட்டார் சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 8 பொலிஸார் உட் பட 13 பேர் காயமடைந்துள்ளனர்.

முன்னதாக கட்சி அலுவலகம் அருகே எரிவாயு சிலிண்டர் வெடிப்பு ஏற்பட்டதாகத் தகவல்கள் வெளியான போதும், அங்கு விசாரணைகளை மேற்கொண்ட பெங்களூர் பொலிஸார் குண்டுவெடிப்பே நடத்துள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்பால் அங்கு கடமையில் இருந்த 8 பொலிஸார் உட்பட 13 பேர் காயமடைந்துள்ளனர் என்று முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. குண்டு வெடிப்பை அடுத்து அங்கிருந்த வாகனங்கள் தீப்பற்றி எரிந்தன.

குண்டு வெடிப்பு இடம் பெற்ற பகுதியில் தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பெங்களூர் பொலிஸார் கூறுகின்றனர். (ற)




சிக்கிம் சென்றுள்ள இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அங்குள்ள காந்தி சிலைக்கு அஞ்சலி செலுத்தினார்.

## சஞ்சய் தத் சரணடைய அவகாசம்

புதுடில்லி, ஏப்.18

மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் நீதிமன்றத்தில் சரணடைய கால அவகாசம் கோரிய நடிகர் சஞ்சய் தத்திற்கு நான்கு வார கால அவகாசம் அளித்துள்ளது உச்ச நீதிமன்றம்.

1993ஆம் ஆண்டு மும்பையில் நிகழ்த்தப்பட்ட தொடர் குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கில் நடிகர் சஞ்சய் தத்திற்கு 5 ஆண்டு காலம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

அதையடுத்து ஏப்ரல் 18ஆம் திகதிக்குள் சரணடையுமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. எனினும் நீதிமன்றில் சரணடைய ஆறு மாத காலம் அவகாசம் தேவை என்று சஞ்சய் தத் மனு தாக்கல் செய்தார். அந்த மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது. விசாரணைகளின் பின்னர் சஞ்சய் தத்திற்கு சரணடைய நான்கு வார கால அவகாசம் வழங்கியுள்ளது நீதிமன்றம். (ற)

### ஜெயலலிதாவை அவதூறாகப் பேசினாராம்

## கப்டனுக்குப் பிடியாணை

சென்னை, ஏப்.18

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை அவதூறாகப் பேசிய வழக்கில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்துக்கு நெல்லை நீதிமன்றம் பிடியாணை பிறப்பிப்பித்துள்ளது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் பளையங்கோட்டையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை அவதூறாகப் பேசியிருந்தார் என்று தமிழக அரசு தரப்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி, குற்றஞ்சாட்டப்பட்ட தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தை எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்று பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ற)

## 2,000 கிலோ தங்கம் விற்பனை

தங்கத்தின் விலை சரிவடைந்ததை அடுத்து கடந்த நான்கு நாள்களில் சென்னையில் மட்டும் 2 ஆயிரம் கிலோ தங்கம் விற்பனையாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இதன் மதிப்பு சுமார் ரூ.1740 கோடி என்றும் கூறப்படுகிறது. (ற)

## கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

### வைகோ கோரிக்கை

சென்னை, ஏப்.18

கல்பாக்கம் அணு உலையில் ஏற்பட்ட தீ விபத்து ஓர் அபாய அறிவிப்பு. அதை உணர்ந்து தமிழக அரசு நிபுணர்கள் குழுவை அனுப்பி ஆய்வுகளை மேற்கொண்டு, பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் - இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல்பாக்கம் அணுமின் நிலையம் 35 ஆண்டுகள் பழமையானது. கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தீ விபத்தில் மின்மாற்றி ஒன்று வெடித்துச் சிதறியுள்ளது. தீ அணைப்பு வீரர்களினதும், அத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களினதும் இரண்டு மணி நேரப் போராட்டத்தின் பின்னரே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்த விபத்து கல்பாக்கத்தைச் சுற்றிலும் உள்ள மக்களின் பிரச்சினை மட்டும் அல்லாமல், தமிழக மக்களின் உயிர்ப் பிரச்சினை.

இதுகுறித்து உடனடியாக நிபுணர் குழுவை அமைத்து அணு உலையின் பாதுகாப்புக் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வரை வலியுறுத்துகின்றேன்.

கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு எதிராகப் போராடி வரும் மக்களின் எண்ணங்களையும் அரசு கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும் என்று இத்தருணத்தில் நினைவூட்டுகின்றேன் - என்றுள்ளது. (ற)

## தேர்தலில் போட்டியிடார் முஷாரப்

இஸ்லாமாபாத், ஏப்.18

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வாய்ப்பையும் இழந்துள்ளார்.

பாகிஸ்தானில் எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட, முன்னாள் ஜனாதிபதி முஷாரப் நான்கு தொகுதிகளில் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தார்.

அதில், சித்ரல் தொகுதியில் மட்டும் இவரது வேட்பு மனு ஏற்கப்பட்டிருந்தது. மற்றைய மூன்று தொகுதிகளிலும் அவரது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில், தற்போது பாகிஸ்தான் தேர்தல் திணைக்களம் சித்ரல் தொகுதியில் போட்டியிடுவதற்கான முஷாரப்பின் வேட்புமனுவையும் நேற்று நிராகரித்தது. அதையடுத்து அவர் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வாய்ப்புகளையும் இழந்துள்ளார். (ற)

# ஈரான், பாகிஸ்தானை நடுங்க வைத்த அதிர்வு

## 61 பேர் சாவு; மேலும் பலர் பாதிப்பு



பாக்தாத், ஏப்.18

நேற்றுமுன்தினம் ஈரானை மையமாகக் கொண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 40 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலநடுக்கம் பாகிஸ்தானிலும் உணரப்பட்டது. அங்கு நில நடுக்கத்தின் பாதிப்புகளால் 21 பேர் உயிரிழந்துள்ள னர் என்று கூறப்படுகிறது.

ஈரானின் சரவன் நகரில் நேற்றுமுன்தினம் மாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 7.5 ஆகப் பதிவாகியுள்ளது என்று அந்நாட்டு புவியியல் ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் சரவன், ஜாஹிதான் பகுதிகள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளன. கட்டட இடிபாடுகளில் சிக்கி 40 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக் கப்படுகிறது. மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடை பெற்று வருகின்றன என்று அந்நாட்டு அரசு தெரிவிக்கின்றது.

இதேவேளை, ஈரான் எல்லைக்கு அருகே உள்ள பாகிஸ்தான் நகரங்களிலும் நிலநடுக்கத்தின் தாக்கம் அதிகமாக உணரப்பட்டது. குறிப்பாக பலுசிஸ்தான் மாகாணத்தில் நிலநடுக்கத்தின் தாக்கம் கடுமையாக இருந்தது.

அங்கு ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.9 அலகுகளாகப் பதிவாகியுள்ளது என்று பாகிஸ்தான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பலுசிஸ்தான் மாகாணம், பஞ்குர், கரண் ஆகிய மாவட்டங்களில் 1000க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. இதில் 3 குழந்தை கள், 2 பெண்கள் உள்பட 21 பேர் உயிரிழந்தனர். 150 பேர் காயமடைந்தனர் என்றும் அந்நாட்டுத் தகவல்கள் தெரி விக்கின்றன.(ற)

## மடிக்கணினியை தேடுகிறார் பாக். தேர்தல் ஆணையாளர்



கராச்சி, ஏப்.18

பாகிஸ்தான் தேர்தல் ஆணையர் பக்ருதீன் இப்ராஹிமின் மடிக்கணினி களவாடப்பட்டுள்ளது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கராச்சியில் உள்ள தலைமை தேர்தல் ஆணையர் அலுவலக அறையில் வைக்கப்பட்டிருந்த அவரது மடிக்கணினி மற்றும் முக்கிய ஆவணங்களே களவாடப்பட்டுள்ளன.

எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி பாகிஸ்தானில் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையாளரின் மடிக்கணினி மற்றும் ஆவணங்கள் களவாடப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

களவாடப்பட்டுள்ள மடிக்கணினியில் வேட்பாளர்கள் குறித்த தகவல்கள், வேட்பாளர்களின் கல்வித் தகுதி, நிதிவசதி போன்ற முக்கிய விவரங்கள் இருந்தன என்று ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் கூறுகின்றன.

மடிக்கணினி களவாடப்பட்டமைக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறினர். (ற)

## திடீரெனத் தாக்குவோம்

### எச்சரிக்கிறது வடகொரியா

பியாங்யாங், ஏப். 18

தென்கொரியாவின் மீது எந்தநேரத்திலும் முன்னெச்சரிக்கை இன்றித் தாக்குதல் நடத்தப்படும் - இவ்வாறு எச்சரித்துள்ளது வட கொரியா.

வடகொரியா என்ற தனி நாட்டை உருவாக்கிய கிம் இ சுங்கின் பிறந்தநாள் கடந்த சனிக்கிழமை வடகொரியாவில் கொண்டாடப்பட் டது. அதேவேளை, வடகொரியாவின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்கொரியத் தலைநகர் சியோலில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.


இந்த ஆர்ப்பாட்டங்கள் குறித்து வடகொரியா கடும் தொனியிலான கருத்துக்களை வெளியிட்டுள்ளது. இது குறித்து அந்தநாடு விடுத்துள்ள குறிப்பில்,

"தென்கொரியாவில் உள்ள பொம்மலாட்ட அதிகார வர்க்கத்தின் சார்பில் எமக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் கண்டிக்கத்தக்கவை. இவ்வாறான செயற்பாடுகள் மேலும் சிக்கல்களையே உருவாக்கும். இந்த நேரத்தில் இருந்து எந்தவித முன்னெச்சரிக்கையும் இன்றி எப்போது வேண்டுமானாலும் தென்கொரியா தாக்குதலுக்கும் இலக்காகும்.'' என்று கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் கொரியத் தீபகற்பத்தில் அமைதியை நிலைநாட்ட முயற்சித்து வரும் வேளையில் வட கொரியாவின் இந்த அறிவிப்பு போர் பதற்றத்தை அதிகரிக்கச் செய்துள்ளது. (ற)

## தொடர் குண்டுவெடிப்புகள் ஈராக்கில் 31 பேர் சாவு

### 200 க்கும் மேற்பட்டோர் காயம்



பக்தாத், ஏப்.18

ஈராக்கின் பல பகுதிகளில் அடுத்தடுத்து நிகழ்ந்த 32 தொடர் குண்டு வெடிப்புகளில் 31 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர். 200 க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். -

இத்தாக்குதல்கள் ஈராக்கின் பக்தாத், கிர்குக், பக்குபா, டுஷ்குர்மாட்டோ மற்றும் ஹில்லா ஆகிய இடங்களில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதில் 2 குண்டு வெடிப்புக்கள் பக்தாத் சர்வதேச விமான நிலையத்துக்கு அண்மையில் உள்ள சோதனைச் சாவடிகளில் நிகழ்ந்துள்ளன. மற்றைய தாக்குதல்கள் பெரும்பாலும் ஷைட்டி முஸ்லிம்களின் பிரதேசங்களைக் குறி வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படையினரின் சோதனைச் சாவடிகள், ஷைட்டி முஸ்லிம் பிரதேசங்கள் மற்றும் அரச அலுவலகங்கள் போன்றவற்றை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இதேவேளை இந்தத் தொடர் தாக்குதல்களால் இன்னும் 5 நாள்களில் ஈராக்கில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் பொதுமக்கள் வாக்களிக்கும் வீதம் குறைவடையலாம் என்று அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ற)

## தாய்லாந்தில் தாக்குதல்

### 3 இராணுவத்தினர் உயிரிழப்பு

பாங்கொக், ஏப்.18

தாய்லாந்தில் வீதியோரம் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுவெடித்ததில் 3 இராணுவத்தினர் உயிரிழந்தனர். 5பேர் படுகாயமடைந்தனர்.

நராதிவத் மாகாணத்தில் பொலிஸ் நிலையம் ஒன்றுக்கு அருகிலேயே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

தாய்லாந்தின் தென்பகுதியில் தனி மாகாணம் அமைக்கக் கோரி இஸ்லாமிய அமைப்பு நீண்டகாலமாகப் போராடி வருகின்றது. அந்த அமைப்புக்கும் தாய்லாந்து அரசுக்கும் இடையே தற்போது பேச்சுக்கள் இடம்பெற்றுவரும் நிலையில் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## 'பிரஷர் குக்கரில்' போஸ்டன் குண்டுகள்



போஸ்டன், ஏப்.18

நேற்றுமுன்தினம் போஸ்டன் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 'பிரஷர் குக்கரில்' குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளன என்று விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குண்டு வெடிப்புகள் நடந்த இடங்களில் தடயவியல் நிபுணர்கள் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். விசாரணைகளின் முதற்கட்டமாக குண்டுகள் 'பிரஷர் குக்க'ரில் வைத்து வெடிக்க வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ற)

### தகவல் தந்தால் சன்மானம்

வோஷிங்டன், ஏப்.18

போஸ்டன் குண்டு வெடிப்புத் தொடர்பான தகவல் கொடுப்பவர்களுக்கு ரூபா 75 இலட்சம் சன்மானம் வழங்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.

"இது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் என்பதில் சந்தேகமில்லை. இது குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்; தகவல் தெரிவிப்பவர்கள் குறித்த விவரம் இரகசியமாக வைக்கப்படும்''- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## 21 பேருக்கு ஒரே நாளில் தூக்குத் தண்டனை

### ஈராக்கில் கொடூரம்

பாக்தாத், ஏப்.18

ஈராக்கில் பயங்கரவாதக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 21 பேருக்கு ஒரே நாளில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

தூக்கிலிடப்பட்ட அனைவரும் ஈராக்கைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. மரணதண்டனைக்கு தடை விதிக்கப்படவேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்து வரும் நிலையிலேயே ஈராக்கில் இவ்வாறு ஒரேநாளில் 21 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

ஈராக்கில் இந்த ஆண்டில் மட்டும் 50 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ற)

## மக்களைக் கொன்ற முபாரக்குக்கு விடுதலை

### மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியது

கெய்ரோ, ஏப்.18

எகிப்தில் அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின்போது பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கில் இருந்து எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் விடுவிக்கப்பட்டார்.

முபாரக்கின் சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து 2011 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள்.

பொதுமக்களின் ஆர்ப்பாட்டத்தை முபாரக், இராணுவம் மற்றும் பொலிஸாரைக் கொண்டு அடக்கினார். அதன்போது சுமார் 1,000 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் பதவி விலகியதும் முபாரக் கைது செய்யப்பட்டு, அவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசாரணைகளின் முடிவில் முபாரக்குக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும் அதை எதிர்த்து முபாரக் மேன்முறையீடு செய்திருந்தார்.

அதையடுத்து மீண்டும் வழக்கை விசாரித்த நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்ட முபாரக்கை, பொதுமக்களை கொன்ற வழக்கில் இருந்து விடுதலை செய்துள்ளது.

(ற)



உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிராணி திலகவர்தன, பதில் பிரதம நீதியரசராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்பாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் பதவியேற்றுக்கொண்டார்.

## அரசின் தவறுகள் காரணமாகவே அமெரிக்க உதவிகள் குறைப்பு

### சாடுகிறார் ரவி கருணாநாயக்க எம்.பி.



கொழும்பு,ஏப்.18

அரசின் தவறுகள் காரணமாகவே அமெரிக்க உதவிகள் குறைக்கப்பட்டன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

அரசின் நடவடிக்கைகளினால் நாடு பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும்.

அரசின் தவறான வெளியுறவுக் கொள்கைகளால் உலக நாடுகள் இலங்கையை விட்டு விலகிச் செல்கின்றன. எதிர்காலத்தில் இலங்கைக்கான உதவிகள் மேலும் குறைவடையக் கூடும். அரசின் நிலைப்பாடுகளாளேயே அமெரிக்கா உதவிகளைக் குறைத்துள்ளது.

இவ்வாறு சர்வதேச ரீதியில் நாடு எதிர்நோக்கி வரும் நெருக்கடி நிலைமைகளினால் ஏற்படும் பாதிப்புக்களை அரசு, மக்களிடமே ஈடு செய்து வருகிறது. அதனால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது-என்றார். (ச)

## முன்னாள் போராளிகள் தென்பகுதிக்கு சுற்றுலா

புனர்வாழ்வு பெற்று வரும் சுமார் 400 முன்னாள் போராளிகள் தென்பகுதிக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் கொழும்பு மற்றும் தென்பகுதியில் தங்கியிருக்கவுள்ள அவர்கள் பல்வேறு முக்கிய இடங்களுக்கு செல்லவுள்ளனர் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம் சதீஸ்குமார் தெரிவித்தார்.

காலி, மாத்தறை, தெனியாய, கதிர்காமம் பகுதிகளுக்கும், மத்தல சர்வதேச விமான நிலையத்துக்கும் அவர்கள் செல்லவுள்ளனர் என்று அவர் கூறினார்.

இந்தப் பிரதேசங்களில் நடைபெறவுள்ள பல்வேறு கலை, கலாசார, விளையாட்டு நிகழ்ச்சிகளில் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி ரயில் மூலம் வவுனியாவிலிருந்து புறப்படவுள்ள 400 முன்னாள் போராளிகளும் மறுநாள் காலை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடைவர். இவர்கள் அங்கு வரவேற்கப்பட வுள்ளனர்.

புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்ட மத்தல சர்வதேச விமான நிலையத்துக்கும், கதிர்காமம் பிரதேசத்துக்கும் எதிர்வரும் 28 ஆம் திகதி இவர்கள் அழைத்துச் செல்லப்பட வுள்ளனர். (ச)

# பரவுகிறது எலிக்காய்ச்சல்; இதுவரை 20 பேர் உயிரிழப்பு

கொழும்பு,ஏப்.18

நாட்டில் எலிக்காய்ச்சல் அச்சுறுத்தல் காணப்படுவதால் வயல் வேலைகளில் ஈடுபட முன்னர் டொக்ஸி சைக்கிளின் (doxycycillin) மாத்திரையை எடுக்குமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கடும் காய்ச்சல், கண்கள் சிவப்பாதல், உடல் வலி போன்ற அறிகுறிகள் காணப்படுபவர்கள் தாமதியாது அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

இதுதொடர்பாக சுகாதார அமைச்சின் நோய் பரவுதல் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர் பபா பாலிகவர்தன தெரிவித்ததாவது:-

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இதுவரை எலிக்காய்ச்சலுக்கு 1,281 பேர் உள்ளாகியுள்ளனர். அவர்களில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

களுத்துறை, அம்பாந்தோட்டை, குருநாகல், அநுராதபுரம், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இந்த நோயால் அதிகம் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டில் வயல் வேலைகளில் ஈடுபடுபவர்களே எலிக்காய்ச்சலுக்கு உள்ளாவது வழமை. அதனால் வயல் வேலைகளில் ஈடுபட முன்னர் பிரதேசத்திலுள்ள மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்குச் சென்று டொக்ஸி சைக்கிலின் மாத்திரைகளைப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எலிக்காய்ச்சலுக்குரிய நோய்க் காரணியின் தாக்கத்தைத் தவிரித்துக் கொள்வதற்கு இந்த மாத்திரைகள் பெரிதும் உதவக் கூடியவை.

அதனால் வயல் வேலைகளில் ஈடுபடுபவர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவது அவசியம் -என்றார். (ச)

## மதுபோதையில் குழப்பம் விளைவித்த ஐவர் கைது

நுவரெலியா,ஏப்.18

புத்தாண்டின் பின்னர் மதுபோதையில் குழப்பம் விளைவித்ததாகக் கூறப்படும் 5 பேரை அலவத்துகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அலவத்துகொடை, சய்ஸ்டன் பிரதேசத்தில் மதுபோதையில் காணப்பட்ட சிலர் குழப்பம் விளைவிப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

அந்தநிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு 5 சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர். இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## நிலவும் கடும் வெப்பம் இரு வாரங்களில் நீங்கும்

### திறந்தவெளிகளை தவிர்க்க வேண்டுகோள்

கொழும்பு,ஏப்.18

நாட்டில் தற்போது நிலவும் கடும் உஷ்ண காலநிலை அடுத்துவரும் இரு வாரங்களுக்குள் நீங்கிவிடும் என்று வளி மண்டலவியல் திணைக்களத்தின் கடமை நேர வானிலையாளர் ஜீவன் கருணாரட்ன தெரிவித்தார்.

தற்போது பருவப்பெயர்ச்சி மழைக் காலநிலை நிலவுவதால் இடி, மின்னல் தாக்கங்களிலிருந்து தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் விஷேட கவனம் செலுத்துவது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

இடி, மின்னல் காலநிலை காணப்படும் போது திறந்த வெளிகளில் நடமாடுதல், குளங்கள் நீர் நிலைகளில் நீராடுதல், உயரமான பச்சை மரங்களுக்குக்கீழ் இருத்தல், வீடுகளில் மின்சாரப் பொருள்களை பாவித்தல் போன்றவற்றைத் தவிர்ந்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி வரையும் இடி, மின்னல் காரணமாக 6 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த வருடம் இதே காலப் பகுதியில் 14 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இடி மின்னலுடன் மழை பெய்யும் போது கடும் காற்றும் திடீரென ஏற்படக்கூடும் என்று அவர் கூறினார்.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவுற்ற 24 மணி நேர மழைவீழ்ச்சியின் பதிவுப்படி ஆகக்கூடிய மழை கண்டி மாவட்டத்திலுள்ள சேமகமவில் 129.0 மில்லி மீற்றர்களாகப் பதிவாகியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## ரிசானாவின் குடும்பத்துக்கு அமைச்சர் பௌசி நிதி உதவி



கொழும்பு,ஏப்.18

சவூதி அரேபியாவில் தலைவெட்டித் தண்டனை நிறைவேற்றப்பட்ட ரிசானா நபீக்கின் குடும்பத்துக்கு சிரேஷ்ட அமைச்சர் ஏ. எச். எம். பௌசி செவ்வாய்க்கிழமை இரண்டு லட் சம் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வு கொழும்பு, 3இல் உள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது. ரிசானாவின் குடும்பத்துக்கான நிதி உதவியை ரிசானாவின் தந்தை எம். எஸ். நபீக்கிடம் கையளித்தார் அமைச்சர்.

தமது குடும்பத்துக்கு நிதி உதவி வழங்கியமைக்கு அமைச்சர் பௌசிக்கு ரிசானாவின் தந்தை நபீக் நன்றி தெரிவித்தார். (ச)

## அரசின் 3 இணையங்கள் மீது மீண்டும் 'சைபர்' தாக்கு

கொழும்பு,ஏப்.18

இலங்கை அரசின் மூன்று இணையத்தளங்கள் மீது மீண்டும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தம்மை 'பங்களாதேஷ் கிறே ஹட் ஹக்கேர்ஸ்' என்று அறிமுகம் செய்துள்ளவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்த சைபர் தாக்குதலால், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு இணையத்தளம், நாடாளுமன்ற சபை முதல்வரின் இணையத்தளம், தேசத்தின் மகுடம் கண்காட்சி இணையத்தளம் என்பன முடக்கப்பட்டன.

**இஸ்லாம் மதம் அவமதிக்கப்படுவதற்கு எதிராகவே இந்தத் தாக்குதல் நடத்தப்படுகிறது.**

இஸ்லாம் மதம் அவமதிக்கப்படுவதற்கு எதிராகவே இந்தத் தாக்குதல் நடத்தப்படுகிறது என்று சைபர் தாக்குதலை நடத்தியவர்கள் அறிவித்துள்ளனர்.

'இஸ்லாம் அவமதிக்கப்படுவதை நாங்கள் எதிர்க்கிறோம்; உங்கள் மதத்தை அவமதிக்காதபோது, இஸ்லாமை ஏன் இகழ்கிறீர்கள்? இலங்கை அரசுக்கு கடைசி எச்சரிக்கை; இதை நிறுத்துங்கள்' என்று சைபர் தாக்குதல் நடத்தியவர்கள் எச்சரித்துள்ளனர்.

எனினும் சைபர் தாக்குதலுக்கு இலக்கான மூன்று இணையத்தளங்களும் மீள இயங்கத் தொடங்கியுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. (ச)

## சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விசேட நடவடிக்கை

கொழும்பு,ஏப்.18

இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்புக் குறித்து விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. அதற்காக புதிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்டங்களை சுற்றுலா விடுதிகளுடன் இணைந்து பொலிஸார் முன்னெடுக்கவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

தமது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விருந்தகங்களில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு, விருந்தக உரிமையாளர்கள் வழங்க வேண்டும்.

இந்தத் தகவல்களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும். அதன் மூலம் வெளிநாட்டவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ச)

## பவளப்பாறைகளைக் கடத்தும் வர்த்தகம் இலங்கையில் வெகுவாக அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.18

இலங்கையின் கடற்பரப்பிலுள்ள பவளப்பாறைகளை வெளிநாடுகளுக்கு கடத்தும் வர்த்தகம் வெகுவாக அதிகரித்து வருகிறது.

இந்த கடத்தலுடன் இலங்கை சுங்கப் பிரிவின் உயர் அதிகாரிகள் நேரடியாகவே சம்பந்தப்பட்டுள்ளதாக சுங்கவரித் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெருந் தொகையில் கிட்டும் தரகுப் பணத்துக்கு அடிமையாகி அவர்கள் இந்த கடத்தல் வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் மலேசியா, சீனா, டுபாய் போன்ற நாடுகளுக்கு இந்தப் பவளப்பாறைகள் பெருமளவில் அனுப்பி வைக்கப்படுவதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுங்கத் திணைக்களத்தின் மத்திய புலனாய்வுப் பிரிவினால் இது சம்பந்தமாக ஏற்கனவே விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இவ்விதம் சட்ட விரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான பவளப்பாறைகள் சுங்கத் திணைக்களத்தின் உயிரியல் சம்பந்தப்பட்ட பிரிவினாலும் கைப்பற்றப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-22)

# கட்டைவேலி ப.நோ.கூ.சங்கத்தின் 3 கிளைகள் இயங்காத நிலையில்

## கட்டட வசதிகள் இன்மையால்

வடமராட்சி,ஏப்.18

கட்டட வசதிகள் இன்மையால் நெல்லியடி கட்டைவேலி ப.நோ.கூ.சங்கத்தின் மூன்று கிளைச் சங்கங்கள் சில மாதங்களாக மூடப்பட்ட நிலையில் உள்ளன.

சங்கத்துக்குச் சொந்தமான 24 கிளைச்சங்கங்களில் தற்போது 21 கிளைச் சங்கங்களே இயங்கி வருகின்றன. எஞ்சிய கிளைச் சங்கங்களான வதிரிப்பகுதியில் உள்ள கல்வத்தைக்கிளை, நெல்லியடிக்கிளை, துன்னாலைப்பகுதியில் உள்ள கிளான் கிளை ஆகிய மூன்று கிளைகளுமே மாதக்கணக்காக மூடப்பட்ட கிளைச்சங்கங்கள் ஆகும். மூடப்பட்ட கிளைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் அதிகமான நுகர்வோரைக் கொண்டவையாகும்.

கட்டட வசதி இன்மையாலேயே மேற்படி கிளைச் சங்கங்கள் மூடப்பட்டு உள்ளன. இது தொடர்பாக கிளைக் குழுக்களுடன் ஆலோசித்து வருகின்றோம். எனினும் பாதுகாப்பான, வசதியான கட்டடங்கள் எவையும் கிடைக்கவில்லை என சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் நெல்லியடிக் கிளை தவிர்ந்த கிளான், கல்வத்தை ஆகிய இரு கிளைகளும் தனியார் கடைகள் குறைந்த கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளில் அமைந்துள்ளன. இதனால் அந்தப்பகுதிகளைச் சேர்ந்த நுகர்வோர் நியாய விலைக்கு பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நுகர்வோரின் சிரமங்களை நீக்க கிளைக்குழுக்கள் உரிய இடங்களைத் தெரிவு செய்து கிளைச்சங்கங்களை இயங்க ஆவன செய்யவேண்டுமென நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-8)

## விபத்தில் காயமடைந்தவருக்கு ஒரு லட்சம் ரூபா நட்ட ஈடு

வடமராட்சி, ஏப்.18

மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த வயோதிபருக்கு ஒரு லட்சம் ரூபாவை நட்ட ஈடாகச் செலுத்துமாறு விபத்தை ஏற்படுத்தியவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

வல்வெட்டித்துறை அம்மன் கோயிலடிப் பகுதியில் போக்குவரத்து விதிகளை மீறி மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் வீதியால் சென்று கொண்டிருந்த அதே இடத்தைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரை மோதி படுகாயப் படுத்தியதாக வல்வெட்டித் துறைப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவில் படுகாயமடைந்தவருக்கு ஒரு லட்சம் ரூபா நட்ட ஈடாகவும் போக்குவரத்து ஒழுங்குகளை மீறியமைக்காக நீதிமன்றுக்கு 16 ஆயிரத்து 500 ரூபா அபராதமாகவும் செலுத்துமாறு மோட்டார் சைக்கிள் சாரதிக்கு உத்தரவிடப்பட்டது. (வ-8)

# 150.9 பில்லியன் ரூபா நட்டத்தில் மின்சார சபை, பெற்றோலிய தாபனம்

## அரச வங்கிகளிடம் பெரும் தொகை கடன்

கொழும்பு,ஏப்.18

இலங்கை மின்சார சபைக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கும் கடந்த ஆண்டு ஏற்பட்டுள்ள நட்டம் 150.9 மில்லியன் ரூபாவாக அதிகரித்துச் சென்றுள்ளது.

இந்தத் தொகை நாட்டின் சராசரி தேசிய உற்பத்தியின் 02 வீதமாகும். இலங்கை மத்திய வங்கியின் ஆகப்பிந்திய அறிக்கையின் மூலமாக இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபைக்கு மாத்திரம் கடந்த ஆண்டில் 61.2 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. அது, கடந்த 2011 ஆம் ஆண்டில் 19.3 பில்லியன் ரூபாவாக இருந்துள்ளது.

அதே போன்று, இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கும் கடந்த ஆண்டு ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் இது 94.5 பில்லியன் ரூபாவாக இருந்தது. நட்டத்தை எதிர்கொண்டு வரும் இந்த அரச நிறுவனங்கள் இரண்டும் இரண்டு அரச வங்கிகளினால் வழங்கப்பட்டு வரும் கடன்களை ஆதாரமாகக் கொண்டே செயல்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனங்கள் கடந்த ஆண்டில் அரச வங்கிகளிடம் இருந்து 84.4 பில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-22)

# ஏற்றுமதி வருவாயில் பெரியளவில் வீழ்ச்சி

## மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.18

கடந்த ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதி வருவாய் 7.4 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

மத்திய வங்கியினால் கடந்த 9 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட ஆகப் பிந்திய அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. உடுபுடைவைகள் மற்றும் தைத்த ஆடைகளின் ஏற்றுமதி 4.8 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. ஏனைய தொழில்துறை சார் உற்பத்திகளின் ஏற்றுமதியும் 7.8 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.

தைத்த ஆடைகளில் 50 வீதமானவை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன: அந்த ஏற்றுமதியும் கூட கடந்த ஆண்டில் 9.2 வீதத்தினால் வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது.

இதனிடையே உலகின் இரண்டாவது மிகப்பெரிய தைத்த ஆடை வர்த்தகச் சந்தையான அமெரிக்காவுக்கான ஏற்றுமதியும் 4 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

இதேபோன்று விவசாய உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி வருவாயும் 7.8 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் உருவாகியுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக தேயிலை எற்றுமதியின் மூலம் கிடைக்கும் வருவாயும் கடந்த ஆண்டில் சரிவை எதிர்கொண்டதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-22)

## அரச ஊழியருக்கான ஆக்கத்திறன் போட்டி

வடமராட்சி,ஏப்.18

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு அரச ஊழியர்களுக்கிடையே இந்த ஆண்டுக்கான ஆக்கத்திறன் போட்டிகளை நடத்தவுள்ளது.

அரசமற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்களில் சேவையாற்றும் படைப்பாளர்களுக்கும் இலக்கியத்துக் ஆற்றல்களை ஊக்குவிக்கும் முகமாக இந்தப் போட்டிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

சிறுகதை, பாடலாக்கம், குறுநாடகம், சிறுவர் ஆக்கம், கவிதை ஆக்கம் ஆகிய ஆக்கத்திறன் போட்டிகள் இடம்பெறும்.

போட்டிகளில் பங்குபற்றும் அரச ஊழியர்கள் எதிர் வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, செத்திரிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ-8)

# புலிகள் இயக்க இளைஞருக்கு உதவியதாக கைதான முஸ்லிம் நபர் விடுதலை

வவுனியா, ஏப்.18

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்த முஸ்லிம் நபர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் இதற்கான தீர்ப்பை வழங்கினார்.

சம்மாந்துறை கருவாட்டுக்கல்லைச் சேர்ந்த கலந்தர் லெவ்வை அப்துல்கபூர் என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு குறித்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தம்பிராசா வசந்தகுமார் (கரன்) என்பவர் அரசுக்கு எதிராகச் செயற்பட்டதை அறிந்திருந்தும் பொலிஸுக்கு தகவல் வழங்கத் தவறியமை மற்றும் குறித்த நபரை மோசடியாகக் கடவுச் சீட்டு தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்ப முயற்சித்தமை, மன்னாரிலிருந்து அவரை வனாத்த வில்லுவுக்கு வாகனம் மூலம் ஏற்றிச் சென்றமை என்பன அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

மேலும், நான்கு வருட காலமாகப் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவில் தடுப்புக்காவலிருந்து வந்த இந்த நபரின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை வைத்தே வழக்கும் தொடரப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றத்தில், மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது, குற்றஞ்சாட்டப்பட்ட கலந்தர் லெவ்வை அப்துல் கபூரினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதலை அவர் விரும்பி வழங்கப்படாது நிர்ப்பந்தத்தின் பேரில் வழங்கப்பட்டதாக நிரூபணமாகியது.

இந்த நிலையில் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு வேறு சாட்சியங்களும் இல்லாததால், எதிரியை விடுதலை செய்து நீதிபதி சந்திர மணி விஸ்வலிங்கம் தீர்ப்பு வழங்கினார். (ஒ-30)

# அனலைதீவு, எழுவைதீவு மின்விநியோக நேரத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.18

அனலைதீவு மற்றும் எழுவைதீவு பிரதேசங்களுக்கான மின்விநியோக நேரத்தை அரை மணிநேரத்தினால் அதிகரிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்து ஒருவருடமாகியும் இதுவரையில் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 ஆம் திகதி இடம்பெற்ற ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அனலை தீவு மற்றும் எழுவைதீவு பிரதேச மக்களால் தமது பகுதிகளுக்கான மின்சார விநியோகத்தை அரைமணி நேரத்தால் அதிகரித்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இரவு வேளைகளில் 6 மணி தொடக்கம் 10.30 மணி வரையில் வழங்கப்படும் மின்சாரத்தையே அரைமணி நேரத்தால் அதிகரித்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்களின் மேற்படி கோரிக்கை இதுவரைக்கும் நிறைவேற்றப்படவில்லையென்று பிரதேச செயலரால் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் சூரியாலத்தை கிராமத்தில் வடக்கின் வசந்த மின் இணைப்பு வேலைகள் இன்று வரை ஆரம்பிக்கப்படவில்லை. பருத்தியடைப்பு கோட்டையடிக் கிராமத்தில் 31 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் பிரதேச செயலரால் சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும் அவரது கோரிக்கைக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த மின்சாரசபை அதிகாரிகள் உரிய பதில் வழங்கவில்லை.

இதேவேளை- யாழ்.மாவட்டத்துக்கான 24 மணி நேர மின்சார விநியேகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த பெப்ரவரி மாதம் சுன்னாகம் வருகைதந்து ஆரம்பித்திருந்தார். எனினும் தீவுப் பகுதிக்கு இன்னமும் முழுமையான மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

# காசோலைகளை உறுதிப்படுத்துவதால் மோசடியை ஓரளவு தவிர்க்கலாம்

## வங்கி அதிகாரிகள் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.18

காசோலைகள் ஊடாக பணப்பரிமாற்றம் செய்யும் நபர்கள் வங்கிகளில் காசோலைகளை பரீட்சித்து உறுதிப்படுத்தலுடன் பணப்பரிமாற்றம் செய்வதன் மூலம் காசோலை மோசடிகளை ஓரளவேனும் தவிர்க்க முடியும் என்று வங்கி அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் காசோலை மோசடிகள் தொடர்பாக குறைந்தது 2க்கு மேற்பட்ட காசோலை மோசடிகள் வாராந்தம் இடம்பெற்றமை தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த மோசடிகள் தொடர்பில் வங்கிகள் நடவடிக்கைகள் பற்றி வங்கி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது-

காசோலைகளை பணப் பரிமாற்றம் செய்யும் நபரின் வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடப்படுகிறதா என்பது தொடர்பாக காசோலைகளைப் பெறுகின்ற நபரே அவதானத்துடன் இருக்க வேண்டும். பணம் தரும் நபரிடம் இருந்து காசோலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக எந்த வங்கியில் காசோலைக்குரிய பணம் வைப்பில் உள்ளது என்பதை குறித்த நபருடன் சென்று உறுதிப்படுத்திய பின்னர் காசோலைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

காசோலைகளைப் பரிமாற்றம் செய்த பின்னர் பணம் வைப்பில் இல்லாத காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளது என்று முறைப்பாடு செய்யப்படுவதால் உரிய தீர்வு கிடைக்கப் போவதில்லை.


காசோலைகளை கையாளும் நபர்கள் குறித்த தொகைப் பணம் வைப்பில் உள்ளபோது மட்டுமே காசோலைகளைக் கையாள முடியும்.

எனவே பரவலாக இடம்பெறுகின்ற காசோலை மோசடிகளைத் தவிர்ப்பதற்கு குறிப்பாக கடன்களை மீளச் செலுத்தும் நபர்கள், வாகனங்களை விற்பனை செய்யும் நபர்கள், வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி தரகர் வேலை செய்யும் நபர்கள் தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டும் -என்றனர். (வ-14)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

'எமக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த
எம் குல தெய்வத்துக்கு எமது இதய அஞ்சலிகள்'

## அமரர் அரியகுட்டி துரைராஜா



தோற்றம் 10.06.1931 திதி: அட்டமி மறைவு 02.05.2009

வருடம் நான்கு ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தும்
அப்பா உங்களுக்கு ஈடாகுமா?
எமதருமைத் தந்தையே!
பெற்று வளர்த்துப் பேர் சூட்டி ஆளாக்கி
அவைதனிலே முன்னிற்க வைத்தவரே!
நீங்கள் நடந்த பாதையெங்கும் உங்கள்
வரவைக் காணாமல் நிதம் நிதம்
ஏங்கியே தவிக்கின்றோம்
ஆலமரம் சாய்ந்து போனதே ஆனாலும்
விழுதுகளின் வழிகளில்
ஈரம் இன்னும் காயவில்லை.

கோண்டாவில் வீதி,
கோண்டாவில் வடக்கு,கோண்டாவில்.
தொ.பே.: 0775834858

(36054)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# 31 ஆம் நாள் நினைவலைகள்

## திருமதி
## அமுதா கணேசமூர்த்தி



மலர்வு 14.11.1952 உதிர்வு 18.03.2013

அகிலத்தில் உள்ள அத்தனைக்கும்
அர்த்தம் தந்த தாயே - உன்மேல்
அன்பு வைத்த அகங்களை எல்லாம்
அனாதை ஆக்கி அமைதியாய் சென்றதேனோ?
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
அகிலமே மாண்டு போனாலும்
மறவோம் உங்கள் பூ முகத்தை
நினைவெல்லாம் நீங்கள் வாழ்வதனால்
நிஜங்களில் நாங்கள் வாழ்கின்றோம்.

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (18.04.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில்நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவற்குழி கிழக்கு,
கோயிலாக் கண்டி,
கைதடி.

(சி-9251)

குடும்பத்தினர்.

# சொத்து விவர சட்டம் கேலிக்குரிய விடயம்

## அநுரகுமார எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.18

இலங்கையில் சொத்து விவரம் தொடர்பான சட்டம் கேலிக்குரிய விடயம்.

இவ்வாறு மக்கள் விடுதலைமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பிரான்சின் அமைச்சர்கள் தமது சொத்து விவரங்களை வெளியிடுவதற்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையுடன் முடிவடைந்தது.

நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஓலன்ட் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

இதன் மூலம் ஜனாதிபதி பிரான்சுவா ஒலன்டின் சோசலிச அமைச்சரவையில் குறைந்தது நான்கு செல்வந்தர்கள் உள்ளமை தெரியவந்துள்ளது.

அமைச்சர் ஒருவரின் மறைமுக வெளிநாட்டு வங்கிக்கணக்கு தொடர்பில் ஏற்பட்ட மக்கள் கொந்தளிப்பை அடுத்து, அனைத்து அமைச்சர்களும் தமது தனிப்பட்ட சொத்து விவரங்களை வெளியிட வேண்டுமென உத்தரவிடப்பட்டிருந்தது.

இதேவேளை இலங்கையிலும் அமைச்சர்கள் தமது சொத்து விவரங்களை வெளியிட வேண்டும் என்று பலரும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## விடுமுறையைக் கழிப்போம் உல்லாசமாக..



ஏப்ரல் விடுமுறையை கழிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் நுவரெலியாவில் குவிந்துள்ளனர்.

# சிறைக்கைதி தப்பியோட்டம்

கொழும்பு,ஏப்.18

மொனராகலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவரால் பாதுகாப்பு கடமையிலிருந்த சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

பாதுகாப்பு அதிகாரியை கண்ணாடி போத்தலினால் தாக்கிவிட்டு கைதி வைத்தியசாலையை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மொனராகலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மாகாணசபை செயற்பாட்டில் நம்பிக்கை இழந்துவிட்டோம்

## அரசியலில் திடீர் மாற்றம் ஏற்படலாம் என்கிறார் அமீர் அலி

மட்டக்களப்பு,ஏப்.18

கிழக்கு மாகாணசபையின் செயற்பாட்டில் நம்பிக்கை இழந்து விட்டோம். அதனால் அரசியலில் திடீர் மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் கிழக்கு மாகாண அரசியலில் நிலவுகின்றது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.



கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஐம்பது லட்சம் ரூபா நிதியில் மட்டக்களப்பு, ஓட்டமாவடி ஷரீப் அலி வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள புதிய இருமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் நாலா பாகங்களிலும் உள்ள மாகாண சபைகள் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. எனினும் பல்வேறு எதிர்ப்புக்களுடன் உருவாக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் அனைத்தும் நம்பிக்கை இழக்க வைத்துள்ளன.

இந்தச் சபையினூடாக எந்தவித வேலைத்திட்டங்களும் நடைபெறுவதில்லை. அதனால் கிழக்கு மாகாண அரசியலில் திடீர் மாற்றங்கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் நிலவுகின்றன.

கிழக்கு மாகாண சபையில் ஏற்படும் மாற்றம் தேசிய அரசியலையும் பாதிக்கலாம். இதற்கான முஸ்தீபுகள் அவசரமாக நடந்து வருவதை உணர முடிகின்றது.

நாங்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்து அரசியலில் களமிறங்கியவர்கள். அரசின் மீது நம்பிக்கை கொண்ட எம்மில் அரசு கவனம் செலுத்தி யிருந்தால் கிழக்கு மாகாண சபையின் செயற்பாட்டில் எமக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும்.

முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட கிழக்கு மாகாண சபை ஊடாக தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள இனத்தைச் சேர்ந்த மூவின மக்களுக்கும் எந்தவிதமான பயனும் இல்லாத சூழ்நிலை காணப்படுகின்றது.

கிழக்கு மாகாண சபை ஊடாக எதுவுமே சாத்தி யப்படாது என்ற நிலமையே இன்று மேலோங்கி இருக்கின்றது.-என்றார். (ச)

# இலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.1.

இலங்கை மீனவர்கள் ஏனைய நாடுகளின் பொருளாதார வலயங்களுக்குள் பிரவேசித்தல் தற்போது அதிகரித்துள்ளது. அதன் காரணமாக சர்வதேச மட்டத்தில் இலங்கையின் கடற்றொழில்துறை மீது அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நிமல் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இதுவரையில் 22 இலங்கை மீனவர்கள் மொரிசியஸ் மற்றும் டியாகோ காஷியா போன்ற நாடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மாலைதீவு, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் இலங்கை மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், வேறு நாடுகளின் எல்லைகளுக்குள் அத்துமீறி பிரவேசிக்கும் கடற்றொழிலாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதற்கென சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்தோடு அபராதத் தொகை அதிகரிக்கப்படவுள்ளது.-என்றார். (ச)

# மத்தள விமான நிலையத்தை பார்வையிட்டார் ஜனாதிபதி



கொழும்பு,ஏப்.18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு திங்கட்கிழமை திடீர்ப் பயணமொன்றை மேற்கொண்டார்.

இந்தப் பயணத்தின் போது விமான நிலைய சமையலறை மற்றும் ஏனைய பிரிவுகளையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

விமான நிலைய அதிகாரிகளுடனும் விமான நியைத்துக்கு வந்திருந்த பொதுமக்களுடனும் அளவளாவிய ஜனாதிபதி, அவர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (ச)

# மோதலில் இருவர் சாவு

கொழும்பு,ஏப்.18

பெலியத்த,சிடினாமலுவ பகுதியில் திங்கட்கிழமை இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டதையடுத்தே அவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர். அவர்கள் மாத்தறை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# தனியார் பஸ்களுக்கு எதிராக 149 முறைப்பாடுகள்

## விசேட விசாரணைகள் இடம்பெறும் என்கிறது போக்குவரத்து ஆணைக்குழு

கொழும்பு,ஏப்.18

பண்டிகைக் காலத்தில் அதிக கட்டணம் அறவிட்ட தனியார் பஸ்கள் தொடர்பில் 149 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

1955 என்ற விசேட தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன குறிப்பிட்டார்.

கடந்த வருடம் புத்தாண்டு காலப்பகுதியில் நாளொன்றுக்கு சுமார் 250 முறைப்பாடுகள் கிடைத்த போதிலும், இந்த ஆண்டு 5 நாள்களுக்குள் 149 முறைப்பாடுகள் மாத்திரமே பதிவாகியுள்ளன என்று அவர் கூறினார்.

அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் விசேட விசாரணைகள் இடம்பெறும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, சொந்த இடங்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் கொழும்புக்குத் திரும்புவதற்காக எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விசேட போக்குவரத்து சேவைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன்

## சோபிததேரர் கூறுகிறார்

2016 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் உத்தேசம் எதுவும் எனக்கு இல்லை என்று மாதுலுவே சோபிததேரர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுவான வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எவ்வித உத்தேசமும் இல்லை.

எனினும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார முறைமையை இல்லாதொழிக்க இணங்காவிட்டால், மாற்று வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்து தேர்தலில் களமிறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மஹிந்த சிந்தனைக் கோட்பாடுகளில் மிக முக்கியமான விடயங்களில் ஒன்றான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. யாரை பொது வேட்பாளராக நியமிப்பது என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை. -என்றார். (ச)

# நில மோசடியில் ஈடுபட்ட கும்பல் கைது

கொழும்பில்,ஏப்.18

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நில மோசடியில் ஈடுபட்டு வந்த குழுக்களை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர். இந்தக் குழுக்கள் தொடர்பில் சுமார் 4300 பொது முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவினர் வெளிநாடுகளில் உள்ளவர்களின் காணிகளை அபகரித்தல், போலியான வழக்குப் பதிவை மேற்கொண்டு பேரம் பேசுதல் போன்ற மோசடியான செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். கொள்ளுப்பிட்டி பகுதியில் இருந்து முன்னாள் தமிழ் அரசியல் வாதி ஒருவரின் சொத்துக்களும் இந்தக் குழுவினரால் அபகரிக்கப்பட்டிருந்தது. உரிமையாளர் அமெரிக்காவில் வசித்துவரும் நிலையில், அவர் இந்த சொத்துக்களின் உறுதிப்பத்திரத்தை தங்களுக்கு பரிசாக வழங்கியதாக தெரிவித்தே இந்தக் குழு மோசடியில் ஈடுபட்டிருந்தது. (ச)

# மரம் நடுவோம்- வளம் பெறுவோம்

**கடுமையான வெயில் காரணமாகத் துன்பத்தை எதிர்கொள்ளும் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் என்பன மரங்களின் நிழலையே நாடிச் சென்று இளைப்பாறும் நிலை இன்று காணப்படுகின்றது. சீரான மழை வீழ்ச்சிக்கும் மரங்கள் பெரிதும் உதவுகின்றன. இத்தகைய உயர்ந்த பயன்களைத்தரும் மரங்களைப் பேணிக்காப்பது எம் அனைவரதும் முக்கிய கடமையாகும்.**



ப.அருந்தவம்
(ஆசிரிய ஆலோசகர்)
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்

புத்தாண்டு தினத்தில் நான்கு மில்லியன் மரக்கன்றுகளை நடும் தேசிய வேலைத் திட்டமொன்றை கடந்த மூன்று ஆண்டுகளாக கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தி வருகின்றது. 'நாம் இன்று பயிரிடுவோம் நாளை பயன்பெறுவோம்' என்ற தொனிப்பொருளுக்கு அமைவாகவே இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கு அமைவாக மரக்கன்றுகளை வழங்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி இரத்தினபுரி சீவலி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்துக்கான மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்வு கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மறுதினமான 5 ஆம் திகதி ஏனைய பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

மாணவன் ஒருவன் சிறு பிள்ளைப் பராயத்திலே மரக்கன்று நடும் முயற்சியில் ஈடுபடும்போது இயல்பாகவே திட்டமிட்டுக் கருமமாற்றுதல், உரிய நேரத்தில் செயற்படல், ஒரு வினையை நோக்கி முன்னேறுதல் ஆகிய உயர்ந்த பண்புகளைக் கற்றுக் கொள்ளுகின்றான்.

மேலும் கல்வி அமைச்சு தேசிய ரீதியில் மாணவர் மத்தியில் மர நடுகையை ஊக்குவிக்கும் பொருட்டு 'தேசத்துக்கு நிழல்' வேலைத் திட்டத்தை ஆரம்பித்தது.

தற்போது 'இன்று பயிர் வளர்ப்போம்; நாளை பயன் பெறுவோம்' என்ற வேலைத்திட்டத்தின் மூலமாக ஆண்டுதோறும் 4 மில்லியன் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன.

இதன் மூலமாக எதிர்காலத்தில் முழுநாடும் பசுமையான தோற்றத்தைப் பெறுவதற்கான ஏதுநிலை உருவாகியுள்ளது.

மரங்கள் மனித சமுதாயத்துக்குப் பல்வேறு வகையிலும் உதவி புரிந்து வருகின்றன. சுவாசத்துக்குத் தேவையான ஒட்சிசனை வழங்குகின்றன.

வெளியில் காணப்படுகின்ற காபனீரொட்சைட்டை மரங்கள் உள்ளெடுத்து சூழலின் சமநிலையைப் பேணுவதற்குப் பெரிதும் உதவுகின்றன.

மேலும் புவி வெப்பமடைதலைத் தடுப்பதுடன் புவியின் மேற்பரப்பில் உள்ள மண் காற்றாலும், நீராலும் அடித்துச் செல்லப்படாமல் காத்து நிற்கின்றன. நிலத்தடி நீர் மட்டத்தையும் மரங்கள் பேணுகின்றன. அத்துடன் பறவைகள், நுண்ணுயிர்கள் ஆகியவற்றுக்கு உறைவிடமாகத் திகழ்வதுடன் உணவையும் வழங்குகின்றன. மேலும் சூழலுக்கு பசுமையான தோற்றத்தையும் இந்த மரங்கள் வழங்கி வருகின்றன.

கடுமையான வெயில் காரணமாகத் துன்பத்தை எதிர்கொள்ளும் மனிதர்கள் மட்டுமன்றி, விலங்குகள், பறவைகள் போன்றனவும் மரங்களின் நிழலையே நாடிச் சென்று இளைப்பாறும் நிலை இன்று காணப்படுகின்றது. சீரான மழை வீழ்ச்சிக்கும் மரங்கள் பெரிதும் உதவுகின்றன.

இத்தகைய உயர்ந்த பயன்களைத் தரும் மரங்களைப் பேணிக் காப்பது எம் அனைவரதும் முக்கிய கடமையாகும்.

மேலும் நாம் ஒவ்வொருவரும் மரங்களை நட்டு அவற்றை நன்கு பராமரிப்பதால் எமக்கு மட்டுமல்ல எமது பிற்காலச் சந்ததியினருக்கும் அதனால் பெரும் பயன் அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

# உயர் குருதியமுக்கத்தை கட்டுப்படுத்துவோம்

சி.கஸ்தூரி
இணை மருத்துவ விஞ்ஞானம்
யாழ். பல்கலைக்கழகம்

**உலகளாவிய ரீதியில், மூன்று பேரில் ஒருவர் உயர் குருதியமுக்கம் உடையவராயிருக்கிறார். அத்துடன் வயது அதிகரிப்பில் தங்கியுள்ள இந்நிலைமையானது, 20-30 வயதுடைய 10 பேரில் ஒருவரும், 50 வயதுடைய 10 பேரில் ஐவரும் என நீண்டு செல்கிறது. குறைந்த வருமானமுள்ள நாடுகளில் உதாரணமாக ஆபிரிக்க நாடுகளில் 40 சதவீதத்துக்கும் மேலதிகமானோர் உயர் குருதிய முக்கத்தால் பாதிக்கப்படுகின்றனர்.**

2013 ஆம் ஆண்டின் உலக சுகாதார தினத்தின் தொனிப் பொருளானது உயர் குருதியமுக்கத்தைக் கட்டுப்படுத்தல் என்பதாகும். உயர் குருதி அமுக்கமானது மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் சிறுநீரக செயலிழப்பு போன்றவற்றை சதவீதத்தால் அதிகரித்து விடுகிறது.

உலகளாவிய ரீதியில், மூன்று பேரில் ஒருவர் உயர் குருதியமுக்கம் உடையவராயிருக்கிறார். அத்துடன் வயது அதிகரிப்பில் தங்கியுள்ள இந்நிலைமையானது, 20-30 வயதுடைய 10 பேரில் ஒருவரும், 50 வயதுடைய 10 பேரில் ஐவரும் என நீண்டு செல்கிறது. குறைந்த வருமானமுள்ள நாடுகளில் உதாரணமாக ஆபிரிக்க நாடுகளில் 40 சதவீதத்துக்கும் மேலதிகமானோர் உயர் குருதிய முக்கத்தால் பாதிக்கப்படுகின்றனர். இத்தகவல்கள் உலக சுகாதார ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்டவையே.

எவ்வாறாயினும், இந்நிலைமை மாற்றப்படக்கூடியதாகவோ அல்லது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக் கூடியதாகவோ உள்ளது. உயர் குருதியமுக்கமானது உள்ளெடுக்கப்படும் உப்பின் அளவைக் குறைத்தல், சமவிகித உணவை எடுத்தல், அளவுக்குமீறி மதுபானமருந்தலைத் தவிர்த்தல், புகைப்பிடித்தலைத் தவிர்த்தல், கிரமமான உடற்பயிற்சி செய்தல், அளவான உடல் நிறையை பேணிக்கொள்ளல் போன்ற வழிகளால் குறைக்கப்படமுடியும் எனப் பலரும் அறிந்திருப்போம். குருதியமுக்கப் பெறுமானத்தை 120/80 mm Hg எனும் பெறுமானத்தில் தக்க வைத்துக்கொள்ளல் சிறந்தது. தன்னிலை சுகாதாரத்தைப் பேணலுடன் மருத்துவ ரீதியிலான சிகிச்சையை பின்பற்றிக் கொள்ளவும் இவை உதவுகின்றன.



அதிகூடிய விழிப்புணர்வு, சுகாதாரமான நடைமுறைகள் மற்றும் ஆரோக்கியமான சூழலின் தோற்றப்பாடு போன்றவை இந்த வருடத்துக்கான உலக சுகாதார தினப்பிரசாரத்தின் இலக்காக அமைகிறது.

அதுமட்டுமன்றி, மாரடைப்பு மற்றும் பக்கவாதத்தின் தாக்கத்தை குறைத்தல் முடிவான குறிக்கோளாகும். மேற்கூறப்பட்ட குறிக்கோள்கள் மூலம் பின்வரும் அடிப்படை இலக்குகள் அடையப்பட வேண்டும் என்பது உலக சுகாதார ஸ்தாபனத்தின் செய்தியாகும்.

★உயர் குருதியமுக்கத்துக்கான காரணங்களையும், அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வையும் அதிகரித்தல்.

★உயர் குருதியமுக்க நிலை மற்றும் அதனுடன் தொடர்பான சிக்கல்களைத் தடுப்பதற்கான தகவல்களை வழங்குதல்.

★தம் குருதியமுக்கப் பெறுமானத்தை அவதானிப்பதுடன், மருத்துவ ரீதியிலான ஆலோசனைகளைப் பின்பற்ற இளையோரை ஊக்குவித்தல்.

★உயர் குருதியமுக்கத்தைத் தடுப்பதற்கான தற்சுகாதார நிலையை ஊக்குவித்தல்.

★தம் குருதியமுக்க பெறுமானத்தை எல்லோருக்கும் இலகுவில் கிடைக்கச் செய்தல்.

★ஆரோக்கியமான நடவடிக்கைகளுக்குரிய சூழலைத் தோற்றுவிக்க தேசிய மற்றும் உள்ளூர் அதிகாரிகளைத் தூண்டுதல்.

''உயர் குருதியமுக்கத்தை கட்டுப்படுத்துவோம்- எம் வாழ்வை மேம்படுத்துவோம்'' என்றவாறான வாசகங்கள் இந்த தினத்தின்போதான பிரசாரத்துக்குரிய சுலோகங்களாக பயன்படுத்தப்படுகின்றன. ★

**உதயன்** தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
ஏ–9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மானு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி ரக் சென்ரர் – மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை வடக்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோப்பாய் லக்சிற்றி' முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அம்பரசன்' சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான் : 0775036571.

## பயணிகளை யார் காப்பார்?

விவேக் ஒரு படத்தில் பொது இடம் ஒன்றில் நின்று கொண்டிருக்கும்போது வாயில் சிகரெட்டை வைத்திருப்பார். பொது இடத்தில் புகைபிடிப்பது தடை செய்யப்பட்ட ஒன்று என்பதால் அவரை ஒரு பொலிஸ் காரர் கைது செய்ய வருவார். அப்போது விவேக் ''எதற்கு என்னை கைது செய்கிறீர்கள்?'' என்று கேட்க, ''பொது இடத்தில் சிகரெட் பிடித்தால் கைது செய்யத்தானே வேண்டும்'' என்று பதில் சொல்வார் பொலிஸ்காரர். அதற்கு விவேக் ''நன்றாகப் பாருங்கள் வாயில் வெறுமனே சிகரெட்டை வைத்திருக்கிறேனே தவிர அதில் நெருப்பே மூட்டவில்லை. பிறகு எப்படி புகைபிடித்தேன் என்று கைது செய்ய முடியும்?'' என்று பதில் சொல்ல பொலிஸ்காரர் வாயடைத்துப் போனவராக அப்பால் நகர்வார்.

இதுபோன்ற கெட்டித்தனமாக சட்டத்தை மீறுபவர்கள் நம்மிடையேயும் இருக்கத்தான் செய்கிறார்கள். வாகனம் செலுத்தும் போது கைத் தொலைபேசியைப் பயன்படுத்தக் கூடாது மீறினால் அபராதம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனினும் எங்களூர்ச் சாரதிகள் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி தொடர்ந்தும் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தத்தான் செய்கிறார்கள்.

கடந்த வாரம் கோப்பாயில் கைத்தொலைபேசியில் உரையாடியதால் பயணிகளை ஏற்றிச் செல்வதையும் மறந்த சாரதியால் ஐந்துபேர் படுகாயமடைய நேரிட்டது. இதனால் இனிமேல் தனியார் பஸ் சாரதிகள் வாகனம் செலுத்தும் போது கைத் தொலைபேசி உரையாடினால் ஆயிரம் ரூபா அபராதமும் தொடர்ந்தும் அதே தவறிழைத்தால் சாரதி அனுமதிப் பத்திரம் பறிக்கப்படும் என்றும் தனியார் பஸ் சங்கம் அறிவித்திருந்தது. இதற்குப் பின் கடந்த வாரம் விபத்து நடந்த அதேயிடத்தில் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த அதேவழித்தட பஸ் ஒன்று நத்தையை விடவும் மிக மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது. பின்னால் நடந்து வந்தவர்களுக்கு சந்தேகம் வரவே வாகனத்தை முந்திச் சென்று என்ன நடக்கிறது என்று பார்த்தார்கள். [நடந்து சென்றவர்களே முந்திச் செல்லும் அளவுக்கு குறித்த பஸ் 'கடுகதி' வேகத்தில் சென்று கொண்டிருந்தது.]

பஸ்ஸின் சாரதி கைத்தொலைபேசியில் குறுஞ் செய்தி [எஸ்.எம்.எஸ்.] ஒன்றை பதிவு செய்தவாறே வாகனத்தை செலுத்திக் கொண்டிருந்தார். அதனால்தான் இத்தனை மெதுவாக அந்த பஸ் ஊர்ந்து கொண்டிருந்தது. கைத்தொலைபேசியில் உரையாடினால்தானே தண்டம், குறுஞ் செய்தி அனுப்பினால் ஒன்றும் செய்ய முடியாதே, என்ற சட்ட ஓட்டையை அறிந்து வைத்திருக்கும் கெட்டிக்கார சாரதியாக அவர் இருக்க வேண்டும்.

தமக்குப் போட்டியான இ.போ.ச.பஸ்கள், மாற்று வழித்தட பஸ்கள் என்பவற்றின் நடமாட்டம் குறித்து ஒவ்வொரு வழித்தட பஸ்களின் சாரதிகளும் இப்போது கைத்தொலைபேசி மூலமே உளவுத் தகவல்களை பரிமாறிக் கொள்கிறார்கள். இதனால் சில இடங்களில் ஊர்ந்தும் சில இடங்களில் சிட்டாகப் பறந்தும் பயணிகளை பஸ்கள் வாரி அள்ள முடிகிறது. அதனால்தான் கைத்தொலைபேசியில் உரையாடக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவு வந்தும், அதனை மீறிச் செயற்படுகிறார்கள். பாவம் பயணிகளை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.

# இந்தியா தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட முடியாது

இந்தியாவுக்கு வழங்கிய அரசியல் மீளிணக்கப்பாடுகள் மற்றும் அதிகாரப் பகிர்வு வாக்குறுதிகளை இலங்கையை ஆட்சி செய்யும் 'சகோதரர்கள்' இன்னமும் நிறைவேற்றவில்லை.

இந்தியாவின் தற்போதைய வெளியுறவுக் கொள்கையானது உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டதே அன்றி காரணிகளை அடிப்படையாகக் கொண்டதல்ல.

இந்தியா தற்போது யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு தனது வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடிக்காது, அரசியல் ஆதரவை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகின்றது. இதற்கு இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் அணுகுமுறை மற்றும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக வாக்களித்தமை என்பன சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

இந்திய மத்திய அரசு பிராந்திய உணர்வலைகளைப் புறக்கணிப்பதுடன், தனது சிறிய அயல்நாட்டில் இடம்பெறும் உள்விவகாரங்களில் தலையீடு செய்வதை கைவிட வேண்டும் எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

1956இல் இலங்கையை ஆட்சி செய்த S.W.R.D.பண்டாரநாயக்க, சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல்படுத்தினார். இதனை இந்திய மத்திய அரசின் அரசியல் வர்க்கத்தின் ஒரு பகுதியினர் வரவேற்றனர். இது ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுக்கான ஒருங்கிணைப்பு என இந்திய அரசியல் வர்க்கத்தைச் சேர்ந்த ஒருசாரார் கருதினர். இச்சட்டம் அமுல்படுத்தப்பட்டு சில ஆண்டுகளின் பின்னர், இலங்கையைச் சேர்ந்த தமிழ் மக்கள் இரண்டாந்தர குடிமக்களாக நடத்தப்பட்டனர்.

தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட புறக்கணிப்புக்களும் பாரபட்சங்களும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தலைமை தாங்கிய பிரபாகரனால் யாழ்ப்பாண மேயராகக் கடமையாற்றிய அல்பிரட் துரையப்பா படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

புலிகள் அமைப்பை பெரும்பாலான சிங்களவர்கள் பயங்கரவாதிகள் என விளித்தனர். புலிகளை இந்தியாவின் உதவியுடனேயே வெற்றி கொள்ள முடியும் என சிங்களவர்கள் நம்பினர். அதாவது இந்த நிலையில் இந்தியாவின் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கையில் தோற்றம் பெற்ற புலிகள் அமைப்பை அழித்து இலங்கையின் ஒற்றுமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைக் காட்டிக்காப்பதற்கு இந்தியாவின் பங்களிப்பை வழங்கவேண்டும் எனத் தீர்மானித்தார்.

அதாவது இந்தியாவானது இலங்கை பிளவுபடுவதைத் தடுப்பதற்கு மட்டுமல்லாது இலங்கையில் தோற்றம் பெற்றிருந்த பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஆதரவை வழங்கும் என்கின்ற அடிப்படைத் தீர்மானத்தை ராஜீவ் காந்தி முன்வைத்தார். பல்கலாசார, பல்லின, பல் மொழிகளைப் பேசும் மக்கள் வாழும் நாடான இலங்கையில் தமிழ் மக்கள் சமமாகவும் கௌரவத்துடனும் நடத்தப்பட வேண்டும் என ஏற்கனவே வலியுறுத்தப்பட்ட நிலையிலும் கூட முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைக்கான தனது ஆதரவை வழங்கினார்.

அனைத்துலக சமூகமானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையையோ அல்லது மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவோ கேள்வி கேட்கவில்லை. குறிப்பாக இறுதி 100 நாள்கள் வரை மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் உள்நாட்டுப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மட்டுமே அனைத்துலக சமூகம் தனது கேள்விகளை முன்வைத்துள்ளது. இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்மீறல்கள் தொடர்பான காணொலிகள் மற்றும் ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஆவணங்களைக் கொண்டு மார்ச் 2012இல் கூட்டப்பட்ட ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 19வது கூட்டத் தொடரின் போது அமெரிக்கா தீர்மானம் ஒன்றை முன்வைத்தது. ஆனால் இது ஒரு மிகச்சிறிய முயற்சி மட்டுமே. கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு இலங்கை செயற்பட வேண்டும் என அமெரிக்காவின் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது. ஆனால்தொடர்ந்தும்இலங்கை தன் மீதான போர்க் கால குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மழுப்பலான பதிலையே வழங்கி வருகிறது.

இலங்கை அரசு தனது நாட்டில் மீளிணக்கப்பாடு மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பயனுள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய நிலையில், 2012இல் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்த இந்தியா 2013இல் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தையும் ஆதரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு, போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் போன்றவற்றிலிருந்து இலங்கை தப்பிப்பதில் இறையாண்மை ஒருபோதும் வெற்றிகொள்ளவில்லை. தனது நாட்டில் முன்வைக்கப்படும் தீர்மானங்களை இந்தியா ஆதரிக்காதமை நியாயமற்றது. இதற்கும் அப்பால், இது தொடர்பில் இந்தியா நெறிமுறை சார் நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. கோட்பாடு மற்றும் தேசிய நலன் ஆகியன ஒன்றுடன் ஒன்று ஒத்துழைக்காவிட்டால், தேசிய நலன் என்பது அரசின் மேலாண்மைக்கு உட்பட்டுவிடும்.

1983இல் கொழும்பில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து பாரபட்சப்படுத்தலைத் தடுத்தல் மற்றும் சிறுபான்மை இனங்களைப் பாதுகாத்தல் தொடர்பான உப ஆணையகத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்றை முன்வைக்க வேண்டுமென பலைசக் கோரப்பட்டது.

இஸ்ரேலியர்கள் தம்மால் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசங்களில் வாழ்ந்த பாலஸ்தீன மக்கள் மீது திட்டமிட்ட முறையில் மனித உரிமை மீறல்கள் பலவற்றைக் கட்டவிழ்த்து விட்ட போது, இத்தகைய தீர்மானம் ஒன்றுக்கு ஆதரவாக இந்தியர்கள் வாக்களித்திருந்தனர். தேசிய நலனுக்கு இடையூறில்லாமல் இந்தியா ஒரு நாட்டுக்கு எதிராகத் தீர்மானம் முன்வைக்கும் போது இந்தியர்கள் ஆதரவளித்தனர். தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் உணர்வலைகள் தட்டிக்கழிக்கப்படுகின்றன. இந்த நிலையில், ஏப்ரல் -மே 2009இல் இலங்கை அரசால் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை மதித்து நடக்காதது ஏன்?

இந்தியா, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்படலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட முடியாது. தமிழர்கள் மற்றும் இந்தியத் தமிழர்கள் ஆகியோருக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் அபிப்பிராயத்தை மிக வெற்றிகரமாக கையாண்டனர் என்ற கருத்து நிலவுகிறது. இவ்வாறான உணர்வுநிலையை நாம் தட்டிக்கழிக்க முடியாது.

13வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படுவதே தற்போது தமிழ் மக்களுக்கு பாதுகாப்பை வழங்கக் கூடியது. 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என ஏற்கனவே இலங்கை, இந்தியாவுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தது.

தமிழ்மக்களுக்கு இலங்கை அரசு இதயசுத்தியுடன் கூடிய தீர்வை வழங்கும் வரை இந்தப் பிரச்சினை நீண்டுகொண்டே செல்லும். அ.இ.அ.தி.மு.க, தி.மு.க மற்றும் ஏனைய தமிழ்நாட்டின் அரசியற் கட்சிகள் இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டு அவர்கள் சமமாக மதிக்கப்பட வேண்டும் என அழுத்தம் கொடுத்து வருகின்றன.

''இங்கு மாகாண சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டால் அது தேசிய தலைமைத்துவம் துப்பாக்கி முனையில் இருப்பதற்கு ஒப்பானதாகும். இதனால் மாகாண சபைக்கு அதிகாரம் வழங்க நாம் விரும்பவில்லை'' என 2013 மார்ச் மாதம் 23 ஆம் திகதியன்று இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இந்தியாவுக்கு வழங்கிய அரசியல் மீளிணக்கப்பாடுகள் மற்றும் அதிகாரப்பகிர்வு வாக்குறுதிகளை இலங்கையை ஆட்சி செய்யும் 'சகோதரர்கள்' இன்னமும் நிறைவேற்றவில்லை. இது நாட்டில் வாழும் சிறுபான்மை தமிழ் மக்கள் பாதுகாக்கப்படுவதையும் சமமாக மதிக்கப்படுவதையும் தடுக்கின்றது.

இலங்கை நாடாளுமன்றைப் பலப்படுத்தும் விதமாக இந்நாட்டின் அரசியல் மூலோபாயம் வகுக்கப்பட்டுள்ளது. அண்மையில் கொழும்பிலுள்ள முஸ்லிம் வர்த்தக நிலையம் மீது புத்த பிக்குகளின் தலைமையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறான தாக்குதல்கள் சிறுபான்மையினரின் மொழி, மதம் மற்றும் கலாசார உரிமையைப் பறிப்பதாககாணப்படுகிறது. இந்நிலையில் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தீர்மானத்துக்கு ஆதரவளித்ததன் மூலம் இந்தியாவானது சரியான தீர்மானத்தை எடுத்துள்ளது.


இலங்கையில் தற்போது சீனா அதிக செல்வாக்குச் செலுத்தி வருவதானது கெட்ட வாய்ப்பாகும். நடைமுறைக்கு அப்பால், சீனர்களை எளிதில் ஏமாற்றமுடியாது என்பது உண்மையாகும். இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்ததைப் பயன்படுத்திஇலங்கையின் பொருளாதார மற்றும் வர்த்தக வாய்ப்புக்களை சீனா பயன்படுத்திக் கொள்கிறது.

இலங்கை, இந்தியாவின் மிக நெருங்கிய நாடு மட்டுமல்லாது, கலாசாரம் மற்றும் பௌதிக ரீதியாகவும் இந்தியாவுடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. இலங்கையுடன் இந்தியா மிக நெருங்கிய உறவைக் கட்டியெழுப்ப வேண்டும். ஆனால் இலங்கை அரசு தனது நாட்டின் தமிழ் குடிமக்களைக் கௌரவத்துடனும், மதிப்புடனும், சமமாகவும் நடத்தாவிட்டால், இந்திய மத்திய அரசு இலங்கை தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட உறவையே பேணவேண்டியேற்படும்.

இந்தியாவானது இலங்கை விடயத்தில் தவறான அறிதல்கள், மிகப் பிழையான தகவல்களைக் கொண்டு தனது தெரிவுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டால், இந்தியா இறுதியில் அவமானத்தையே சந்திக்கும்.

(நன்றி:த ஹிந்து)

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே...!



இன்றைய சமுதாயத்தில் நவநாகரிக மோகத்தில் அதிகம் நாட்டம் செலுத்துவதிலும், அதற்காக நேரத்தை வீண் விரயம் செய்வதிலும் முன்னணி வகிப்போர் பெண்களே. முன்னைய காலத்தில் இயற்கையின் படைப்பிலே அன்பிற்கும், தாய்மைக்கும் உறைவிடமாகப் பெண்கள் விளங்கினார்கள். அறிவு, ஆக்கம் , அர்ப்பணிப்பு ஆகிய மாபெரும் முச்சக்திகள் இவர்களிடம் காணப்பட்டன. ஆனால் இந்தக் காலத்தில் இவை அனைத்துக்கும் முற்றிலும் மாறுபட்டவர்களாகவே பெண்கள் காணப்படுகிறார்கள்.

நவீன காலத்துப் பெண்கள், வீட்டின் செல்வத்தை பொறுப்பின்றிச் செலவழித்து குடும்பத்தின் பொருளாதார நிலையை நலிவுறச் செய்கிறார்கள். இந்தக் காலத்துப் பெண்கள் தமது நவநாகரிகத்தை ஆடை, அணிகலன்கள் மூலமே வெளிப்படுத்துகின்றனர்.



முன்னைய காலத்துப் பெண்கள் ஆலயங்களிற்கு செல்லும் போது சேலை அணிந்து, தலைக்குப் பூச்சூடி மிகவும் அடக்கமான உடையுடன் பெற்றோருடன் செல்வார்கள். ஆனால் நவீன காலத்துப் பெண்கள் அப்படி அல்ல. முகத்துக்குப் ''பேசியல்'' செய்யவும், தலைமுடியை வித விதமாக வெட்டிக் கொள்ளவும் என்ன நிற ஆடை அணிகிறோமோ அதற்கேற்ற நிறத்தில் குதிக்கால் செருப்பும் போட்டு, வளையல், மாலை அதே 'கலரில்' போடுகிறார்கள். சில பெண்கள் குட்டைப்பாவாடை அணிந்து உடலுடன் ஒட்டினாற் போல் 'ரீசேட்' அணிகிறார்கள். சில பெண்கள் இறுக்கமான 'ஜீன்ஸ்' அணிந்து கை இல்லாத சட்டை அணிகிறார்கள். இவர்களின் செயல்கள் பெரிதும் அவமானத்துக்குரியதாகின்றன. படிக்கப் போகிறோம் என்று பெற்றோரை ஏமாற்றிவிட்டு சிநேகிதிகளுடன் 'தியேட்டர்களிற்கும்', 'கூல்பார்களுக்கும்', 'பான்சி' கடைகளுக்கும் சென்று நேரத்தை வீணடிப்பது மட்டுமன்றி கல்வியையும் பாழாக்கி வருகின்றனர்.

**நவீன காலத்துப் பெண்கள் வீட்டின் செல்வத்தை பொறுப் பின்றிச் செலவழித்து குடும்பத்தின் பொருளாதார நிலையை நலிவுறச் செய்கிறார்கள். இந்தக் காலத்துப் பெண்கள் தமது நவநாகரிகத்தை ஆடை, அணிகலன்கள் மூலமே வெளிப் படுத்துகின்றனர்.**

இன்றையகாலத்துத் தாய்மாரும், பெண்பிள்ளைகளும் ஒரே மாதிரி ஆடை அணிகிறார்கள். யார் தாய், யார் மகள் என்று வித்தியாசம் காண முடியாதுள்ளது. பெண்கள் தொலைபேசி 'பேஸ்புக்' என்பவற்றால் சீரழிகிறார்கள். வீட்டில் யாராவது உறவுக்காரர் வந்தாலும் பெண்கள் அவர்களைக் கவனியாது தொலைக்காட்சியில் வரும் நாடகங்களில் மூழ்கி விடுவார்கள். இன்றைய சமுதாயத்தில் கலாசாரக் கட்டுக்கோப்புக்கு மாறாக தம்மை அலங்கரிக்கும் பெண்களைக் கண்டு வெட்கமடைகிறேன். எனது கருத்துப்படி இன்று நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்கள் தான்.

கு.தயாமினி, இணுவில் மேற்கு இணுவில்.

## என்னாளும் என் வாழ்த்துகள்

காலமெல்லாம் உன் நினைவில்
கலங்குகிறேன் என் உயிரே
நேரமெல்லாம் நோகிறதே
நெருங்கி வா என்னருகே

கரம் கொண்டு நான் தீண்ட
கடைசி வரை விடமாட்டாய்
கரம் கொண்டு நான் தீட்டிய
உனக்கான என் மடலை
மறுக்காமல் ஏற்றுக்கொள்

என் விருப்பத்தில் உன்னை
ஆட்டி வைக்க நினைத்ததில்லை
உன் விருப்பம் ஏதோ
அதன் வழியே நான் நடந்தேன்
தூக்கி வீச சொன்னதற்காய்
தூரம் வீசினாய்
அத்தனையும் ஒரு காலம்
நீ உயிராய் நேசித்த
உனக்கான பொக்கிசங்கள்

மறந்த என்னை
நினைக்க செய்ததற்காய்
மனினித்துவிடு
உன் பிறந்த தினத்துக்கான
என் வாழ்த்தை மனதார ஏற்றுவிடு
வாழ்க வளமுடன் என்றென்றும்.

செ.சுசி, குப்பிளான்.



## விமர்சனம்


நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா? பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.






துக்கத்தில் மனம் தூங்கும் போது
துன்பத்தை மனதில் இருந்து இறக்க
இதமாக என் மனதை தடவி
ஆறுதல்படுத்திய தோழன் நீ...

வெண்ணிலா
கடற்கரை ஓரத்தில் காத்திருக்கிறேன்
அவளது வருகையை எதிர்பார்த்து
ஆனால், அன்று அமாவாசை என்பது
கூட தெரியாமல்

எஸ்.அகல்யா.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.


பெயர் :-...................................................................

முகவரி :- .................................................................

.................................................................

........................ ........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




## ஆசிரியம்


ஆசிரியம் என்பது மகத்தான சேவையன்றோ - அதன்
மகத்துவம் உணர்ந்து நீ மாண்புடன் சேவை செய் -
மாணாக்கர்களிடம்
அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமை வளர்த்திடு
வேற்றுமை என்பதை வேரொடு களைந்திடு
ஆதலால் கல்வியை அன்புடன் புகட்டு
ஆலோசனை கூறி வழி காட்டிடு!

நாளைய தலைவனை நன்னயமாய் ஆக்கிடு
நாட்டிலே பணிசெய்ய பிறர்நலம் ஊட்டிடு
நான் என்ற அகந்தையை அடியோடு அகற்றிடு
நாமெல்லாம் சமமென்றே சமத்துவம் உரைத்திடு
கல்வி எனும் கடலை கசடறக் காட்டிடு
கற்றலால் உயர்வதை உணர்ந்திடு!

கல்வியுடன் ஒழுக்கமும் விழுப்பமும் - பெரு
விருட்சமாக வித்திடு - நாட்டினில்
நற் பிரஜையை உருவாக்கிடு
ஆசிரியம் அது அர்ப்பணமாமே - ஆதலால் நீயும்
ஆசானை மதித்திடு ஆசாரம் பேணிடு!

ஆன். அன்ரனிகணேஸ், நாடகத்துறை,
யா/தேசிய கல்வியியற் கல்லூரி.






பெரும்பாலும் மப்பும் மந்தாரமுமான காலநிலை நிலவும்.

# உதயன் மீதான தாக்குதலுக்குப் பல்வேறு அமைப்புகளும் கண்டனம்

உதயன் மீது மீண்டும் அரங்கேற்றப்பட்டுள்ள தாக்குதல் சம்பவத்தை அடுத்துப் பல்வேறு அமைப்புகளும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

### அக்கரைப்பற்று மக்கள் பொதுப் பணிகள் சங்கம்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகை அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து அக்கரைப்பற்று மக்கள் பொதுப்பணிகள் சங்கத்தின் தலைவர் ஏ.எம்ஹனிபா தனது அறிக்கை மூலம் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, மக்களின் குரலாகச் செயற்பட்டு வரும் உதயன் பத்திரிகையின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை ஒரு திட்டமிடப்பட்ட செயலாகவே நான் கருதுகின்றேன். ஊடகங்களைக் குறிவைத்து தாக்குதலை மேற்கொள்ளும் தீய சக்தியினரைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் கொண்டுவர ஒரு விசேட பொலிஸ் குழுவினரை நியமிக்கவேண்டும்.

இவ்வாறான சம்பவம் இனிமேலும் இடம் பெறாதவாறு இருக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

வட மாகாணத்தில் வாழுகின்ற மக்களின் மனதைக் கவர்ந்த பத்திரிகை என்றால் அது உதயன் பத்திரிகை என்றுதான் சொல்ல வேண்டும். இதனை ஏன் கூறுகின்றேன் என்றால் மிக அண்மையில் நான் யாழ். நகர் சென்றிருந்தேன். அங்கு சென்ற எனக்கு இரண்டு நாள்கள் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நான் எங்கு சென்றாலும் எனது முதல் வேலை பத்திரிகைக் கடை எங்கே உள்ளது என்பதை அறிந்து கொள்வதுதான்.

இந்த நிலைமையில் யாழ்ப்பாணத்தில் மறுநாள் காலையில் பத்திரிகை கடைக்குச் சென்று ஒரு சுடர் ஒளி பத்திரிகை தாருங்கள் என கேட்க எனக்கு கடையின் உரிமையாளர் சுடர் ஒளி பத்திரிகை இங்கு இல்லை உதயன் பத்திரிகையை பாருங்கள் என்று தந்தார்.

இரு நாள்கள் உதயன் பத்திரிகையைப் படித்தேன். எமது நாட்டிலுள்ள செய்திகளை உடனுக்குடன் வட மாகாண மக்களுக்கு மிக வெளிப்படையாக எடுத்துச் செல்லும் உதயன் பத்திரிகையின் அச்சு இயந்திரங்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தியுள்ள செய்தியை கேட்ட எனக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

குறிப்பாக வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ள இந்த நிலையில் அந்த மாகாண மக்களின் கருத்துகளை, உண்மைத் தன்மையான செய்திகளை மக்களுக்கு அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பினை உதயன் பத்திரிகையினாலேயே வழங்க முடியும். இவ்வாறானதொரு நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை ஒரு திட்டமிட்ட செயல் என்றே கருத முடியும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம்

வட பிராந்திய மக்களின் குரலாகச் செயற்பட்டு வரும் உதயன் பத்திரிகையின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வன்மையாகக் கண்டித் துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் தலைவர் அல்ஹாஜ் என். எம். அமீன் அறிக்கையொன்றினை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

உதயன் பத்திரிகை மீதும் அதன் ஊழியர்கள் மீதும் நடத்தப்பட்டுள்ள 32 ஆவது தாக்குதல் இதுவாகும். இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன்னிறுத்தி அவர்களுக்கான தண்டனையைப் பெற்றுக் கொடுப்பது அரசின் கடமையாகும். எமது தாய் நாடு தொடர்பில் சர்வதேசத்தில் மேலும் அபகீர்த்தி ஏற்படுத்தும் ஒரு செயலாகவே இதனை நோக்க முடியும்.

இவ்வாறான சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில் அந்த மாகாண மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பினை ஊடகங்களினாலேயே வழங்க முடியும். இவ்வாறானதொரு நிலையில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளமை ஒருதிட்டமிட்ட செயல் என்றே கருத முடியும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளர் சி.பாஸ்க்கரா

'உதயன்' பத்திரிகை மீதான தாக்குதல் சம்பவம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கூற்றை மெய்ப்பிப்பது போன்று உள்ளது- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி. பாஸ்க்கரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தமிழ்-சிங்கள புதுவருட வாழ்த்துச் செய்தி பத்திரிகைகளில் வெளிவந்த வேளையில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது வடக்கில் தனியானதொரு படை இராணுவத் தளபதியின் கீழ் செயற்படு கின்றது என்ற எதிர்க்கட்சித் தலைவரின் கூற்றை மெய்ப்பிப்பது போன்று உள்ளது.

முழுக்க முழுக்க இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள இடத்தில் உதயன் பத்திரிகை மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் மக்கள் புதுவருட கொண்டாட்டத்துக்குத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்த வேளையில் இப்படியான மிலேச்சத்தனமான தாக்குதல் இடம்பெற்றுள்ளமை இன்னமும் புரிந்துணர்வுக்கான சாத்தியப்பாடு எள்ளளவும் ஏற்படவில்லை என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

பத்திரிகை மீதான இத்தகைய தாக்குதல்கள் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்துக்கே ஆப்பு வைக்கும் நிகழ்வாகக் காணப்படுகின்றன. அரசியல் தீர்வு என்பதை எள்ளளவும் எதிர்யார்க்க முடியாத சூழ்நிலையே தற்போது காணப்படுகின்றது. இனியும் உலக நாடுகள் தமது கவனத்தை இலங்கையின் பத்திரிகை சுதந்திரம் மீது செலுத்தாது போனால் இலங்கையில் சுதந்திரமான பத்திரிகைகளே இல்லாத நிலை ஏற்பட்டுவிடும்.

இந்தத் தாக்குதலை எமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன் அரசு தாக்குதல்களை நடத்தியவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்கிப் புரிந்துணர்வுக்கு வித்திட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-க-ரி)

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி, ஏப்.18

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் ச.ஞானலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவரத்தினமும், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலக கணக்காளர் அ.மோகன்ராஜும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் தலைவர் வி.ஸ்ரீ சக்திவேலும் கலந்துகொள்வர் என சங்கச் செயலாளர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ந-9)

## விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி,ஏப். 18

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் க. பொ.த. சாதாரண தர வகுப்புகளில் பௌதிகவியல் பிரிவு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விஞ்ஞான பாட செய்முறைச் செயலமர்வு நாளையும், நாளை மறுதினமும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்தச்செயலமர்வுக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான கடிதங்கள் வலயக்கல்வி அலுவலகத்தினால் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9

## நவமிப் பெருவிழா

யாழ். பருத்தித்துறை வீதி, 2ஆம் ஒழுங்கையில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ சாயி சங்கரா ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை ஸ்ரீராம நவமிப் பெருவிழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பகல் 12 மணிக்கு விசேட பூசையும், சீரடி சாயி பாபாவின் பேருரைகளும் இடம்பெறும். (ந)

## பரிசோதனைக் கூடத்தில் வளர்ந்த சிறுநீரகம் சிறுநீர் கழிக்கிறது!

பரிசோதனைக் கூடத்திலேயே வளர்த்தெடுக்கப்பட்டு பின்னர் விலங்குகளில் பொருத்தப்பட்ட சிறுநீரகம் சிறுநீர் கழிக்கத் தொடங்கியுள்ளது.

இந்த மருத்துவத் தொழில்நுட்பம் ஏனைய உடல் உறுப்புகளில் கையாளப்பட்டு நோயாளிகளிடத்திலும் ஏற்கனவே வெற்றியடைந்திருந்தாலும் மிகவும் நூதனமான உடலுறுப்பான சிறுநீரகத்தில் இப்போது தான் சாத்தியப்பட்டுள்ளது. இயற்கையான சிறுநீரகத்தை விட இந்த தொழில்நுட்ப-சிறுநீரகத்தின் தொழிற்பாடு கொஞ்சம் மெதுவாகத்தான் இருக்கிறது. ஆனாலும், இப்போது எட்டப்பட்டுள்ள இந்த முன்னேற்றம், உடல் உறுப்பு- மீள்உருவாக்க மருத்துவத் துறையில் ஒரு புதிய நம்பிக்கையைக் கொடுத்துள்ளதாக நேச்சர் மெடிஸின் என்ற மருத்துவச் சஞ்சிகை கூறுகிறது.

உடலில் இரத்தத்திலிருந்து கழிவுப் பொருள்களையும் மேலதிக நீரையும் வெளியேற்றும் வேலையை சிறுநீரகங்களே செய்கின்றன.

இப்போது நம்பிக்கையளிக்கத் தொடங்கியுள்ள இந்தத் தொழில்நுட்பத்தில், பழுதடைந்த சிறுநீரகமொன்றை எடுத்து, அதிலுள்ள பழைய செல்களை அகற்றிவிட்டு, தேன்-அடை போன்ற அதன் தோற்றத்திலிருந்து புதிய செல்களை உருவாகச் செய்வது தான் மருத்துவ விஞ்ஞானிகளின் நோக்கம். இப்படியாக வளர்த்தெடுக்கப்படும் சிறுநீரகங்கள் நோயாளிகளோடு பொருந்திப் போவதுடன், நோயாளிகளின் தேவைகளுக்கு ஏற்ப மாற்று-அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளவும் தேவையான அளவில் கிடைக்கும் என்ற அடிப்படையிலேயே மருத்துவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். முதற்கட்டமாக மஸாசூசெட்ஸ் பொது மருத்துவமனையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் எலிகளிடத்தில் இந்தப் பரிசோதனையை செய்து பார்த்திருக்கிறார்கள். (ந)

## சமய சந்நிதிகளில்

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பரத் திருவிழாவும், நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.30 மஞ்சத் திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். வெள்ளிக்கிழமை காலை பிராயச்சித்த அபிஷேகமும், எதிர்வரும் 30 ஆம் திகதி இரவு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

★ ★ ★

சித்தன்கேணி கம்பம்புலோ ஆதி வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 1008 சங்காபிஷேகமும், விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறும். (ந)

## வரி விழிப்பூட்டல் கருத்தரங்கு

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் வரி செலுத்துபவர்களுக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை நெல்லியடி முருகன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் பிரதான வரிகளான வருமான வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, பெறுமதி சேர்வரி மற்றும் முத்திரைத் தீர்வை போன்றவற்றுக்கான விளக்கங்களை இந்தக்கருத்தரங்கில் பெறமுடியும் என இறைவரித் திணைக்கள யாழ்.பிராந்திய ஆணையாளர் பா.சிவாஜி தெரிவித்துள்ளார். (ந)

## ஆசிரியர் சேவைக்கு விண்ணப்பிக்கலாம்

நாட்டின் தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆசிரியர் சேவை3-1 தரத்துக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18-35 வயதுக்குட்பட்டவராகவும் கல்வித் தகைமைகளாக ஜி.சீ.ஈ சாதாரண தரம் ஒரே தடவையில் 3 திறமைச் சித்திகளுடன் தாய்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தலுடன் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்ஒன்றில்பட்டம்ஒன்றினை பெற்றிருத்தல்வேண்டும். மேலதிக விவரங்களை ஏப்ரல் 12ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம். (ந-ரி)

## புத்தாண்டு கணக்கு ஆரம்பிக்க பெருமளவு மக்கள் வங்கிகளில்



தென்மராட்சி,ஏப்.18

சாவகச்சேரியில் உள்ள அரச, தனியார் வங்கிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தாண்டுக் கணக்குகள் ஆரம்பிக்க பெருமளவு மக்கள் வங்கிகளில் கூடியிருந்தனர்.

சாவகச்சேரியில் உள்ள மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, செலான் வங்கி ஆகிய கிளைகள் நேற்றுப் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களுக்காக த் திறந்திருந்தன.

ஒவ்வொரு வங்கியிலும் காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை மக்கள் பெருமளவில் கூடியிருந்து பணம் வைப்பிலிட்டு பரிசுப் பொருள்களைப் பெற்றுச் சென்றதை காணமுடிந்தது. (ந-9)

## சாவகச்சேரி நகரசபை கட்டடம் கையளிப்பு

தென்மராட்சி, ஏப்.18

சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் உள்ளூர் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 45 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நகர மண்டபக் கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக நகரசபை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ, யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்ஸீல் ஆகியோர் கட்டடத்துக்கான திறப்புகளை நகரசபை நிர்வாகத்தினரிடம் கையளித்தனர்.

இதேவேளை- கட்டடத்தில் பூர்த்தியாக்கப்படாமல் உள்ள வேலைகளுக்குத் தேவையான 10 மில்லியன் ரூபா நிதியைக் கட்டம் கட்டமாக வழங்க ஆளுநர் செயலகம் முன் வந்துள்ளது என்று நகர சபைத் தலைவர் சி.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (ம-9)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்று ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். தாயின் உடல் நிலை சீராகும். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிட்டும். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**இடபம்:** இன்று சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாக காணப்படுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். கையில் பணம் தேவையான அளவு இருக்கும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிட்டும். உறவினர்களால் பாராட்டப்படுவீர்கள்.

**மிதுனம்:** ராசிக்குள் சந்திரன் தொடர்வதால் ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். உங்களைப் பற்றி தவறாக சிலர் பேசினாலும் அதற்காக வருத்தப்படாதீர்கள். வியாபாரத்தில் புது முயற்சிகளை தவிர்க்கவும்.

**கடகம்:** வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். அநாவசியச் செலவுகளை குறைக்கப்பாருங்கள். அரச காரியங்கள் தாமதமாக முடியும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். பயணங்களால் அலைச்சல் உண்டு. வியாபாரத்தில் போராடி இலாபம் ஈட்டுவீர்கள்.

**சிங்கம்:** நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிள்ளைகளின் உடல் நலத்தில் அக்கறைக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பெற்றோரின் ஆதரவு உண்டு.

**கன்னி:** இன்று மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. குழந்தைகளின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். தந்தையின் உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் கடன்கள் வசூலாகும்.

**நாளை**

*சித்திரை-06 வெள்ளிக்கிழமை 19.04.2013*
*திதி: நவமி பி.இ. 05.35 வரை*
*நட்சத்திரம்: பூசம் பி.ப. 03.16 வரை*
*சுபநேரம்: 06.02- 07.32 வரை*
*இராகுகாலம்: 10.32- 12.02 வரை*

**துலாம்:** புதுமுயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். முன்கோபம் விலகும். பிரிய மானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** சந்திராஷ்டமம் நீடிப்பதால் மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறை, குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள்.

**தனுசு:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டை பெறுவீகள்.

**மகரம்:** இன்று புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். கடன் பிரச்சனை களுக்கு தீர்வு காண்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் விலகும். வியாபாரத்தில் பழைய பாக்கிகளை விரைந்து வசூலிப்பீர்கள். அரசுக் காரியங்களில் அனுகூலம் உண்டு. வீடு, வாகனச் செலவுகள் குறையும்.

**கும்பம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

**மீனம்:** முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வாகனத்தை சீர்செய்வீர்கள். கன்னிப்பெண்களுக்கு பெற்றொரின் ஆதரவு கிட்டும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 4 | | 2 | 9 | |
| | | | 6 | | 2 | | | |
| | | 1 | | 7 | | 6 | | 3 |
| | 5 | | 4 | | | 8 | 3 | 1 |
| 8 | 6 | | 3 | | 5 | | 2 | 9 |
| 1 | 3 | 2 | | | 9 | | 5 | |
| 6 | | 8 | | 3 | | 9 | | |
| | | | 2 | | 7 | | | |
| | 9 | 3 | | 6 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 2 | 9 | 7 | 3 | 8 | 4 |
| 9 | 8 | 2 | 4 | 1 | 3 | 7 | 5 | 6 |
| 4 | 7 | 3 | 6 | 8 | 5 | 2 | 1 | 9 |
| 3 | 1 | 7 | 5 | 4 | 8 | 9 | 6 | 2 |
| 8 | 2 | 6 | 1 | 3 | 9 | 5 | 4 | 7 |
| 5 | 9 | 4 | 7 | 6 | 2 | 8 | 3 | 1 |
| 7 | 6 | 9 | 8 | 5 | 4 | 1 | 2 | 3 |
| 2 | 4 | 8 | 3 | 7 | 1 | 6 | 9 | 5 |
| 1 | 3 | 5 | 9 | 2 | 6 | 4 | 7 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# இலங்கைக்கான இந்திய தூதராக ஜெயசங்கரை நியமிக்கத் திட்டம்

**புதுடில்லி வட்டாரங்களில் தகவல்**

**அசோக் கே.காந்தா அடுத்த மாதத்திலிருந்து இந்திய வெளியுறவு அமைச்சின் மேலதிக செயலராகப் பதவி உயர்த்தப்படவுள்ளார்.**

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக தற்போது சீனாவுக்கான தூதுவராகப் பதவி வகிக்கும் எஸ்.ஜெயசங்கர் நியமிக்கப்படலாம் என புதுடில்லியின் ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா அடுத்த மாதத்திலிருந்து இந்திய வெளியுறவு அமைச்சின் மேலதிக செயலராகப் பதவி உயர்த்தப்படவுள்ளார். இதன் காரணமாக இலங்கைக்கான இந்தியத் தூதுவரின் பதவி வெற்றிடமாகிறது.

இந்திய வெளியுறவு அமைச்சின் தரப்படுத்தலுக்கு அமைய, இலங்கைக்கான தூதுவர் அலுவலகமானது அதி விசேட தரத்திலான பணிமனை என்று குறிப்பிடப்படுகிறது. இலங்கைக்கான தூதுவர் பதவிக்கு வெளியுறவுச் சேவையிலுள்ள அனுபவம் வாய்ந்த அதிகாரியொருவரே நியமிக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் பதவிக்கு இந்திய வெளியுறவு அமைச்சின் மேலதிக செயலாளர்களில் ஒருவரான வை.கே. சிங் மற்றும் சிரேஷ்ட உயர்ஸ்தானிகர் திருமதி சுஜாதா சிங் ஆகியோரின் பெயர்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால் மலேசியாவுக்கான இந்தியத் தூதுவர் விஜாய் கோக்லேயை சீனத் தூதுவராக நியமித்து சீனாவில் தற்போது பதவி வகித்து வரும் எஸ்.ஜெயசங்கரை இலங்கைக்கான தூதுவராக நியமிப்பதற்கும் வாய்ப்பு அதிகம் இருப்பதாக புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-22)

**கடந்த வருடத்தில் மட்டும்**

# போலி நாணய தாள்களுடன் 144 சந்தேகநபர்கள் கைது

கடந்த ஆண்டில் போலி நாணயத் தாள்களை அச்சிட்டுள்ளமை, புழக்கத்தில் விட்டுள்ளமை தொடர்பாக 144 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக இரகசியப் பொலிஸ் பிரிவின் போலி நாணயத்தாள்கள் சம்பந்தமான விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள பல்வேறு பிரதேசங்களில் புழக்கத்தில் விடப்பட்டிருந்த ஆயிரம் ரூபா, இரண்டாயிரம் ரூபா, ஐயாயிரம் ரூபா, ஐந்நூறு ரூபா, நூறு ரூபா மற்றும் 50 ரூபா போலி நாணயத்தாள்கள் 2410 ஐ தாம் மீட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளை, ஹிங்குராங்கொட ஆகிய பிரதேசங்களிலேயே 5,000 மற்றும் 2,000 ரூபா பெறுமதியான போலி நாணயத் தாள்கள் பெருமளவில் புழக்கத்தில் இருந்துள்ளதாகவும் இரகசியப் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தெஹிவளை மற்றும் வத்தளை பிரதேசங்களில் ஆயிரம் மற்றும் ஐந்நூறு ரூபா போலி நாணயத் தாள்கள் புழக்கத்தில் இருந்துள்ளதாகத் தெரியவந்துள்ளதோடு நூறு ரூபா மற்றும் ஐம்பது ரூபா போலி நாணயத் தாள்கள் புஸ்ஸல்லாவ மற்றும் ஆனமடுவ ஆகிய பிரதேசங்களில் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய போலி நாணயத் தாள்களை இனங்கண்டு கொள்ளும்போது நீர்க்குறியீடு மற்றும் வாள் ஏந்தியுள்ள சிங்கக் குறியீடு தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளுமாறு பொலிஸ்துறை பொதுமக்களிடம் கோரி நிற்கிறது. (ஐ-22)

## இ.போ.ச. ஊழியருக்கான பணிக்கொடை வழங்கல்

யாழ்ப்பாணம்,ஏப்.18

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்களில் இதுவரை பணிக்கொடை வழங்கப்படாத 64 பேருக்குரிய பணிக்கொடைகள் நாளை வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளன என்று வடமாகாண தொழில் திணைக் களப் பிரதி ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் தமக் குரிய பணிக்கொடைகள் வழங்கப்படவில்லை என்று தொழில் திணைக்களத்தில் முறையிட்டதை அடுத்து ஏற்கனவே 71 பேருக்குரிய பணிக் கொடைகள் பெற்றுக்கொடுக் கப்பட்டன. 135 பேர் கொடுத்த முறைப்பாட்டுக்கு அமைவாக வழக்கு நிலுவை இருக்கும் நிலையில் 64 பேருக்கு பணிக்கொடைகள் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 63 இலட்சத்து 751ரூபா நிதி பணிக்கொடைகளுக்காக வழங்கப்பட்டுள்ள நிலையில் 64 பேருக்கு இந்தப் பணிக்கொடைகள் வழங்கப்படவுள்ளன.


எனவே முறைப்பாடு செய்த 64 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத் தொழில் திணைக் களத்துடன் தொடர்பு கொண்டு பணிக்கொடைகளைப் பெற்றுக்கொள்ளலாம். (த-4-14)

## தொப்பிக்கல நினைவு தூபியை இன்று திறந்து வைக்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஏப்.18

மட்டக்களப்பில் அமைக்கப்பட்டுள்ள போரினால் இறந்தோருக்கான நினைவுத் தூபியை இன்று திறந்து வைக்கிறார் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

இன்று மட்டக்களப்புக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள இவர் அங்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் கோட்டையாகத் திகழ்ந்த தொப்பிக்கலப் பிரதேசத்தை இராணுவத்தினர் கைப்பற்றியதனை நினைவு கூரும் வகையில் அமைக்கப்பட்ட தூபியைத் திறந்து வைக்கவுள்ளதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. (ங-16)




தங்காலை பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புலம்பெயர் வள நிலையம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த)

# காசி விஸ்வநாதருக்கு கீரிமலையில் அடிக்கல்



வலி.வடக்கு, ஏப்.18

கீரிமலை காசி விஸ்வநாதர் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் பிரதம குரு பிரம்மஸ்ரீ இரத்தின சபாபதிக் குருக்கள் தலைமையில் நண்பகல் 12 மணி யளவில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

வலி.வடக்கில் அமைந்துள்ள தீர்த்தக் கேணிக்கு அண்மையில் அமைந்திருந்த காசி விஸ்வநாதர் ஆலயம் கடந்த கால வன்செயல்களின் போது பாரமரிப்பு இன்றியும் போரினால் சேதமடைந்தும் அழிவுற்றிருந்தது.

இந்த நிலையில் மக்கள் மீள் குடியமர்ந்ததைத் தொடர்ந்து இந்த ஆலயத்தின் திருப்பணியை மேற்கொள்வதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-86)

# புத்தாண்டில் பொங்கலிட்டுப் படைக்கும் வழிபாட்டு மரபு கைவிடப்பட்டு வருகின்றது

## சைவக் குருமார் கவலை

வடமராட்சி, ஏப்.18

தமிழ்ப் புத்தாண்டில் வீட்டு முற்றத்தில் பொங்கலிட்டு, சூரியனுக்குப் படைக்கும் பாரம்பரியம் கைவிடப்பட்டு வருவது கவலைக்குரியது என சைவக் குருமார்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளார்கள்.

தைப்பொங்கல் தினத்தைப் போல தமிழ்ப் புத்தாண்டு தினமான சித்திரைத் திங்களில் வீட்டு முற்றத்தில் மெழுகி பொங்கல் பொங்கி சூரிய பகவானுக்கு படைப்பது வழக்கமாகும். ஆனால் இந்த முறை பெரும்பாலானோர் தமது வீட்டு முற்றங்களில் பொங்கலிட்டுப் படைக்கவில்லை.

**தமிழ்ப் புத்தாண்டு தினமான சித்திரைத் திங்களில் வீட்டு முற்றத்தில் மெழுகி பொங்கல் பொங்கி சூரிய பகவானுக்கு படைப்பது வழக்கமாகும்.**

இந்தப் பொங்கலுக்கென அரிசி, பயறு, சர்க்கரை, கற்கண்டு ஆகிய பொங்கல் பொருள்களின் விற்பனை மிகமிகக் குறைவாகவே இருந்ததாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த முறை புத்தாண்டு ஆலய வழிபாட்டுடன் புது வருடத்தைக் கொண்டாடிய குடாநாட்டு மக்கள் சைவ பண்பாட்டு மரபினை மறக்கும் விதத்தில், பொங்கலிட்டுப் படைக்காதது மிக்க அதிர்ச்சியை அளிக்கின்றது என அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ந-8)

# குரக்கன் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம் ,ஏப். 18

யாழ்.குடாநாட்டில் விவசாயிகள் இந்தமுறை குரக்கன் செய்கையில் ஈடுபடுவதற்கு அதிக அக்கறை காட்டியுள்ளனர்.

எதிர்வரும் ஜூலை மாத போகத்தின்போது இந்த குரக்கன் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

இதற்கென விவசாயிகள் தமது வயல் நிலங்களை உழுதும் சீர்செய்தும் பசளையிட்டும் வருகின்றனர்.

கடந்த போகத்தின் போது விவசாயிகளால் மேற் கொள்ளப்பட்ட 'அசௌசத' என்ற குரக்கன் இனத்தை இந்த முறையும் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த 'அசௌசத' என்ற குரக்கன் இன விதைகள் கடந்த போகத்தில் விவசாயத் திணைக்களத்தால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

இந்தப் புதிய இனம் கடந்த யோகத்தில் நல்ல விளைச்சலை தந்தது என்று கூறப்பட்டது. (ம-17)

## வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி, ஏப்.18

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த சொற்பொழிவு நிகழ்வை நடத்தவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ''தேவி பாகவதம்'' என்னும் தலைப்பில் அது இடம்பெறும். பேரவை உறுப்பினர் கே.அருணகிரிநாதன் தலை மையில் நடைபெறும் நிகழ்வில் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவை நிகழ்த்துவார். (ந-8)

## இடமாற்ற நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப். 18

யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளராக கொன்ஸ்ரன்ரைன் ஜக்ஸீல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கிளிநொச்சி பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளராகக் கடமையாற்றிய நிலையில் இடமாற்றம் செய்யப்பட்டு கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளார்.(ஐ-9)



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறிவித்தல்

## தற்காலிக கடைகள், திருவிழாக்கால உடைதேங்காய் ஏலம்

மேற்படி ஆலய வருடாந்த உயர் திருவிழா 09.06.2013 ஆம்திகதியன்று ஆரம்பமாகி 24.06.2013 ஆம் திகதியன்று நிறைவுபெறும். இக்காலத்தில் தற்காலிகமாக வியாபாரம்செய்வதற்கு நிர்வாகத்தினரால் சுட்டிக்காட்டப்படும் இடங்கள் 27.04.2013 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

உயர் திருவிழாக் காலத்தில் சேரும் உடை தேங்காய்களுக்கான பகிரங்க ஏலமும் அன்றைய தினத்திலேயே கூறப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.பங்குபற்ற விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது வருகை தந்து நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**குறிப்பு:**

01. குளிர்பான நிலையம் நடத்துபவர்கள் முறையான அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும்.
02. சுகாதாரம் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
03. ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் அன்றைய தினம் ஏலத் தொகையில் 1/3 பங்குத் தொகையைச் செலுத்தி பற்றுச் சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்.
04. மிகுதித் தொகையினை பத்தாம் (10ஆவது ) திருவிழாவுக்கு இடையில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

அன்னையின் சேவையில்

செயலாளர்,

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

(சி/8391)(5.6)

**பசு விற்பனைக்கு**

கன்று ஈன்று மூன்று கிழமையான 8 போத்தல்கள் பால் கறக்கின்ற பசு விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 420 6382

(36039)(6.7.11)

**வீடு காணி விற்பனைக்கு**

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இவ்விரண்டு பரப்புக்களில் உள்ள 2 வீடுகள் தனித்தனியாகவோ, ஒன்றாகவோ விற்பனைக்குண்டு. (தரகர் தேவை யில்லை)

தொடர்பு: 075 6709 173

(36082) (45.6)

**வீடு விற்பனைக்கு**

புத்தூர் மேற்கு சிவன்கோயில் பின் வீதியில் உள்ள 2 பரப்பு காணியுடன் புதிதாக கட்டிய 3 அறை கொண்ட வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 923 2347

(36062)(5-6-7)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 23.07.1942 — உதிர்வு 19.03.2013

எங்கள் குடும்ப குலவிளக்காய் ஒளிர்ந்த

## திருமதி பெருமாள் தர்மாத்தா



அவர்களின் பிரிவால் நாம் துயருற்றிருந்தபோது அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் வழங்கியோருக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (18.04.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

தாயகம்,
புத்தடி, விசுவமடு. (சி/8390) (45.6)

கந்தசாமி பெருமாள்
(குடும்பத்தினர்).

# மரண அறிவித்தல்

## செல்வன் டெமன்போட் றஜீந்திரகுமார்



நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் டெமன்போட் றஜீந்திரகுமார் 12.04.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் டெமன்போட்-கொன்செப்ரா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், சாந்தகுமார் (இத்தாலி), சுரேந்திரகுமார் (லண்டன்), சசிதா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சுதர்சினி (இத்தாலி), சறோஜினி (லண்டன்), கிறிஸ்ரி (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், கிளால்டியோவின் சிறியதந்தையும், அன்ரன்-மேனகா (பிரான்ஸ்) தம்பதியரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (18.04.2013) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

டெமன்போட் (குஞ்சு-தந்தை),
கொன்செப்ரா (தாய்),
குடும்பத்தினர், 021-490 7068

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.

(36086)(10.6)

# மரண அறிவித்தல்

## துரைராசா சிவகரன் (கரன்)



வண்ணார்பண்ணை, கேசாவில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா சிவகரன் நேற்றுமுன்தினம் (16.04.2013) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் துரைராசா - புஸ்பராணி தம்பதியரின் புதல்வனும், பிரியவதனி (பிரான்ஸ்), ஜெகதீசன், மதிவதனி ஆகியோரின் சகோதரரும், விமலநாதன் (பிரான்ஸ்), ஜெயந்தா ஆகியோரின் மைத்துனரும், டேசிகா, நிதர்சன், டிலக்சன், தனுசா ஆகியோரின் மாமனும், கபிலனின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 53, வண்ணார்பண்ணை,
கேசாவில் வீதி. (36084) (45.6)

தகவல்:

மெக்கானிக் துரைராசா
குடும்பத்தினர் (பலூன்).

# புத்தாண்டு நிகழ்வை குழப்பிய ஈ.பி.டி.பி

## பொதுமக்கள் மீது பொலிஸார் தடியடி

வலி. வடக்கு, ஏப். 18

கோண்டாவில் பகுதியில் நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வுக்கு, ஈ.பி.டி.பி உறுப்பினர் விருந்தினராக அழைக்கப்பட்டதால் நிகழ்வு குழப்பத்தில் முடிவுற்றது. இதன் பின்னர் அங்கு வந்த பொலிஸார் மக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர் என்றும் கூறப்படுகின்றது.

அத்தோடு நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் நாராயணா சனசமூக நிலையத்தின் புத்தாண்டு விழா நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்றன.

இதில் விருந்தினராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்துகொண்டார்.

இவருடைய உரை முடிவடைந்ததைத் தொடர்ந்து அங்கு வந்த இளைஞர் குழுவொன்று ''யாரைக் கேட்டு ஈ.பி.டி.பி கட்சியைச் சேர்ந்தவர்கள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டார்கள்?'' எனக் கேட்டு ரகளையில் ஈடுபட்டது.

இதைத் தொடர்ந்து இருகுழுக்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டது. நான்கு பேர் காயமடைந்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் அங்கு நின்ற பொதுமக்கள் மீது தடியடி நடத்தியதுடன் நான்கு பேரைக் கைது செய்து விசாரணைக்காகக் கொண்டு சென்றனர். (ம-86)

# நிரந்தர அமைதி ஏற்படும் வரை இந்தியாவிலேயே வசிப்போம்

## இலங்கை அகதிகள் தெரிவிப்பு

சென்னை, ஏப்.18

இலங்கையில், நிரந்தர அமைதி ஏற்படும் வரை, இந்தியாவிலேயே வசிப்போம் என்று இலங்கை அகதிகள் தெரிவித்தனர்.

இந்திய அகதிகள் மறுவாழ்வுத் துறை முதன்மைச் செயலர் மற்றும் ஆணையாளர் ஆனந்த், நேற்று முன்தினம் கடலூர் மாவட்டம், விருத்தாசலம், அகதிகள் முகாமில் ஆய்வு நடத்தினர். இலங்கைத் தமிழர்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். அப்போது முகாம்களில் வசிக்கும் அகதிகளிடம் ஏன் ஆஸ்திரேலியா செல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்டார்.

தமிழகத்தில் அளிக்கப்படும் சலுகைகள், சில குடும்பங்களுக்குப் போதுமானதாக இல்லை. ஆனால், ஆஸ்திரேலியா சென்றால் ஒரு வருடம் முகாமில் தங்க வைத்து, பின்னர், 70 ஆயிரம் ரூபா வரை, உதவித்தொகை, குடியுரிமை உள்ளிட்ட சலுகைகளை வழங்குவதால், அங்கு செல்ல சிலர் விரும்புகின்றனர். இங்கு வசிப்பவர்கள் தாய் நாடு செல்ல மட்டுமே விரும்புகிறோம். அங்கு நிரந்தர அமைதி ஏற்படும் வரை இந்தியாவிலேயே வசிப்போம் என அகதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, கும்மிடிப்பூண்டி அகதிகள் முகாமில் உள்ள அகதிகளுக்கு இது வரை உதவித்தொகை வழங்கப்படவில்லை என்று மனு அனுப்பப்பட்டுள்ளது. தாசில்தார் அலுவலகம் அருகே இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம் உள்ளது. இங்கு இலங்கையில் உள்ள யாழ்ப் பாணம், மன்னார், திரு கோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் இருந்து அகதிகளாக வந்த 999 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 438 தமிழர்கள் தங்கி உள்ளனர்.

முகாம் பதிவில் உள்ள அகதிகளுக்கு குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் மாதம் தோறும் 8 ஆம் திகதிக்குள் அரச உதவித் தொகை கும்மிடிப்பூண்டி தாசில்தார் அலுவலகத்தில் உள்ள அதற்கான துறை அதிகாரிகளால் வழங்கப்படுவது வழக்கம்.

இந்த நிலையில் கும்மிடிப்பூண்டி இலங்கை தமிழர் அகதிகள் முகாமில் கடந்த 8 ஆம் திகதிக்குள் வழங்கப்பட வேண்டிய அரச உதவித்தொகை இது நாள் வரை வழங்கப்படவில்லை.

இது குறித்து முகாமைச் சேர்ந்த அகதிகள் சிலர் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியாளருக்கும், அகதிகள் மறுவாழ்வுத்துறை ஆணையாளருக்கும் மனு ஒன்றை அனுப்பி உள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முகாமில் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட திகதியில் தவறாமல் வழங்கப்படும் அரச உதவிப் பணத்தை நம்பியே நாம் வாழ்ந்து வருகிறோம்.

கடந்த 8 ஆம் திகதிக்குள் வழங்கப்பட வேண்டிய அரச உதவித் தொகை, இதுநாள் வரை வழங்கப்படவில்லை. கால தாமதமாகும் அரச உதவித் தொகையை உடன் வழங்கி முகாமில் உள்ள தமிழ் மக்களுக்கு உதவிட வேண்டுகிறோம்- என்றுள்ளது. (வ)

# வர்த்தகருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப். 18

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வர்த்தக நிலையங்கள், உணவு நிலையங்களில் சுகாதாரம் பேணுதல், மற்றும் வியாபார உரிமங்கள் குறித்து இதில் கலந்துரையாடப்படும்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

அனைத்து வர்த்தக நிலைய உரிமையாளர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சுதர்ஜன் தெரிவித்துள்ளார். (ம-7)

# புதிய முறைமையின் கீழ் இனி விவசாயிகளுக்கு ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஏப்.18

விவசாயிகளுக்குப் புதிய முறைமையொன்றின் கீழ் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

விவசாயிகள் ஓய்வூதியக் கொடுப்பனவுக்குப் பங்களிப்புச் செய்துள்ள ஒரு இலட்சத்து 20 ஆயிரம் விவசாயிகளுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறுவதற்கு உரிமையுள்ள போதிலும் 30 ஆயிரம் விவசாயிகளுக்கு இது வரையில் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. மேலும் 90,000 விவசாயிகளுக்கு சிறிது காலம் மட்டுமே கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. பின்னர் இது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விவசாயி ஒருவர் ஆண்டொன்றுக்கு 600 ரூபாவை அங்கத்துவத்துக்கான சந்தாவாகச் செலுத்திய பின்னர் அவருக்கு மாதமொன்றுக்கு ஆயிரம் ரூபா வீதம் ஆண்டு ஒன்றுக்கு 12,000 ரூபாவைக் கொண்ட ஓய்வூதியக் கொடுப்பனவு வழங் கப்பட வேண்டியிருந்தது. இதுவே விவசாயிகள் ஓய்வூதியக் கொடுப்பனவு முறைமை முடங்கிப் போயிருப்பதற்கு முக்கிய காரணமாகும்.

இந்த நிதியத்துக்கு விவசாயிகளிடமிருந்து கிடைக்கும் அங்கத்துவப் பணத்தைக் கொண்டு ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவது சிரம மானது என்பதால் இரண்டு மாற்று யோசனைகளை அரசு ஆராய்ந்து வருவதாகத் தெரிய வந்துள்ளது. அடுத்து வரும் சில வாரங்களுள் அது பற்றிய இறுதித் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படலாம் எனவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-22)

# சேமிப்பில் மக்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ். குடாநாட்டின் தபாலகங்களில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் அதிகமான மக்கள் தமது கொடுக்கல், வாங்கல்கள் மற்றும் புதிய வைப்புக்களில் ஈடுபட்டுள்ளனர்.

தபாலகங்களில் உள்ள இந்த வங்கிக் கிளைகளில் அதிகமான மக்கள் தமது வைப்புக்களை புதிதாக ஆரம்பித்து வருகின்றனர்.

வங்கிகளுக்கு அலையாது அருகில் உள்ள தபாலகங்களில் சுலபமாகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடிவதால் மக்கள் இதில் ஆர்வம் காட்டிவருகின்றனர் என்று சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. (ம-17)


## தவறிவிட்டது

துரைச்சாமி சந்திரதேவி என்பவருடைய தே.அ.அட்டை (517960080V) மற்றும் வங்கிப் புத்தகங்கள் என்பன ஆஸ்பத்திரி வீதியில் 10.04.2013 அன்று தவறிவிட்டன.
கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் 021 221 1008
(36093) (45.6)

## சிறுநீரகம் தேவை

A பொசிட்ரிவ் அல்லது O பொசிட்ரிவ் ரக சிறுநீரகம் உடனடியாகத்தேவைப்படுகிறது. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 8979 968
(28222) (45.6)

## விற்பனைக்கு

DISCOVER 135 NPVP
X X X X இலக்க மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 3716 377
(27632) (45.6)


# மரண அறிவித்தல்

## S.K.ஆறுமுகம் சிறிகாந்தன் (Neuss சிறி)

(Partner of Indo-Ceylon House - Dusseldorf, Germany)



கைதடி, நாவற்குழியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை (Neuss) வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிறிகாந்தன் 15.04.2013 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான S.K.ஆறுமுகம்- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், கதிரித்தம்பி காலஞ்சென்ற இராஜபூபதி தம்பதியரின் அன்பு மருமகனும், பரந்தாமதியின் அன்புக் கணவரும், சுவெர்ணியாவின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற துரைரத்தினம் மற்றும் திருமதி தங்கம்மா சின்னத்தம்பி, காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் திருமதி சாந்தநாயகி தணிகாசலம், திருமதி சரஸ்வதி சுப்ரமணியம், பஞ்சரத்தினம், திருமதி பரமேஸ்வரி வினாயகமூர்த்தி, திருமதி மகேஸ்வரி திருநீலகண்டன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிறிகாந்தா, திருமதி ரூபசோதி சிவநாயகம், திருமதி சிவகௌரி கருணாகரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அனுஷிஜா தில்லைநாதன், அனுராதா பவளகாந்தன், காண்டீபன், கிருஷன், ஷாமிளா ஆகியோரின் சிறிய தந்தையும், வர்சிகாவின் பெரிய தந்தையும், பவளகாந்தன், பவளராணி நல்லநாதன், பவளநாதன், பவளகுமார், பாலகுமரன், ஞானகுமரன், ஞானசக்தி கணேச நாதன், செல்வகுமரன், ஆனந்தசக்தி ஜெனார்த்தனன், சுரேஸ்குமார், சுபோதினி ஸ்ரீகரன், சுகந்தினி பார்த்தீபன், விஜயகுமார் (ஜேர்மனி), வினோதினி செல்வகுமார், விக்னகரன், விஜிந்தினி பிரபாகரன், விஜயரதனி, நிரூஜினி, நிஷாந்தினி, நிர்மலரூபன், பிறேமா, விதுரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.04.2013 திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருமதி பரமேஸ்வரி வினாயகமூர்த்தி
8B, Pereira Lane, Colombo - 06
(0112364167)

திருமதி மகேஸ்வரி திருநீலகண்டன்
Kaithady Navatkuli, Kaithady.
(0773322441)

தகவல்:
சகோதரிமார்.

(36092)(6.11)

# கண்ணீர் அஞ்சலி



## இராமலிங்கம் கந்தையா (ஓய்வுபெற்ற தபாலதிபர்)

ஐயா கடையடி,மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த இ.கந்தையா (இளைப்பாறிய தபால் அதிபர்) 15.04.2013 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

இவர் தனது வாழ்நாளில் திருநீலகண்ட வெள்ளைமாவடி பிள்ளையார் ஆலயத்தின் மூலம் சமூகத்தொண்டுசெய்து அரும்பெரும் தொண்டாற்றினார்.

தண்ணீர் தாங்கி கட்டியும், அறநெறிப் பாடசாலை ஆரம்பித்தவரும், அதற்கு தளபாட வசதிகள் செய்து கொடுத்தவரும், அத்துடன் நூலகத்துக்கு தளபாட வசதிகள் செய்து கொடுத்தவரும், வசதி குறைந்தபிள்ளைகளுக்கு மாதாந்த உதவிப் பணம் கொடுத்தவரும் ஆலயத்தில் நடக்கும் கூட்டுப்பிரார்த்தனை,பஜனை போன்றவற்றிற்கு உபகரணங்கள் வழங்கியவரும், இன்னும் பல உதவிகளை செய்தவரும் ஆவார்.

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர்அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
திரு நீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில்.
தர்மகர்த்தா சபையினர்.

(சி/8394)(5.6)

## மனிதனால் அணியப்பட்ட மிக முக்கியமான ஆடை எது?

மனிதனால் அணியப்பட்ட நான்கு ஆடைகளுள் அதாவது உடம்பு, புலன்கள், சிந்தை, அறிவு என்பவற்றுள் முக்கியமானது அறிவு.

அறிவானது நீர்த்தாங்கி போன்றது. உடம்பும் புலன்களும், சிந்தையும் தாங்கியில் பொருந்தியுள்ள குழிவாய் போன்றது. தாங்கியிலுள்ள நீரளவாகவே இக்குழிவாயிலும் நீர் இறங்கும்.

ஆகவே, அறிவு-புத்திதான் மனிதனால் அணியப்பட்ட ஆடைகளில் மிகப் பிரதானமானதாகும்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

**சாயி சிந்தனை**

# வடக்கு பட்டதாரி அலுவலர்கள் தர உயர்வின்றி அவல நிலையில்

## வடக்கு தமிழ் பேசும் பட்டதாரிகள் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.18

சேவைக்கு வந்து எழு வருடங்கள் முடிவடைந்துள்ளன. அனைத்துப் பரீட்சைகளி லும் சித்தியடைந்துள்ளோம். எனினும் வடமாகாணப் பொதுநிர்வாக அதிகாரிகள் பட்டதாரி அலுவலருக்குப் பதவி உயர்வையோ அன்றி தரத்தையோ இதுவரை உயர்த்த வில்லை.

பட்டதாரிகளின் அவல நிலை தொடர்பாக ஆளுநருக்கோ அன்றி ஆளுநரின் செயலாளருக்கோ இந்த விடயங்களில் பூரணதெளிவில்லை.

தமிழ் பேசும் வடமாகாண பட்டதாரிகள் சங்கம் விடுத்த செய்தி குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2005 இல் பட்டம் பெற்ற பட்டதாரிகளின் இன்றைய அவலநிலை என்ற தொடர்பில் சங்கம் விடுத்த செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அபிவிருத்தி உத்தியோகத்தர் என்ற சேவை குறிப்பை அரசு வெளியிட்டுவிட்டு பின்னர் பட்டதாரிகளுக்கு பொருத்தமானதல்ல என்று தெரிவித்து அந்தச் சேவை பிரமாணக் குறிப்பை கைவிட்டுள்ளது.

இலங்கையின் எந்த மாகாணத்திலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பிரமாணக் குறிப்பு வலுவில் இல்லை.

கிழக்கு மாகாணத்தில் பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பிரமாணக் குறிப்பை நடைமுறைப்படுத்த முனைந்து அனைவரது எதிர்ப்பையும் அரச அதிகாரிகள் சந்தித்துள்ளனர்.

இதனால் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பிரமாணக் குறிப்பை முதலமைச்சரின் கோரிக்கையை தொடர்ந்து கைவிட்டுள்ளனர்.

வடமாகாணத்தில் எழுதுநர்களின் முகாமைத்துவ உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பை மட்டுமே அரச அலுவலர்களும் அதிகாரிகளும் பாடமாக்கி வைத்துள்ளனர்.

பட்டதாரி சேவை பிரமாணக் குறிப்புக்களை முடக்கி வைத்துள்ளனர்.

கிழக்கில் ஆளுநரதும் பொதுச் சேவை ஆணைக் குழுவினதும் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான சேவை பிரமாணக் குறிப்பு மூலம் முதல் நியமனம் பெற்று நான்கு வருடங்களின் வகுப்பு IIக்கு தரம் உயர்த்தி உள்ளனர்.

ஆனால் 2005 நியமனம் பெற்ற எமக்கு 2009 இல் நான்கு வருடங்களின் பின்னர் வகுப்புIIக்கு கிடைத்திருக்க வேண்டும்.

இன்னும் சில ஆண்டு கள் கழிந்த பின்னர் வகுப்பு Iக்கு தரம் உயர்த்தப்படவேண்டும்.

ஆனால் ஆளுநரோ அன்றி ஆளுநரின் செயலாளரோ இந்த விடயங்களை ஆராய்வதில்லை.

இந்த விடயங்களைக் குறித்த காலங்களில் முடித்து பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்தால் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு எப்போவோ எட்டப்பட்டிருக்கும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிந்த நிலையில் கிழக்கு மாகாண அரச பட்டதாரிகள் நன்மை அடைந்தும், வடமாகாண 2005 ஆம் ஆண்டு பட்டதாரிகள் எந்த வித விமோசனமும் அற்ற அவலச் சூழலில் மிக மோசமான நிலையில் கடமைகளை ஆற்றி வருகின்றனர்.-என்றுள்ளது. (ம)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## சேவையில் இருந்து ஓய்வு

தென்மராட்சி, ஏப்.18

தென்மராட்சி கல்வி வலயத்தில் 20 வருடங்களாக ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய த.ஸ்ரீஸ் கந்தராஜா தனது ஆசிரிய சேவையில் 42 வருடங்களைப் பூர்த்தி செய்த நிலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி சேவையிலிருந்து இளைப்பாறவுள்ளார்.

இவரது சேவையைப் பாராட்டி வலய நலன்புரிக் கழகத்தால் எதிர்வரும் 24 ஆம் திகதி சேவை நயப்பு விழாவையும், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை கல்விச் சமூகத்தினர் எதிர்வரும் 26 ஆம் திகதி மணி விழாவையும் நடத்தவுள்ளனர். (ம-9)

## ஆவணங்களைச் சமர்ப்பிக்குக

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு விழா டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. எனவே 2012 ஆம் ஆண்டில் முழுமையாகக் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த தகைமை உடைய மாணவர்கள் அதற்கான ஆவணங்களை நிர்வாகப் பிரிவில் பெற்று மே 3 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம)

## கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், ஏப்.18

மிருசுவில் புனித நிக்கலஸ் தேவாலய சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து பயிலும் 50 சிறுவர்கள் பாடசாலை விடுமுறை காலத்தில் கல்விச் சுற்றுலாவாக நாட்டில் உள்ள முக்கிய இடங்களையும் பார்வையிட்டனர். சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் இந்தக் கல்விச் சுற்றுலா இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

**இதய அஞ்சலி**



யாழ். ஐக்கிய வியாபார சங்கத்தின்
முன்னாள் நிர்வாக இயக்குநர்
**முத்தர் ஆறுமுகம்**
அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**இயக்குநர் சபை**
**யாழ். ஐக்கிய வியாபார சங்கம்,**
**420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
Tel- **021 222 9979**
(36088) (6.11)

**கண்ணீர் அஞ்சலி**



புனித லூர்த்து அன்னை தேவாலயம்
மட்டுவில், சாவகச்சேரி
எமது ஆலய பங்குத் தந்தை அருட்பணி
பிரான்சிஸ் யோசப் அடிகளின்
பாசமிகு தந்தையார்
**ஆறுமுகம் யோசப்**
அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக பிரார்த்திக்கின்றோம்.
புனித லூர்த்து அன்னை ஆலய பங்கு மக்கள், மட்டுவில், சாவகச்சேரி.
(C/9255)(6.7.11)

**கண்ணீர் அஞ்சலி**



புனித லிகோரியார் தேவாலயம்,
சாவகச்சேரி.
எமது ஆலய பங்குத் தந்தை
வண பிரான்சிஸ் யோசப் அடிகளின்
அன்புத் தந்தை
**ஆறுமுகம் யோசப்**
அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக பிரார்த்திக்கின்றோம்.
புனித லிகோரியார் ஆலயப் பங்கு மக்கள், சாவகச்சேரி.
(C/9254)(6.7.11)

**மரண அறிவித்தல்**

**தங்கராசா மங்கையர்க்கரசி**



புங்குடுதீவு மேற்கு, 4 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, விளையாட்டரங்கு வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா மங்கையர்க்கரசி 15.04.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபை-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தங்கராசாவின் அன்பு மனைவியும், தர்மகீர்த்தி, தயாளினி, கவிதா, தனுசா ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகஜோதீஸ்வரன், லதா, சுபாகரன், மதனராஜ் ஆகியோரின் அன்பு மாமியாரும், டினோ ஷன், பவிஜன், பாரதிகா, திலக்ஷி, திஷிகா சுகன்ஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணிக்கு தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விளையாட்டரங்குவீதி,**
**கோப்பாய் தெற்கு, கல்வியங்காடு.**
**077 179 5719**

தகவல்:
**குடும்பத்தினர்.**
(36073)(10.6)

உங்கள் ஆலய திருவிழாக்களில்.... அகில உலகபுகழ்

**ஸ்ரீதேவி வில்லிசைக்குழுவினரை**

அழைத்து மகிழ விரும்புகிறீர்களா? (10-05-2013 வரை)



(C/8397)(10,6,7)

தொடர்பு:

வில்லிசை சக்கரவர்த்தி கலைமாமணி டாக்டர் எஸ்.எஸ்.சர்மா (குருஜி)

சங்கானை, முருகமூர்த்தி கோவிலடி.

075 4076276, 077 7064247



**அறைகள் வாடகைக்கு**

21/2, கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 609 0837

(36097)(3-6)



**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள NP NQ XXXX தொடரிலக்கமுடைய சிவப்பு நிற Discover 125CC Alloy wheel மோட்டார்சைக்கிள் உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு 077 078 5272



**காணி விற்பனைக்கு**

கைதடி சந்தியில் இருந்து 50m தூரத்தில் A9 வீதியில் கிணற்றுடன் பரப்பு ஐந்து குளி 11 விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 519 3493, 077 918 4646





**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

திருமதி

**செந்துஜா பத்மராஜ் (BIT)**

கடந்த 05.04.2013 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் தகவல் தொழில்நுட்பமாணி BIT பட்டம் பெற்றமையையிட்டு பெருமையுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(36104)(6-14-23)

சிவலிங்கம் (அப்பா), சந்திராதேவி (அம்மா), செல்லம்மா (அத்தை), சிரோமிஜா, ஜனனி (தங்கைமார்)

ஆறுகால் மடத்தடி, ஆனைக்கோட்டை.



DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

**சர்வதேச ஆங்கில பரீட்சைகள்**

City & Guilds A1, A2, B1 B2 (ESOL) Diploma International English for Speakers of other Languages

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

(சித்தியடையாவிட்டால் கட்டணம் மீளளிக்கப்படும்)

திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.

யாழில் முதன்முறையாக No.1 பயிற்சி மையம் veta

Spoken English

Veta Fluency Diploma

- அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
- அச்சடித்த பாடப்புத்தகங்கள்.
- மல்ரிமீடியா ஊடான கற்பித்தல்.
- நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்.

IELTS (Duration: 50 hrs with 5 mock exams)

- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
- Depend on individual needs, the student can access other English Modules FREELY.

வார இறுதிநாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 20/4/2013 காலை 9.00 மணி

விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்

**DMI COMPUTER EDUCATION**

யாழ்ப்பாணம்: No.113, கஸ்தூரியார் வீதி, (பஸ்தியன் சந்தி அருகாமை) Tel.: 021-222 4403

நெல்லியடி: M.M.V வீதி. Tel.:021-226 2470

சாவகச்சேரி: கண்டி வீதி. (HNB அருகில்) Tel.:021-227 0775

சுன்னாகம்: கே.கே.எஸ். வீதி, Jet மோட்டோஸ் சந்தி Tel.:021-224 1970


# மரண அறிவித்தல்கள்

## சண்முகசாமி செந்தில்நாதன்



சாத்தா கலட்டி, அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகசாமி செந்தில் நாதன் நேற்றுமுன் தினம்(16.04.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகசாமி- நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாராயணசாமி -சூளியாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகனும், விமலராணியின் அன்புக் கணவரும், கௌரிசங்கர்(சவுதி அரேபியா), சர்மிளா (பிராந்திய கணக்கீட்டுக் காரியாலயம் அஞ்சல் திணைக்களம்), ஜயானி (இலங்கை வங்கி சுன்னாகம்), சுவேதா(1ஆம் வருட மாணவி, நுண்கலைப்பீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசிதனின்(டுபாய்) அன்பு மாமனும், விக்னேஸ்வரி, விமலராணி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறிதரன், முருகதாஸ், தேவதாஸ், கெங்காதேவி, பத்மாதேவி, கபிலதாஸ், குகதாஸ், மணிவண்ணன், பாலகிருஸ்ணன், கிருபாகரன், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(19.04.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாத்தா கலட்டி,
அளவெட்டிவடக்கு.

(36103)17,14,6)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி நமசிவாயம் இராசம்மா

அந்தியுள் மந்திரம் அஞ்சு எழுத்துமே
**ஓம் நமச்சிவாய**
தந்தையார் போயினார் தாயும்
போயினார் தாமும் போவார்
நொந்தவேல் கொண்டு சுற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம்
வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தண் ஆரூர் தொழுது உய்யலா(ம்)
மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நமசிவாயம் இராசம்மா கடந்த 15.04.2013 திங்கட்கிழமை பூதவுடல் நீங்கி புகழ் உடம்பெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாபிள்ளை (K.K.K.)- சுந்தரம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நமசிவாயத்தின் (இளைப்பாறிய பணிப்பாளர், கைத்தொழில் அமைச்சு) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வாலாம்பிகை, தனலட்சுமி, பத்மநாதன், சண்முகநாதன், பேரின்பநாயகம் (K.K.K.P) மற்றும் சிவபாலன் (K.K.K.), சற்குணதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr.தியாகலிங்கம், Dr. சத்தியலிங்கம், Dr. பொன்மலர் ஆகியோரின் அன்புத் தாயும் வாசுகி, இராசேந்திரா ஆகியோரின் மாமியும் இஷானி, மயிலோன், சுருதி, சுரபி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தீக்கடன் எதிர்வரும் 21.04.2013 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும் (NORTH EAST SURREY - CREMATORIUM).

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

218- HAMILTON AVNUE NORTH -CLTEAM
SURREY SM 3& DT U.K.

Dr.தியாகலிங்கம் -07979770005
Dr.சத்தியலிங்கம் - 09492933605
Dr.பொன்மலர் - 07815767683.

தகவல்:
க.க.க.சிவபாலன் (K.K.K.)
50/16, மைனர் வீதி, யாழ்ப்பாணம். 0777866527

(சி/8176) (23-14)

நமசிவாயம் நடுப்பந்தினர்,
பொன்னாவளை வீதி,
களபூமி, காரைநகர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது சுன்னாகம் கிளை நிறுவனத்தில் பணியாற்றிய

## சண்முகசாமி செந்தில்நாதன்

அவர்களின் திடீர் மறைவினால் துயரடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எரிக்கவேஷ் பல், மூக்கு கண்ணாடியகம்
இல.564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூபதி கனகசுந்தரம்



(ஓய்வுபெற்ற அதிபர், வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை)

புலோலி மேற்கு, தம்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பூபதி கனகசுந்தரம் நேற்று (17.04.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கனகசுந்தரத்தின் அன்பு மனைவியும் வாசனின் பாசமுள்ள தாயும் மகேஸ்வரியின் மாமியும் ஹம்சவாசினியின் அருமைப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், தங்கம்மா தம்பதியரின் மகளும் மண்டலேஸ்வரன், மனோறஞ்சிதம், மருக்கொழுந்து, சந்திரலிங்கம், மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2013) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீண்டியார்பத்தை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. 021 226 3228

(8177) (23-14)

தகவல்:
வாசன் (மகன்)

## செல்லப்பா தர்மலிங்கம் (புங்குடுதீவு 7)



புங்குடுதீவு,ஊரதீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா தர்மலிங்கம் 16.04.2013 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சதாசிவம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகராசா, சோமசுந்தரம்,இராசலிங்கம் மற்றும் குணமாலை, அன்னலச்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2013) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புங்குடுதீவு,
7ஆம் வட்டாரம்.

(36100)(5.6)

தகவல்:
வைதேகி (செல்லப்பெண்)

## படைப்பாளிகள் இலக்கிய ஆய்வாளர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப்.18

வடமராட்சி உயில் கலை இலக்கிய சங்க ஏற்பாட்டில் 'படைப் பாளிகள் இலக்கிய ஆர்வலர்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் வதிரி வடக்கு மெ. மி. த.க.பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன் தலைமையில் இடம் பெற்ற இச் சந்திப்பில் வே.தபேந்திரன் எழுதிய 'பூத்திடும் பனந்தோப்பு' நூல் ஆய்வு இடம்பெற்றது. ஆய்வுரையை பூ.நகுலன் நிகழ்த்தினார்.

''பிறமொழி திரைப் படங்களும் தமிழ்த் திரைப்படங்களும்'' என்னும் தலைப்பிலான கருத்துப் பகிர்வில் சோ. கேதாரநாதன் சிறப்புரையாற்றினார். (வ-9)

**TV கள் மலிவு விற்பனை**

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21''- 12000/= முதல், 25''- 13600/=, , 29''- 16000/= Panasonic (பனசோனிக்) 29'' -15000/= DTS அம்பிளிபயர், Box வகைகள், DVD -3000/=
தொடர்பு: 0770440570 (அப்பன்)
சோனி ரேடியோ சென்டர் (கொமர்ஷல் வங்கி அருகில்)
56, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(36061)(5.6)

**வேலை ஆள்கள் தேவை**

எமது ஸ்தாபனத்துக்கு, கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் உடன் தேவை. தங்குமிட வசதியும் மூன்று நேர உணவும் வழங்கப்படும். ஆரம்ப வேதனம் ரூபா 9000/= இருந்து வழங்கப்படும். ஆண்கள் மட்டும் . வயது 18 இருந்து 22 வரை.
தொடர்பு: 11ஏ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 3857

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி, கல்வயல், பெருங்குளம் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் வீட்டுடன் கூடிய 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(சி/8118)(5-6) தொடர்பு: 077 006 8682

## கண்ணீர் அஞ்சலியும், பிரார்த்தனையும்



தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட
**யா/ நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய**
அதிபர் திருமதி வசந்தராணி சுதர்சன்
அவர்களின் அன்புக் கணவர்
**அமிர்தநாதன் சுதர்சன்** அவர்கள்
அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்கும் எம்மோடு பணியாற்றும் அதிபர் வசந்தராணி, பிள்ளைகள்,குடும்பத்தவர்கள் இயல்பு வாழ்க்கையை தொடரும் மனபலத்தைப் பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள் சங்கம்,கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்.

(சி/9253)(5.6.7)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னையா அன்னம்மா
### (அன்னபூரணம்)



மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா அன்னம்மா 16.04.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவர் சின்னையாவின் (ரக்டர்) அன்பு மனைவியும், சுப்பிரமணியம், சின்னராசா, நடராசா, காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தியாகராசா மற்றும் தருமலிங்கம், பொன்னம்மா ஆகியோரின் மைத்துனியும், மல்லிகாதேவி (முகாமையாளர் - கிராமிய வங்கி, சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்), விமலாதேவி, பத்மநாதன் (டென்மார்க்), சறோசா (ஆசிரியை- யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), சிவபாதம் (சுவிஸ்), கமலா (வன்னி ஹார்ட் வெயர், வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும், கிருஷ்ணபிள்ளை (ஆசிரியர் - மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை), காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் சண்முகநாதன் (கிராம அலுவலர் - பிரதேச செயலகம், துணுக்காய்), மகேஸ்வரன் (வன்னி ஹார்ட்வெயர், வவுனியா), சுவர்ணமாலா (டென்மார்க்), சிவமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், மிதுனா (ஆசிரியை - கிளி/கண்ணகை அம்மன் வித்தி.), சிவபாலன் (C.D.O.,கிளிநொச்சி), அகிலன் (MARKET DEVELOPMENT OFFICER - C.I.C. Cropsolutions), நிலக்ஸன் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி), திருகரன் (TECHNICAL OFFICER), கஜன் (DRAUGHTSMAN), துவாரகா (யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட 3 ஆம் வருடம்), சண்சஜன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம்), ஜெனோதன், நிதர்சன், வினோசிகா (மாணவர் - வவுனியா), கீர்த்திகன், பிரவீனன், பிரித்தா (டென்மார்க்), சங்கீதன், ஆர்த்திகா, (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டுவில் வடக்கில், உள்ள அவரின் இல்லத்தில் நாளை (19.04.2013) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் மட்டுவில்வண்ணாத்திப்பாலம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(27837) (45.6)

# மரண அறிவித்தல்

## திருமதி காசிவிஸ்வநாதன் சாந்தலட்சுமி



5 ஆம் வட்டாரம், மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும், 150, நாவலர் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காசிவிஸ்வநாதன் சாந்தலட்சுமி 16.04.2013 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற (முத்துராசா காசிவிஸ்வநாதன் (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், சௌந்தராதேவி (ஜேர்மனி), புவனேஸ்வரி, நந்தகுமாரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், அரசரெட்ணம் (ஜேர்மனி), ராஜன் (கனடா) ஆகியோரின் மாமியும், றொசானி, சியானி, நிசானி, கரிஷ்மா, ஆதிரன், ஆர்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராசலட்சுமி, புஸ்பவதி, பாலச்சந்திரன், சகாதேவன், காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தளையசிங்கம், சண்முகம் மற்றும் நாகேஸ்வரி, இராசலட்சுமி, நல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2013) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.150, நாவலர் வீதி,**
**நாவாந்துறை,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(சி:8396) (10.6)

### இமையாணன் ம.வி.க உதைபந்தாட்ட தொடர்

# இறுதியில் வென்றது வதிரி பொமர்ஸ் அணி

## சாரங்கனின் அதிரடியில் அடங்கியது சிவானந்தா



வடமராட்சி, ஏப்.18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட 11 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சாரங்கனின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது வதிரி பொமர்ஸ் அணி.



ஆட்டநாயகன், தொடர் ஆட்டநாயகன் விருதுகளைப் பெற்றுக் கொண்ட சாரங்கன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் வதிரி பொமர்ஸ் அணியை எதிர்த்து அல்வாய் சிவானந்தா அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியதில் இருந்து இரு அணிகளும் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். முதற் பாதி ஆட்டத்தில் பொமர்ஸ் அணிக்குப் பல மூலை உதைகள் கிடைத்த போதும் அதனைப் பயன்படுத்தத் தவறினர்.

சிவானந்தா அணியினர் தமக்குள் மேற்கொண்ட சிறப்பான பந்துப் பரிமாற்றம் பார்வையாளர்கள் கவனத்தை அவர்கள் பக்கம் திருப்பியது. அவர்களின் சிறப்பான பந்துப்பரிமாற்றத்தால் சிவானந்தா அணியினரே முதற் கோலைப் பெறுவர் என்ற இரசிகர்களின் எதிர்ப் பார்ப்பு பொமர்ஸ் அணியின் தடுப்பாட்டத்தால் நிறைவேறவில்லை. அதனால் முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் பெற முடியவில்லை.

இடைவேளையின் பின்னர் பல வியூகங்களை அமைத்து இரு அணிகளும் களம் இறங்கினர். ஆட்டம் தொடங்கிய முதலாவது நிமிடத்திலேயே பொமர்ஸ் அணி வீரர் சாரங்கன் தட்டிக் கொடுத்த பந்தை வைகுந்தன் கோலாக்கினார்.

அதையடுத்துச் சற்றுத் தடுமாறியது சிவானந்தா அணி. அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் 13 ஆவது நிமிடத்தில் பேற்றுக் கோட்டுக்கு வெளியே இருந்து சாரங்கன் வேகமான உதைத்தபந்து கோலாகியது. முன்னிலை பெற்ற பொமர்ஸ் அணியினர் உற்சாகம் கொண்டனர். சாரங்களின் அதிரடி ஆட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாது திணறினர் சிவானந்தா அணியினர்.

18 ஆவது நிமிடத்தில் சாரங்கன் தனியாக எடுத்த பந்தை கோலாக்க 3:0 என்ற ரீதியில் முன்னிலை பெற்றது பொமர்ஸ் அணி. ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை பொமர்ஸ் அணி வீரர் அனுராகரன் தவறவிட்டார். எனினும் 26 ஆவது நிடமிடத்தில் பந்தை தனது காலில் எடுத்த சாரங்கன் சிவானந்தா அணியின் 3 பின்கள தடுப்பாளரையும் கோல் காப்பாளரையும் ஏமாற்றி மிக இலாவகமாக பந்தைக் கோலாக்கினார்.

ஆட்டம் நிறைவடைவதற்கு 2 நிமிடங்கள் இருக்கும் போது சாரங்கன் தட்டிக் கொடுத்த பந்தை அனுராகரன் கோலாக்க இறுதியில் 5:0 என்ற கோல் கணக்கில் கிண்ணத்தைச் சுவீகரித்தது பொம்மோர்ஸ் அணி.

1 ஆம் இடத்தை பெற்ற பொம்மோர்ஸ் அணிக்கு வெற்றிக் கேடயமும் 15,000 ரூபா பெறுமதியான காசோலையும், 2 ஆம் இடத்தைப் பெற்ற சிவானந்தா அணிக்கு வெற்றிக் கேடயமும் 10 ,000 ரூபா பெறுமதியான காசோலையும் வழங்கப்பட்டன.

ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை பொமர்ஸ் அணி வீரர் சாரங்கன் தட்டிக் கொண்டார். இந்தத் தொடரில் சாரங்கள் 13 கோல்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. நன்னடத்தை வீரராக கொலின்ஸ் அணியின் சுரேஸ், சிறந்த பின்கள வீரராக சிவானந்தா அணியைச் சேர்ந்த காண்டீபன், சிறந்த கோல் காப்பாளராக பொமர்ஸ் அணியை சேர்ந்த நேசுதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன் கலந்து கொண்டிருந்தார்.

(ற-422-400)

### வி.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம்

## காலிறுதியில் யாழ்.பல்கலை

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்திய வி.டி.ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுத் தொடரின் காலிறுதியாட்டத்துக்கு யாழ்.பல்கலைக்கழக அணி தகுதி பெற்றுள்ளது.

கடந்தவாரம் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் அணியை 18 ஓட்டங்களால் வீழ்த்தியே காலிறுதிக்குள் நுழைந்தது யாழ்.பல்கலைக்கழக கிரிக்கெட் அணி

நாணயச் சுழச்சியில் வெற்றி பெற்ற யாழ்.பல்கலைக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி யாழ்.பல்கலைக்கழக அணி 38.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களை பெற்றது.

அதில் ஜெயறூபன் 8 சிக்ஸ்சர்கள் 5 பவுண்டரிகள் அடங்கலாக 94 ஓட்டங்களையும், ஜெயந்திரன் 24 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் திருநெல்வேலி கிரிக்கெட் அணி சார்பில் துஸ்நாந், கோபிநாந் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், லவக்காந் 2 இலக்குகளையும், பிரபு, சுரேத்திரன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்

184 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் அணி 45.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழத்து 165 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் லவக்காந் 23 ஓட்டங்களையும், விது, பிரபு ஆகியோர் தலா 21 ஓட்டங்களையும், கோபி 25 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.பல்கலைக்கழக அணி சார்பாக விதுரன், தரணீதன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும், தசீதன், ஜெயறூபன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ற-23)

### தென்மராட்சி கழகங்களுக்கு இடையேயான மென் பந்து கிரிக்கெட் தொடர்

## மட்டுவில் கண்ணகை சம்பியன்

தென்மராட்சி, ஏப்.18

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடரில் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றுச் சம்பியனானது.



மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மட்டுவில் கண்ணகை அணியும், சங்கத்தானை ஸ்ரீமுருகன் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கண்ணகை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நிர்ணயிக்கப்பட்ட பத்துப் பந்து பரிமாற்றங்களில் ஒன்பது இலக்குகளை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது கண்ணகை அணி. அதில் வாகீசன் 17 ஓட்டங்களையும், கோபினாத் 11 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர்.

52 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சங்கத்தானை ஸ்ரீ முருகன் அணி கண்ணகை அணியின் பந்து வீச்சைச் சமாளிக்க முடியாது தடுமாறியது. அடுத்தடுத்து இலக்குகளை இழந்த ஸ்ரீமுருகன் அணி ஒன்பதாவது பந் துப் பரிமாற்றத்தில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 35 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. (ற-9)

### வவுனியா தெற்கு வலய எல்லே தொடர்

## வவு. இந்துக்கல்லூரி, பூவரசங்குளம் ம.வி. சம்பியனாகத் தெரிவு

வவுனியா, ஏப்.18

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான எல்லே சுற்றுப் போட்டியின் ஆண்கள் பிரிவில் வவுனியா இந்துக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் பூவரசங்குளம் மகாவித்தியாலயமும் வெற்றி பெற்றுச் சம்பியானாகின.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பூவரசங்குளம் மகாவித்தியாலய அணியும், கணேசபுரம் மகாவித்தியாலய அணியும் மோதிக் கொண்டன. அதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பூவரசங்குளம் மகாவித்தியாலய அணி 8 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அதனையடுத்து 9 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி பெறலாம் என்ற நிலையில் களமிறங்கிய கணேஸ்வரா அணி வெறும் 5 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதேபிரிவில் மூன்றாம் இடத்தை இலுப்பைக்கடவை றோ.க.வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா அல்ஹாமியா முஸ்லிம் வித்தியாலயமும், வவுனியா இந்துக் கல்லூரியும் களமிறங்கின. அதில் முதலில் விளையாடிய இந்துக் கல்லூரி நிர்ணயிக்கப்பட்ட பந்துகளில் 3 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதனை அடுத்து களமிறங்கிய அல்ஹாமியா அணி 2 ஓட்டங்களை மட்டும் பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வி அடைந்தது. இதனால் 3:2 என்ற ஓட்ட வித் தியாசத்தில் வவுனியா இந் துக் கல்லூரி சம்பியனாகியது. மூன்றாம் இடத்தினை கணேசபுரம் விநாயகர் வித்தியாலம் பெற்றுக்கொண்டது. (ற-400)

### பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஏப்.18

வலிகாமம் கல்வி வலயத்துக்குட் பட்ட பாடசாலைகளுக்கு இடையே 18, 19 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த சதுரங்கப் போட்டியும், 20, 21 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த எறிபந்து போட்டியும் பிற்போடப்பட்டுள்ளது என்று விளையாட்டு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்

போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ற-422)

### ஸ்கந்தா, மகாஜனா பழைய மாணவர் கிரிக்கெட்

## சம்பியனானது ஸ்கந்தா

வலி.வடக்கு ஏப்.18

மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் அணிக்கும், ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் இடையே இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் அணி வெற்றிபெற்றது.



நாணயச் சுழற்றியில் வெற்றி பெற்ற மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் கைவிட்ட போதிலும் நடுவரிசை வீரர்கள் நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்தனர். அணித்தலைவர் இராஜகாந்தன் மற்றும் ஜெயப்பிரியந்தன் இருவரும் இணைப்பாட்டமாக 95 ஓட்டங்களைப் பெற்று அணியை வலுவான நிலைக்குக் கொண்டு சென்றனர்.

47.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்த மகாஜனக் கல்லூரி அணி 194 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் அணியைச் சேர்ந்த ரி.ராஜ்குமார் 4 இலக்குகளையும், எச்.கிருஷ்ணசந்திரா 3 இலக்குகளையும், கே.பென்ஜோஜ் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

195 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் அணி மிகவும் நிதானமாக துடுப்பெடுத்தாடியது.

08 இலக்குகளை இழந்து 31.5 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் வெற்றி இலக்கை அடைந்தது ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் அணி. அணி சார்பாக எஸ்.யசிதரன் 37, கே.சஞ்சயன் 33, எஸ்.விஜிதரன் 32, எச்.கிருஷ்ணசந்திரா 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த இராஜகாந்தன் 4 இலக்குகளையும், ரவிசங்கர் 2 இலக்குகளையும், எ.துஷ்யந்தன், எம்.கோகுலன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் அணியைச் சோந்த ஆர்.இராஜகாந்தன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் அணியைச் சேர்ந்த எஸ்.யசிதரன் சிறந்த களத் தடுப்பாளராகவும், ரி.இராஜ்குமார் சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-86)

## ஐ.நாவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பெற்ற 'சுதந்திர தமிழீழம் பொதுவாக் கெடுப்பு' என்ற தலைப்பில் வைகோவின் புத்தகம்,ஒளிப்பட குறுந்தட்டு ஆகியவற்றின் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும்போதே பழ.நெடுமாறன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. சபை அமைக்கப்பட்ட போது 1945 ஆம் ஆண்டு ஐ.நா சபையினை உருவாக்கும் முயற்சியில் 49 நாடுகள் தான் அதில் பங்கெடுத்தன.ஆனால் இன்று 191 நாடுகளுக்கு மேல் ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கின்றன. இவை எல்லாம் ஆகாயத்தில் இருந்து விழுந்த நாடுகள் இல்லை. இருந்த நாடுகள் இரண்டாகப் பிரிந்து பலவகையாகப் பிரிந்து இத்தனை நாடுகள் உருவாகி ஐ.நா சபையில் அங்கம் வகிக்கின்றன.இத்தனை நாடுகளின் கொடிகள் ஐ.நா முன்றலில் பறப்பதைப் பார்க்கலாம்.

191 நாடுகள் உருவான பிறகு தமிழீழம் சாத்தியம் இல்லை என்று சொல்பவர்கள் இன்னும் சிறிது காலத்திற்குள் ஐ.நாவின் முன்றலில் தமிழீழக் கொடி பறப்பதைக்காண்பார்கள்-என்றார். (த)

## ஜனநாயக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இவ்வாறான தாக்குதல்களில் ஒருவிதமான நடைமுறை போக்கு இருப்பது தெரிகின்றது. அது போலவே இவ்வாறான தாக்குதல்கள் தண்டனை கிடைக்காது என்ற எண்ணத்தோடும் செய்யப்படுகின்றன. தாங்கள் ஒருபோதும் பிடிபட மாட்டோம் என்ற எண்ணத்தோடுதான் ஆயுதக்குழுக்கள் சுதந்திரமாக திரிகின்றன.

அரச தரப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையும் கண்டனத்துக்குரியது. இந்தத் தாக்குதல்களை சிறிய சம்பவம் போல் குறிப்பிட்டிருப்பது மட்டுமன்றி கடைசியாக நடைபெற்றுள்ள சம்பவம் உள்வீட்டுச் சம்பவம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் கூறியுள்ளார்.

ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கு இந்தத் தாக்குதல் அவர்களின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதாக இருக்கலாம். ஆனால், ஊடகத்துறையின் சுதந்திரத்தையும் சட்ட ஆட்சியையும் மதிக்கின்றதான நாட்டின் முழு ஜனநாயக தோற்றத்தையே களங்கப்படுத்துவதாக இது இருக்கின்றது என்பதை மறைக்க முடியாது-என்றுள்ளது. (த-ப)

## கைதடியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் த.உமா தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் சிறுவர் இல்லத்தின் நிர்வாகிகள், இல்லத்தில் இருந்து வெளியேறிய சிறுமிகள், ஊடகவியலாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்டு விளக்கமளித்த இல்லச் சிறுமிகள் தெரிவித்தவை வருமாறு:-

இல்லத்தின் மேற்பார்வையாளர் மூன்று மாதங்களுக்கு முன்பே பணிக்கு வந்தார். அவர் எம்முடன் உள்ள சக சிறுமி ஒருவரின் கையைப் பிடித்து இழுத்து தகாத முறையில் நடக்க முற்பட்டார். இது தொடர்பில் அந்தச் சிறுமி எம்மிடம் கூறினார். இதன்பின்னர் வேறு சிறுமிகளுடனும் அவர் அவ்வாறு நடக்க முற்பட்டார். இதனையடுத்து கோபமடைந்த நாம் மேற்பார்வையாளருடன் முரண்பட்டோம். இதனையடுத்து மேற்பார்வையாளரின் மனைவி எம்மை தகாத வார்த்தைகளால் திட்டினார்.

இந்நிலையில் இந்தப் பிரச்சினை குறித்து யாரிடம் கூறுவது என்று தெரியாத நிலையில் இல்லத்தில் இருந்து வெளியேறினோம்.-என்றனர்.

இதில் கருத்து வெளியிட்ட நன்னடத்தைத் திணைக்கள ஆணையாளர் உமா,

இல்லத்தில் உள்ள சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படவில்லை. தற்போது இல்லத்தின் நிர்வாகம் மாற்றப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மேற்பார்வையாளர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (த-ரி)

## சிறுவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பில் கேட்கப்பட்டபோதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

துஷ்பிரயோகங்கள் இடம்பெறாமல் தடுப்பது அனைவரது பொறுப்பாகும். சமூகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் இந்தப் பொறுப்புள்ளது.

தனித்து அரச அதிபராலோ, எமது உத்தியோகத்தர்களாலோ அதனைச் செய்ய முடியாது. எமது உத்தியோகத்தர்கள் காலக்கிரமத்தில் சகல சிறுவர் இல்லங்களுக்கும் சென்று நிலைமைகளை ஆராய்கின்றனர். இருப்பினும் இவ்வாறான சம்பவங்களை யாரும் வெளிப்படுத்தாமல் இனங்காண முடியாது.

இனிவரும் காலங்களில் பெண்கள், சிறுவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள இல்லங்கள், அவ்வாறான நிறுவனங்களில் எந்தப் பொறுப்பிலும் ஆண்கள் நியமிக்கப்பட முடியாது. அந்த இடங்களில் ஆண்கள் தேவையற்று உள்நுழையவும் முடியாது.

இந்த நடைமுறை இனிவரும் காலங்களில் இறுக்கமாகப் பின்பற்றப்படும்- என்றார். (த-5)

## பணப்பயிர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெரும்போகப் புகையிலை செய்கையானது கடந்த பெப்ரவரி மாதம் மேற்கொள்ளப்பட்டது. யாழ். மாவட்டம் முழுவதும் சுமார் 100 க்கும் மேற்பட்ட ஹெக்ரெயர் நிலப்பரப்பில் புகையிலை பயிரிடப்பட்டது. கோப்பாய், தெல்லிப்பழை, தீவகம் ஆகிய பிரதேசங்களில் அதிகளவான புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் எதிர்பாராத மழை வீழ்ச்சி, வறட்சி காரணமாகப் புகையிலைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் மழையினால் புகையிலையில் உள்ள பாணி கழுவப்பட்டுள்ளது. இதனால் புகையிலை தரமிழந்து காணப்படுகின்றது.

புகையிலைச் செய்கையினை ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். பெரும்போகத்தில் ஏராளமான நட்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுமார் 1 ஏக்கர் நிலப்பரப்பில் 3 லட்சம் தொடக்கம் 4 லட்சம் ரூபா வரை எதிர்பார்க்கப்பட்ட வருமானம் 50 வீதமாக உற்பத்தி இழக்கப்பட்டுள்ளது.

புகையிலையின் பாணித் தன்மை கழுவப்பட்டுள்ளதால் புகையிலை தரம் குறைந்துள்ளதுடன் விலையிலும் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த காலங்களில் புகையிலைச் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலையும் வருமானத்தையும் ஈட்டியுள்ளது- என்றார். (த-13-17)

## வடக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
யின் அரசியல் சபை உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை தொடர்பாக நாட்டு மக்களுக்குத் தெளிவான புரிந்துணர்வு இல்லை என்பதால், எதிர்வரும் மே மாதம் முதல் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் பிரசாரங்களை எமது கட்சி ஆரம்பிக்கும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர், மாகாணங்களுக்கு அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை ரத்துச் செய்ய வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (த)

## கொக்குத்தொடு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கப்பட்டுள்ளதாக மிதிவெடி செயற்பாட்டலுவலர் வ.முருகதாஸ் தெரிவித்தார்.

''திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்காகவே சர்வதேச மிதிவெடி அகற்றல் நிறுவனங்களை வெளியேற்றி இராணுவத்தினரிடம் அந்தப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன'' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டி உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கொக்குத்தொடுவாய், நாயாறு பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பணிகளை முன்னெடுப்பதற்கு எப்.எஸ்.டி. நிறுவனத்துக்கு இந்த வருட ஆரம்பத்தில் மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தால் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அந்த நிறுவனத்தால் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் திடீரென மேற்படி பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பொறுப்பை தேசிய மிதிவெடிச் செயற்பாட்டு நிறுவனம் இராணுவத்தினரின் மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் பிரிவிடம் ஒப்படைத்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய மிதிவெடி செயற்பாட்டு நிறுவனம், மேற்படி பொறுப்பை இராணுவத்தினருக்கு வழங்குமாறு பணித்ததாலேயே அந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக மிதிவெடி செயற்பாட்டலுவலர் வ. முருகதாஸ் தெரிவித்தார்.

ஏற்கனவே கொக்குத்தொடுவாய், நாயாறு பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் சிங்கள மீனவர்களை குடியேற்றுவதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (த-5)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இடம்பெற்ற குண்டுத்தாக்குதலின் பின்னணியில் ஈரான் செயற்பட்டுள்ளதென்றும் அந்த நாட்டின் ஆட்சியாளர்களின் 'குட்ஸ்' படையினருக்கு ஹிஸ்புல்லா மற்றும் அல்-குவைதா பிரிவுகளுடனும் தொடர்புகள் இருப்பதுடன் அவற்றுக்கு இலங்கையிலும் பங்களாதேஷிலும் தனிநபர்களுடன் தொடர்பு உண்டு என்பதும் தெரிய வந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியின் படி 'குட்ஸ்' படை அணியின் ஆதரவில் இலங்கையிலும் பங்களாதேஷிலும் உள்ள அல்-குவைதா அமைப்புடன் தொடர்புள்ள சன்னி பயங்கரவாதிகளை ஹிஸ்புல்லா இணைத்துக்கொண்டதாகவும் அவர்கள் பின்னர் பயங்கரவாதச் செயற்பாடுகளில் இறங்குவதற்காக அமெரிக்காவுக்குள் நுழைந்துள்ளார்கள் என்றும் பொஸ்ரன் குண்டுத் தாக்குதலில் பயன்பட்டதாகக் கருதப்படும் 'பிரஷர் குக்கர்' குண்டுகளைத் தயாரிப்பதற்கான செயல்முறைகள் அல்-குவைதா சஞ்சிகையில் மிகவிவரமாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து 5 மாலைதீவு வாசிகள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் அல்-குவைதாவுடன் தொடர்புடையவர்கள் என்று உறுதிப்படுத்தப்படாத செய்திகள் கூறின. ஆனால் அல்-குவைதா மையங்கள் ஏதும் இலங்கையில் இல்லை, பயிற்சிகள் ஏதும் நடைபெறவில்லை என்று இலங்கை அரசு அப்போது மறுத்திருந்தது.

2001 ஆம் ஆண்டு 'ரைம்ஸ் ஒப் இன்டியா' பத்திரிகை வெளியிட்ட ஒரு செய்தியில் அல்-குவைதாவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகவும் இஸ்லாமிய அமைப்பொன்று சமய சார்பற்ற இன்னொரு அமைப்புடன் தொடர்பு கொண்டிருப்பது இதுவே முதல் தடவை என்றும் குறிப்பிட்டிருந்தது. (த-ப)

## இரத்தினபுரியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
படவில்லை என்று அந்த மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அலுபொல தோட்டப் பிரிவில் வெல்லவெல பகுதியில் வசிக்கும் தமிழ் இளைஞர்கள் சிலர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அருகிலுள்ள குளுபாநிலகம தோட்டத்துக்கு பெரும்பான்மையினத்தவர்களின் இசை நிகழ்ச்சி பார்க்கச் சென்றுள்ளனர்.

அந்த நேரத்தில் அங்கு போதையில் நின்ற பெரும்பான்மையின இளைஞர்கள் பழைய சம்பவம் ஒன்றைக் காரணமாக வைத்து தமிழ் இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தமிழ் இளைஞர்களை கலைத்துக் கலைத்து கத்தியால் வெட்டியுள்ளனர்.

சிங்களக் குண்டர்களின் தாக்குதலில் சுப்பிரமணியம் தமிழ்ச்செல்வன் (வயது-23), தங்கவேல் விஜயகுமார் (வயது-24) ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் தமிழ்ச்செல்வன் மாத்திரம் பலாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றவர் தாக்குதல் அச்சம் காரணமாக வைத்தியசாலைக்குச் செல்லவில்லை.

இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்த நிலையில் நேற்று புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில் பெரும்பான்மையினக் குண்டர்கள் 30 பேர் வரையில் அலுபொல தோட்டத்துக்குள் புகுந்து தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். பதிலுக்குத் தமிழ் மக்களும் திருப்பித் தாக்கியுள்ளனர்.

இதன்பின்னர் நேற்றுக் காலை நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதும் அந்தப் பகுதிகளில் தொடர்ந்தும் பதற்றமான சூழ்நிலையே நிலவுகின்றது. பொலிஸார் பதற்றத்தைத் தணிக்கவோ, இனிமேல் தாக்குதல் இடம்பெறாது தடுக்கவோ உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை- மேற்படி அலுபொல தோட்டம் கடந்த 1997ஆம் ஆண்டு பெரும்பான்மையினத்தவர்களால் கொளுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)


## மரண அறிவித்தல்



### திருமதி சிவபாக்கியம் நவரத்தினராசா

சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சிவபாக்கியம் நவரத்தினராசா அவர்கள் நேற்று (17.04.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் -செல்லம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை- செல்லம்மா தம்பதியரின் மருமகளும், இராஜேஸ்வரி (கணக்காளர், பிரதேச செயலகம்- சங்கானை), பவளராணி (டாக்டர், அரச ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி), சண்முகராசா (முறைசாரா கல்வி திட்டமிடல் அலுவலகர் வலயக் கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்), இந்திராதேவி (முன்பள்ளி ஆசிரியை, மார்க்கண்டுசுவாமி முன்பள்ளி, பிரான்பற்று) ஆகியோரின் பாசமிகு தாயும், உதயகுமார், செல்வராசா, குமாரசாமி, சிவசங்கரி ஆகியோரின் அன்பு மாமியும், மார்க்கண்டு (கனடா), குமாரசாமி (கனடா) காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் நாகம்மா (கனடா), தவமலர், காலஞ்சென்ற நவரத்தினராசா மற்றும் தங்கரத்தினம், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் பாலசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், செந்தில்குமரன், கவிதரன், விதுஷா, செந்தூரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2013) வியாழக்கிழமை இந்தியா (சென்னை) யில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு. (36106) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### மாதவர் அரிச்சந்திரன்

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாதவர் அரிச்சந்திரன் நேற்று (17.04.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாதவர்- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் (ஆசிரியர்) மற்றும் மதியாபரணம், கண்மணி ஆகியோரின் சகோதரனும் கமலாதேவியின் அன்புக் கணவரும், குகதாசன் (ஆசிரியர், திருவடிநிலை தமிழ் கலவன் பாடசாலை), முருகதாசன் (ஆசிரியர் மல்லாவி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சோபனா (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி) , கலையரசி ஆகியோரின் மாமனும், சாதனா, தமிழ்நிலா, பிரியங்கன், பிருந்தாபன் ஆகியோரின் பாசமிகு பேரனும், குகலிங்கம், ரேவதி, பிறேமாவதி, நவரட்ணம், காலஞ்சென்ற ஜெயச்சந்திரன் மற்றும் ஜெயநேசன், ஜெயலிங்கம், ஜெயக்குமார், ஜெயமூர்த்தி, சயந்தா, ஜெகதா, தயாபரன் ஆகியோரின் சித்தப்பாவும், கனகமணி, திலகவதி, காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் துரைசிங்கம், மகாதேவன், கேதீஸ்வரி, பூரணி, காந்தினி, கோமதி, அருள்லிங்கம், தாரணி, காலஞ்சென்ற தயாலிங்கம் மற்றும் சுகந்தலிங்கம், ரவிக்குமார், சஞ்ஜீவா, பவானி, அபிஷாயினி, குகலிங்கம், விஜிதா, இன்பராஜ் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, விஸ்வலிங்கம் மற்றும் வாமதேவன், துரைலிங்கம், அமிர்தலிங்கம், முத்துலிங்கம், மதியாபரணம், செல்வமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பண்ணாகம், சுழிபுரம் 0770857515. (சி/8178) (9-14) அ.குகதாசன் (ஆசிரியர்), அ.முருகதாசன் (ஆசிரியர்)

# பெங்களூர் 'த்ரில்' வெற்றி

## கடைசிவரை விறுவிறுப்பு; சுப்பர் ஓவரில் முடிவு

ஆறாவது ஐ.பி.எல். தொடரின் 21ஆவது ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் 'சுப்பர் ஓவர்' முறையில் டெல்லி அணியை வீழ்த்தி வெற்றிபெற்றது.

பெங்களூர் எம்.சின்ன சுவாமி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி டேர் டெவில்ஸ் அணி 20 ப்ந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது இலக்குக்காக 5.4 பந்துப்பரிமாற்றங்களில் 43 ஓட்டங்களைப் பகிர்ந்த டெல்லி அணி, அதன் பின்னர் இலக்குகளை தொடர்ச்சியாக இழந்து தடுமாறியது. எனினும் இறுதி 2 பந்துப் பரிமாற்றங்களிலும் பின்வரிசை வீரர்கள்30 ஓட்டங்கள் குவித்ததால் அந்த அணி கௌரவமான இலக்கை எட்டமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி சார்பாக கேதார் யாதவ் 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்த்தன 31 பந்துகளில் 28 ஓட்டங்களையும், வீரேந்தர் சேவாக் 23 பந்துகளில் 25 ஓட்டங்களையும், இர்பான் பதான் 8 பந்துகளில் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் றோயல் சலஞ்சர்ஸ் அணி சார்பாக ஜெய்தேவ் உனத்கட் 2 இலக்குகளையும், வினய் குமார், அன்ட்ரூ மக்டொனால்ட் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

152 ஓட்டங்கள் என்ற இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களுக்கு 7 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற, ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. துடுப்பாட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பாக விராட் கோஹ்லி 50 பந்துகளில் 65 ஓட்டங்களையும், ஏ.பி.டி.வில்லியர்ஸ் 32 பந்துகளில் 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி சார்பாக உமேஷ் யாதவ் 2 இலக்குகளையும், ஆஷிஷ் நெஹ்ரா, மோர்னி மோர்கல், சபாஷ் நதீம் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



ஆட்டம் சமநிலையில் முடிவுற்றதால் 'சுப்பர் ஓவர்' முறையில் போட்டியின் முடிவு தீர்மானிக்கப்பட்டது.

சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணியின் ஏ.பி.டி. வில்லியர்ஸ் 4 பந்துகளில் பெற்றுக் கொண்ட 13 ஓட்டங்களின்துணையோடு அந்த அணி 15 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்தாடிய டெல்லி டேர்டெவில்ஸ் அணி 10 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதால்பெங்களூர் அணி 'த்ரில்' வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகனாக ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் விராட்கோஹ்லி தெரிவானார். (ங)

# பந்தாடியது பஞ்சாப் அணி கொல்கத்தா படுதோல்வி



கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 4 ஓட்டங்களால் வீழ்த்தி 6 ஆவது ஐ.பி.எல் தொடரில் இரண்டாவது வெற்றியைப் பதிவுசெய்தது கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி.

பஞ்சாப் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பஞ்சாப் அணி சார்பாக மன்பிறீற் கோனி 18 பந்துகளில் 42 ஓட்டங்களையும், மன்டீப் சிங் 30 பந்துகளில் 41 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் 17 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக 'ஹட்ரிக்' சாதனை படைத்த சுனில் நரைன் 33 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஜக்ஸ் கலிஸ் 24 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சச்சித்திர சேனநாயக்க 2 இலக்குகளையும் கைப்பற்றினர். 158 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களுக்கு 9 இலக்குகளை இழந்து 153 ஓட்டங்களைளையே பெற்றதால் இறுதியில் 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

கௌதம் கம்பீர் 39 பந்துகளில் 60 ஓட்டங்களையும், இயன் மோர்கன் 38 பந்துகளில் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

அஷார் மஹ்மூட் 21 பந்துகளில் 3 இலக்குகளையும், பிரவீன் குமார், பர்வீந்தர் அவானா ஆகியோர் தலா 2 இலக்குகளையும், மன்பிறீற் கோனி ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மன்பிறீற் கோனி தெரிவானார்.

(ங)

# நீயும் நானுமா?



மான்டி-கார்லோ ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ்-ஒஸ்திரியாவின் ஜார்ஜன் மெல்சர் இணை வெற்றி பெற்றுள்ளது.

இந்த இணை அடுத்த சுற்றில் இந்தியாவின் மகேஷ் பூபதி-ரோகன் போபண்ணா இணையைச் சந்திக்கவுள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வரை லியாண்டர் பயஸும், மகேஷ் பூபதியும் இணைந்து வெற்றிநாயகர்களாக வலம்வந்தார்கள். இப்போது பிரிந்து சென்ற இவர்கள், எதிரெதிர்த் துருவங்களாக மோதவுள்ளார்கள். (ங)

**பணியாளர் தேவை**

வவுனியாவில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு DTP தொடர்பான கணினி அறிவுடைய ஒருவர் தேவை.

தொடர்பு:077 612 0931

(26223)(6,11)

**வீடு வாடகைக்கு**

யாழ்.நகர் மாநகரசபை எல்லைக்குள், நகர் மத்தியில் 4 அறைகளுடன் சகல வசதிகளுடைய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:077 516 0291

(36094)(6,11)

**மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

Welders 20 பேர் உடனடியாக தேவை. ஒட்டுனர் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களா? நீங்கள் அப்படி என்றால் ஒட்டுனர் துறையில் அதி உயர் சம்பளத்துடன் மிகக் குறைந்த கட்டணத்தில் பயணமாகத் தயாராகுங்கள். 3 வருட ஒப்பந்தம், தங்குமிடம், மருத்துவம் இலவசம். உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் Lanka voice நிறுவனத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். (26221) (23-16,14)

மேலதிக விவரங்களுக்கு:- 0776439204

**தொழில் முயற்சி**

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க வட பகுதி இளைஞர், யுவதிகளை குறுகிய காலத்தில் தலைமைத்துவத்துடன் கூடிய ஆளுமையுடையவர்களாக தன்னை சமூகத்தில் அடையாளப்படுத்தி, புதிய யுகத்தை நோக்கிச் செல்வதற்கான ஊதியத்தினூடான ஊக்குவிப்புக்களம்.

தகைமைகள்

★ O/L, A/L பரீட்சைக்குத் தோற்றியவர்கள்
★ வயதெல்லை 16-30
★ உணவு, தங்குமிட வசதிகளும் செய்து தரப்படும்.

தொடர்பு: 077 007 7265, 021 320 7649

TAST OF JAFFNA

101, பிரதான வீதி, யாழ்ப்பாணம், நீதிமன்ற கட்டடம் அருகில்.

(C/8395)(6.11)

**உடனடி வேலைவாய்ப்பு**

மத்திய கிழக்கு மற்றும் செல்வந்த நாடுகளில் பெண்களுக்கும், திருமணமான தம்பதியினர்களுக்கும் (Cuples) உடனடி வேலை வாய்ப்பு. செல்வந்த நாடுகளில் பாதுகாப்பான செல்வந்த வீடுகளில் தொழிலொன்றை பெற்றுக்கொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் விண்ணப்பங்கள் கீழ்க்காணும் முகவியில் எதிர்வரும் 21.04.2013 காலை 9.00 மணிமுதல் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களுக்கு

LANKA VOICE 0777950952

**வரலாறு - 2015**

ஆசிரியர் K.சுதன்

B.A (HONS) History (SPL) P.G.D.E

* 2012 இல் அதிக மாணவர்களை A பெறுபேற்றை பெற வைத்த ஆசான் -36 பேர்
* மாவட்ட உயர் நிலைக்கு வழி காட்டும் ஆசான் - 2010 (2ஆம் நிலை), 2012 (2ஆம் நிலை)
* ஐரோப்பிய, இந்திய, உலக வரலாறு பாடங்களில் உயர்பெறுபேறு பெற வழிகாட்டும் ஆசான்
* பாடத்திட்டத்தைப் பூரணப்படுத்தி பரீட்சைக்கு தயார் செய்யும் ஆசான்

ஆசிரியர் வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்

பொருளியற் கல்லூரி யாழ். | பொருளியற் கல்லூரி இணுவில். | பாரதி சித்தன்கேணி | பிற்ஸ்மன் மானிப்பாய்

புதிய பிரிவு ஆரம்பம் - 20.04.2013

**கனடாவில் படிக்க உழைக்க**

அரிய வாய்ப்பு!

மிகமிகக் குறைந்த கட்டணத்தில் ஆலோசனை.

25/04/2013 வரை மட்டுமே இச்சலுகை.

தவறவிடாதீர்கள்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.